

சுழிபுரம் மேற்கினை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட

# அமரர் திரு. கதிரவேலு முத்தையா

அவர்களின்

# நினைவு மலர்

04.11.2020

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized
noolahan

உ

கணபதி துணை

சிவமயம்



சுழிபுரம் மேற்கினை பிறப்பிடமாகவும்
வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்


# கதிரவேலு முத்தையா

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தண்டாமரை முகமும் மலர்க்கண்களும் தன் கரத்தே
செண்டாயுதமும் தரித்து எமையாளும் சிவக்கொழுந்தைக்
கண்டேன் இரண்டு கரங்கூப்பினேன் வினைக் கட்டறுத்துக்
கொண்டேன் அழியாப் பெருவாழ்வு தான்வந்து கூடியதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"



மண்ணில்
12.10.1941

விண்ணில்
05.10.2020

அணைந்தும் அணையாத தீபம்

அமரர்

# கதிரவேலு முத்தையா

அவர்கள்

## திதி வெண்பா

சார்வரிப் புரட்டாதித் தேய்பிறையும் சதுர்த்தியும்
கார்த்திகை நாள்த் திங்களும் சேர்ந்திருக்கும் - பார் போற்றும்
நித்திய பிரதோசங் கூடிவரப் பெற்றார்
முத்தையா சிவனடிப் பேறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

மலராய் நறுமணமாய்
நல்லாரின் சொல்லாய்
வல்லோருக்கும் வள்ளராய்
கலங்கரை விளக்கமாய்
வளம்பெற்றே நீர் வாழ்ந்தீர்
வையத்தில் உம் புகழில்
நிழலாக நாம் வாழ்ந்தோம்
நற்பெயரும் தந்தீர்
நலமுடனே நாம் வாழ
இப்போதும் உம் நினைவாய்
இயம்புகின்றோம் இன் நூலை
ஏற்றிடுவீர் எந் நாளும்
உம் பெயரால் நாம் வாழ

**மனைவி, மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்**

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும்பெருக்கும் உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர்தம் கை .

## திருக்கோவில்களில் ஓதப்படும் பஞ்சபுராணம்

### தேவாரம்

குனித்த புருவமுங் கொவ்வைச்செவ் வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போன் மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்த முடைய வெடுத்தபொற் பாதமுங் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவ தேயிந்த மாநிலத்தே.

### திருவாசகம்

தந்ததுன் றன்னைக் கொண்டதென் றன்னைச்
சங்கரா ஆர்கொலோ சதுரர்
அந்தமொன் றில்லா ஆனந்தம் பெற்றேன்
யாதுநீ பெற்றதொன் றென்பால்
சிந்தையே கோயில் கொண்டஎம் பெருமான்
திருப்பெருந் துறையுறை சிவனே
எந்தையே ஈசா உடலிடங் கொண்டாய்
யான்இதற் கிலன்ஓர்கைம் மாறே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### திருவிசைப்பா

நையாத மனத்தினனை
நைவிப்பான் இத்தெருவே
ஐயாநீ உலாப்போந்த
அன்றுமுதல் இன்றுவரை
கையாரத் தொழுதருவி
கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ அருள் கோடைத்
திரைலோக்கிய சுந்தரனே

### திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை வளர்கநம் பத்தர்கள்
வஞ்சகர் போயகலப்
பொன்னின்செய் மண்டபத் துள்ளே புகுந்து
புவனியெல் லாம்விளங்க
அன்ன நடைமட வாள்உமை கோன்அடி
யோமுக் கருள்புரிந்து
பின்னைப் பிறவி யறுக்க நெறிதந்த பித்தற்குப்
பல்லாண்டு கூறுதுமே

### பெரியபுராணம்

மற்றுநீ வன்மை பேசி
வன்றொண்டன் என்னும் நாமம்
பெற்றனை நமக்கு மன்பிற்
பெருகிய சிறப்பின் மிக்க
அற்சனை பாட்டே யாகும்
ஆதலான் மண்மேல் நம்மைச்
சொற்றமிழ் பாடு கென்றார்
தூமறை பாடும் வாயார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருப்புகழ்**

இசைந்த ஏறுங் கரியுரி போர்வையும் ...... எழில்நீறும்
இலங்கு நூலும் புலியத ளாடையு ...... மழுமானும்
அசைந்த தோடுஞ் சிரமணி மாலையு ...... முடிமீதே
அணிந்த ஈசன் பரிவுடன் மேவிய ...... குருநாதா
உசந்த சூரன் கிளையுடன் வேரற ...... முனிவோனே
உகந்த பாசங் கயிறொடு தூதுவர் ...... நலியாதே
அசந்த போதென் துயர்கெட மாமயில் ...... வரவேணும்
அமைந்த வேலும் புயமிசை மேவிய ...... பெருமாளே.

**வாழ்த்து – கந்த புராணம்**

வான்முகில் வழாது பெய்க
மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க
குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க
நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி
விளங்குக உலக மெல்லாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பன்னிரு திருமுறை

### சம்பந்தர் தேவாரம் – 1ம் திருமுறை

அங்கமும் வேதமும் ஓதும்நாவர் அந்தணர் நாளும் அடிபரவ
மங்குன் மதிதவழ் மாடவீதி மருகல் நிலாவிய மைந்தசொல்லாய்
செங்கய லார்புனற் செல்வமல்கு சீர்கொள்செங் காட்டங் குடியதனுள்
கங்குல் விளங்கெரி யேந்தியாடுங் கணபதி யீச்சரங் காமுறவே

### சம்பந்தர் தேவாரம் – 2ம் திருமுறை

பண்டு நால்வருக் கறமுரைத் தருளிப்பல் லுலகினில் உயிர்வாழ்க்கை
கண்ட நாதனார் கடலிடங் கைதொழக் காதலித் துறைகோயில்
வண்டு பண்செயு மாமலர்ப் பொழின்மஞ்ஞை நடமிடு மாதோட்டம்
தொண்டர் நாடொறுந் துதிசெய வருள்செய்கே தீச்சர மதுதானே.

### சம்பந்தர் தேவாரம் – 3ம் திருமுறை

உற்றுமை சேர்வது மெய்யினையே உணர்வது நின்னருண் மெய்யினையே
கற்றவர் காய்வது காமனையே கனல்விழி காய்வது காமனையே
அற்ற மறைப்பது முன்பணியே அமரர்கள் செய்வது முன்பணியே
பெற்று முகந்தது கந்தனையே பிரம புரத்தை யுகந்தனையே.

### அப்பர் தேவாரம் – 4ம் திருமுறை

பார்த்தனுக் கருளும் வைத்தார் பாம்பரை யாட வைத்தார்
சாத்தனை மகனா வைத்தார் சாமுண்டி சாம வேதம்
கூத்தொடும் பாட வைத்தார் கோளரா மதிய நல்ல
தீர்த்தமுஞ் சடையில் வைத்தார் திருப்பயற் றூர னாரே.

### அப்பர் தேவாரம் – 5ம் திருமுறை

அட்ட மூர்த்திய தாகிய அப்பரோ
துட்டர் வான்புரஞ் சுட்ட சுவண்டரோ
பட்டங் கட்டிய சென்னிப் பரமரோ
சட்ட விக்கத வந்திறப் பிம்மினே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அப்பர் தேவாரம் – 6ம் திருமுறை**

எண்ணுகேன் என்சொல்லி எண்ணு கேனோ
எம்பெருமான் திருவடியே எண்ணி னல்லால்
கண்ணிலேன் மற்றோர் களைகண் இல்லேன்
கழலடியே கைதொழுது காணின் அல்லால்
ஒண்ணுளே ஒன்பது வாசல் வைத்தாய்
ஒக்க அடைக்கும்போ துணர மாட்டேன்
புண்ணியா உன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே

**சுந்தரர் தேவாரம் – 7ம் திருமுறை**

பத்தராய்ப் பணிவார்கள் எல்லார்க்கும் அடியேன்
பரமனையே பாடுவார் அடியார்க்கும் அடியேன்
சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கும் அடியேன்
திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்
முப்போதுந் திருமேனி தீண்டுவார்க் கடியேன்
முழுநீறு பூசிய முனிவர்க்கும் அடியேன்
அப்பாலும் அடிச்சார்ந்தார் அடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே

**திருவாசகம் – 8ம் திருமுறை**

பண்சுமந்த பாடற் பரிசு படைத்தருளும்
பெண்சுமந்த பாகத்தன் பெம்மான் பெருந்துறையான்
விண்சுமந்த கீர்த்தி வியன்மண் டலத்தீசன்
கண்சுமந்த நெற்றிக் கடவுள் கலிமதுரை
மண்சுமந்து கூலிகொண்டு அக்கோவால் மொத்துண்டு
புண்சுமந்த பொன்மேனி பாடுதுங்காண் அம்மானாய்

**திருவிசைப்பா – 9ம் திருமுறை**

கோலமே மேலை வானவர் கோவே
குணங்குறி இறந்ததோர் குணமே
காலமே கங்கை நாயகா எங்கள்
காலகாலா காம நாசா
ஆலமே அமுதுண் டம்பலம் செம்பொற்
கோயில்கொண் டாடவல் லானே
ஞாலமே தமியேன் நற்றவத் தாயைத்
தொண்டனேன் நணுகுமா நணுகே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருப்பல்லாண்டு – 9ம் திருமுறை**

சொல்லாண்ட சுருதிப்பொருள் சோதித்த
　　தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண் டிற்சிதை யும்சில தேவர்
　　சிறுநெறி சேராமே
வில்லாண்டகன கத்திரள் மேரு
　　விடங்கன் விடைப்பாகன்
பல்லாண் டென்னும் பதங்கடந் தானுக்கே
　　பல்லாண்டு கூறுதுமே

**திருமந்திரம் – 10ம் திருமுறை**

சிவசிவ என்கிலர் தீவினை யாளர்
சிவசிவ என்றிடத் தீவினை மாளும்
சிவசிவ என்றிடத் தேவரு மாவர்
சிவசிவ என்னச் சிவகதி தானே .

**காரைக்கால் அம்மையார் – 11ம் திருமுறை**

இடர்களையா ரேனும் எமக்கிரங்கா ரேனும்
படரும் நெறிபணியா ரேனும் - சுடருருவில்
என்பறாக் கோலத் தெரியாடும் எம்மானார்க்
கன்பறா தென்நெஞ் சவர்க்கு

**பெரியபுராணம் – 12ம் திருமுறை**

இறவாத இன்ப அன்பு
　　வேண்டிப்பின் வேண்டு கின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும்
　　பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும்
　　வேண்டும்நான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும் போதுன்
　　அடியின்கீழ் இருக்க என்றார்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலவிசை பாடப்
பொன்னரை ஞாணும் பூந்துகில் ஆடையும்
வன்னமருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும் (05)
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும் (10)
இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதம் கடந்த துரியமெய்ஞ் ஞான
அற்புதம் ஈன்ற கற்பகக் களிறே!
முப்பழ நுகரும் மூஷிக வாகன! (15)
இப்பொழு தென்னை ஆட்கொள வேண்டித்
தாயா யெனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்திய முதலைந் தெழுத்தும் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளந்தனில் புகுந்து (20)
குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தால் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டியென் செவியில் (25)
தெவிட்டாத ஞானத் தெளிவையும் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளிக்
கருவிக ளொடுங்கும் கருத்தினை யறிவித்(து)
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து (30)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலமொரு நான்கும் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்கம் அறுத்தே
ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதும் காட்டி
ஆறா தாரத்(து) அங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை யறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்
கடையிற் சுழுமுனைக் கபாலமும் காட்டி
மூன்றுமண் டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்
குண்டலி யதனிற் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்பும் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையும் கூறி
இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடல்சக் கரத்தின் உறுப்பையும் காட்டிச்
சண்முக தூலமும் சதுர்முக சூக்கமும்
எண் முகமாக இனிதெனக் கருளிப்
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரிசனப் படுத்திக்
கருத்தினில் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி யினிதெனக் கருளி
என்னை யறிவித்(து) எனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே யென்றன் சிந்தை தெளிவித்(து)
இருள்வெளி யிரண்டுக்(கு) ஒன்றிடம் என்ன
அருள்தரும் ஆனந்தத்(து) அழுத்தியென் செவியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லை யில்லா ஆனந் தம்அளித்(து)
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தின் உள்ளே சதாசிவம் காட்டிச்
சித்தத்தின் உள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவிற்(கு) அணுவாய் அப்பாலுக்(கு) அப்பாலாய்க் (65)
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறி வித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே! (72)

**நம்பியாண்டார் நம்பிகள் – திருநாரையூர் விநாயகர் இரட்டை மணிமாலை**

நாரணன் முன்பணிந் தேத்தநின்
றெல்லை நடாவியவத்
தேரண வும்திரு நாரையூர்
மன்னு சிவன்மகனே
காரண னேயெம் கணபதி
யேநற் கரிவதனா
ஆரண நுண்பொரு ளேயென்
பவர்க்கில்லை அல்லல்களே

மருப்பையொரு கைக்கொண்டு நாரையூர் மன்னும்
பொருப்பையடி போற்றத் துணிந்தால் - நெருப்பை
அருந்தவெண்ணு கின்றவெறும் பன்றே அவரை
வருந்தவெண்ணு கின்ற மலம்

அல்லல் களைந்தான்தன் அம்பொன் உலகத்தின்
எல்லை புகுவிப்பான் ஈண்டுழவர் - நெல்லல்களை
செங்கழுநீர் கட்கும் திருநாரை யூர்ச்சிவன்சேய்
கொங்கெழுதார் ஐங்கரத்த கோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கபிலதேவ நாயனார் – மூத்த நாயனார் திரு இரட்டை மணிமாலை**

வேட்கை வினைமுடித்து மெய்யடியார்க் கின்பஞ்செய்து
ஆட்கொண் டருளும் அரன்சேயை வாட்கதிர்கொள்
காந்தார, மார்பிற் கமழ்தார்க் கணபதியை
வேந்தா உடைத்தமரர் விண்.

## சிவ தோத்திரங்கள்

**குருவருள்:** ஞானசம்பந்தர் அருளிய சித்திரக் கவிகளுள் ஒன்றாகிய திருவெழுகூற்றிருக்கை ஒன்றை மட்டுமே பாராயணம் புரிவோர்,அவர் அருளிய தேவாரத் திருப்பதிகங்கள் அனைத்தையும் ஓதிய பயனைப் பெறுவர் என்பது மரபு. சிவபாதஇருதயர், திருஞானசம்பந்தர் ஓதிவரும் திருப்பதிகங்களை நாள்தோறும் பாராயணம் செய்வதை நியமமாகக் கொண்டிருந்தார். பதிகம் பெருகப் பெருகப் பாராயணம் செய்வதில் தம் தந்தையார் இடர்ப்படுதலைக் கண்ட திருஞானசம்பந்தர் இத்திருவெழுகூற்றிருக்கையை அருளி இதனை ஓதி வந்தாலே அனைத்துத் திருப்பதிகங்களையும் ஓதிய பயனைப் பெறலாம் எனக் கூறினார் என்பர்.

திருச்சிற்றம்பலம்
ஓருரு வாயினை மானாங் காரத்
தீரியல் பாயொரு விண்முதல் பூதலம்
ஒன்றிய விருசுட ரும்பர்கள் பிறவும்
படைத்தளித் தழிப்பமும் மூர்த்திக ளாயினை
இருவரோ டொருவ னாகி நின்றனை
ஓரா னீழ லொண்கழ லிரண்டும்
முப்பொழு தேத்திய நால்வர்க் கொளிநெறி
காட்டினை நாட்ட மூன்றாகக் கோட்டினை
இருநதி யரவமோ டொருமதி சூடினை
ஒருதா ளீரயின் மூவிலைச் சூலம்
நாற்கான் மான்மறி யைந்தலை யரவம்
ஏந்தினை காய்ந்த நால்வாய் மும்மதத்
திருகோட் டொருகரி யீடழித் துரித்தனை
ஒருதனு விருகால் வளைய வாங்கி
முப்புரத் தோடு நானில மஞ்சக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொன்று தலத்துற வவுணரை யறுத்தனை
ஐம்புல னாலா மந்தக் கரணம்
முக்குண மிருவளி யொருங்கிய வானோர்
ஏத்த நின்றனை யொருங்கிய மனத்தோ
டிருபிறப் போர்ந்து முப்பொழுது குறைமுடித்து
நான்மறை யோதி யையவகை வேள்வி
அமைத்தா றங்க முதலெழுத் தோதி
வரன்முறை பயின்றெழு வான்றனை வளர்க்கும்
பிரமபுரம் பேணினை
அறுபத முரலும் வேணுபுரம் விரும்பினை
இகலிய மைந்துணர் புகலி யமர்ந்தனை
பொங்குநாற் கடல்சூழ் வெங்குரு விளங்கினை
பாணிமூ வுலகும் புதையமேன் மிதந்த
தோணிபுரத் துறைந்தனை தொலையா விருநிதி
வாய்ந்த பூந்தரா யேய்ந்தனை
வரபுர மொன்றுணர் சிரபுரத் துறைந்தனை
ஒருமலை யெடுத்த விருதிற லரக்கன்
விறல்கெடுத் தருளினை புறவம் புரிந்தனை
முந்நீர்த் துயின்றோ னான்முக னறியாப்
பண்பொடு நின்றனை சண்பை யமர்ந்தனை
ஐயுறு மமணரு மறுவகைத் தேரரும்
ஊழியு முணராக் காழி யமர்ந்தனை
எச்சனே ழிசையோன் கொச்சையை மெச்சினை
ஆறு பதமு மைந்தமர் கல்வியும்
மறைமுத னான்கும்
மூன்று காலமுந் தோன்ற நின்றனை
இருமையி னொருமையு மொருமையின் பெருமையும்
மறுவிலா மறையோர்
கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை
கழுமல முதுபதிக் கவுணிய னறியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைய தன்மையை யாதலி னின்னை
நினைய வல்லவ ரில்லைநீ ணிலத்தே.

பொழிப்புரை:
சொரூப நிலையில் விளங்கும் பரசிவம் ஆகிய நீ உனது இச்சையால் ஐந்தொழில்களை நிகழ்த்த வேண்டி எடுத்துக் கொண்ட ஓருருவமாகிய திருமேனியை உடையை ஆயினை, உன் சக்தியைக் கொண்டு அவ் ஐந்தொழில்களை நடத்தும் திருவுளக்குறிப்போடு சத்தி சிவம் என்னும் இரு உருவாயினை, விண் முதலிய பூதங்களையும் சந்திர சூரியர்களையும் தேவர்கள் மக்கள் முதலியோரையும் படைத்துக் காத்து அழிக்க அயன் அரி அரன் என்னும் மும்மூர்த்திகள் ஆயினை, பிரமன் திருமால் ஆகிய இருவரையும் வலத்திலும் இடத்திலும் அடக்கி ஏக மூர்த்தியாக நின்றாய், ஒப்பற்ற கல்லால மரநிழலில் உனது இரண்டு திருவடிகளை முப்பொழுதும் ஏத்திய சனகர், சனந்தனர் முதலிய நால்வர்க்கு ஒளி நெறியைக் காட்டினாய், சூரியன் சந்திரன் அக்கினி ஆகியோரை மூன்று கண்களாகக் கொண்டு உலகை விழுங்கிய பேரிருளை ஓட்டினாய், கங்கையையும் பாம்பையும் பிறைமதியையும் முடிமிசைச் சூடினாய்,
ஒரு தாளையும் ஈருகின்ற கூர்மையையும் முத்தலைகளையும் உடைய சூலத்தையும் நான்கு கால்களையும் உடைய மான் கன்று, ஐந்து தலை அரவம் ஆகியவற்றையும் ஏந்தினாய்,
சினந்து வந்த, தொங்கும் வாயையும் இரு கோடுகளையும் கொண்ட ஒப்பற்ற யானையை அதன் வலி குன்றுமாறு அழித்து அதன் தோலை உரித்துப் போர்த்தாய்,
ஒப்பற்ற வில்லின் இருதலையும் வளையுமாறு செய்து கணை தொடுத்து முப்புரத்தசுரர்களை இவ்வுலகம் அஞ்சுமாறு கொன்று தரையில் அவர்கள் இறந்து கிடக்குமாறு அழித்தாய்.
ஐம்புலன்கள் நான்கு அந்தக் கரணங்கள், முக்குணங்கள் இரு வாயுக்கள் ஆகியவற்றை ஒடுக்கியவர்களாய தேவர்கள் ஏத்த நின்றாய்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருமித்த மனத்தோடு, இரு பிறப்பினையும் உணர்ந்து முச்சந்திகளிலும் செய்யத்தக்க கடன்களை ஆற்றி நான்மறைகளை ஓதி ஐவகை வேள்விகளையும் செய்து ஆறு அங்கங்களையும் ஓதி, பிரணவத்தை உச்சரித்து தேவர்களுக்கு அவி கொடுத்து மழை பெய்விக்கும் அந்தணர் வாழும் பிரமபுரத்தை விரும்பினாய்,
ஆறுகால்களை உடைய வண்டுகள் இசைபாடும் பொழில் சூழ்ந்த வேணுபுரத்தை விரும்பினாய், தேவர்கள் புகலிடம் என்று கருதி வாழ்ந்த புகலியை விரும்பினாய். நீர் மிகுந்த கடல் சூழ்ந்த வெங்குரு என்னும் தலத்தை விரும்பினாய். மூவுலகும் நீரில் அழுந்தவும் தான் அழுந்தாது மிதந்த தோணிபுரத்தில் தங்கினாய்.

வழங்கக் குறையாத செல்வவளம் மிக்க பூந்தராயில் எழுந்தருளினாய். வரந்தருவதான சிரபுரத்தில் உறைந்தாய், ஒப்பற்ற கயிலை மலையைப் பெயர்த்த பெருந்திறல் படைத்த இராவணனின் வலிமையை அழித்தாய். புறவம் என்னும் தலத்தை விரும்பினாய்,
கடலிடைத் துயிலும் திருமால் நான்முகன் ஆகியோர் அறிய முடியாத பண்பினை உடையாய்.சண்பையை விரும்பினாய். ஐயுறும் சமணரும் அறுவகையான பிரிவுகளை உடையபுத்தரும் ஊழிக்காலம் வரை உணராது வாழ்நாளைப் பாழ் போக்கக் காழிப்பதியில் எழுந்தருளியுள்ளாய். வேள்வி செய்வோனாகிய ஏழிசையோன் வழிபட்ட கொச்சை வயத்தை விரும்பி வாழ்கின்றாய், ஆறு பதங்கள், ஐந்து வகைக் கல்வி, நால் வேதம், மூன்று, காலம், ஆகியன தோன்ற நிற்கும் மூர்த்தியாயினாய், சத்தி சிவம் ஆகிய இரண்டும் ஒருருவமாய் விளங்கும் தன்மையையும் இவ்விரண்டு நிலையில் சிவமாய் ஒன்றாய் இலங்கும் தன்மையையும் உணர்ந்த குற்றமற்ற அந்தணாளர் வாழும் கழுமலம் என்னும் பழம்பதியில் தோன்றிய கவுணியன்குடித் தோன்றலாகிய ஞானசம்பந்தன் கட்டுரையை விரும்பிப் பிரமன் மண்டையோட்டில் உண்ணும் பெருமானே அறிவான். அத்தன்மையை உடைய நின்னை உள்ளவாறு அறிவார், நீண்ட இவ்வுலகிடை இனிப்பிறத்தல் இலர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சீகாழி சிவத்தலத்திற்குரிய பன்னிரு திருநாமங்களின் காரணச் சுருக்கம்

**தோணியம்புரம்** : பிரளய காலத்தில் சிவபெருமான் உமாதேவியாரோடு சுத்தமாயையைத் தோணியாக்கி எழுந்தருளி வந்து தங்கி வீற்றிருக்கின்ற காரணத்தால் இப்பெயர் பெற்றது.

**பிரமபுரம்** : பிரமதேவரநேகர் பூஜை செய்து அருள்பெற்ற ஏதுவாற் பெற்றது.(பிரமதேவரநேகர் - பல பிரம்மாக்கள்)

**சீகாழி** : சத்தி பேதத்தின் அருள் காளியம்மையார் பசுபதியுடன் நடனஞ்செய்ததில் தோற்ற நிமித்தம், இப்பதியில் வந்து ஸ்ரீ பிரமேசரைத் துதித்தருள் பெற்றதால் எய்தியது இப்பெயர். ஸ்ரீகாளிபுரம் என்னும் பெயர் சீகாழி என மருவியது, அன்றியும் காளிதன் எனும் பாம்பு பூஜித்தருள் பெற்றதாலும் காளியம்புரம் என வந்ததுமொன்று.

**வெங்குரு** : அசுரகுருவாகிய சுக்கிரன் ஒருநாள் பிரமதேவர் சபைமுகத்தில் செருக்குடன் செல்ல, கோபித்து பிரமதேவர் வெறுப்ப, திரும்பி வந்து நாரதர் மொழிப்படி இப்பதியில் பூசித்து தேவகுருவுக்குச் சமமான குருத்துவம் வகித்தலால் இந்நாமம் வந்தது. பின்னும் தென்திசைக்கடவுளாம் தருமன் தன்னை நரகவாசிகள் நிந்தித்த காலத்தில் இத்தலம் வந்து பூசித்து, தன்னை நரகவாசிகள் கண்டவுடன் பூர்வவினை உணர்ச்சி பெற்று மௌனமாம் வண்ணம் அருள் பெரும் குருத்துவம் கொண்டமையாலும் இப்பெயர் பெறும்.

**புகலி** : சூரபத்மனால் துயருற்ற தேவர் முதலியோர் ஒருங்குகூடி வந்து, தேவரீரே புகலிடம் என்று பிரமேசரைத் துதித்தமையால் இந்த நாமம் சிறப்புறும்.

**சிரபுரம் :** தேவர் குழுவுடன் உண்ட அசுரனாம் சயிங்கிகேயன் என்பான் திருமாலான மோகினியின் சக்கரத்தால் மரித்து, இருகூறாக , தலைக்கூறு ஆகிய இராகு இப்பதியில் பூசித்து பகைவனாஞ் சூரியனை மறைக்க அருள்பெற்றமையான் இப்பெயர்பெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சண்பை** : கிருஷ்ணரின் குலத்தினராம் யாதவர்கள் யாவரும் ஒருநாள் கூடித் தம்முள் ஒருவனைக் கர்ப்ப ஸ்த்ரீ போல் காட்டி, இவள் பெறுவது ஆணா பெண்ணா என்று கபில முனிவரைக் கேட்க, நீராடப் போம் அவர், நும் வம்ஸத்தினர் யாவரும் நாசமாகும் ஓர் உலக்கை உதிக்கும் என்று கூற, அப்படிக்கிடைத்த உலக்கையைத் தூள் செய்து கடலில் கரைக்க, அவை முற்றும் நாணற்புல்லாய் முளைத்தன. பின்பொருநாள் யாதவர் யாவரும் தங்களுக்குள் கலகம் விளைவித்து ஒவ்வொரு நாணற்புல்லையும் பறித்து அடித்துக் கொண்டு சாபப்படி இறந்தார்கள். அச்சண்பை(நாணல்)யால் வரும் பழி தம்மைத் தொடராதபடி கிருஷ்ணர் இப்பதி வந்து பூசித்து அருள்பெற்றதால் இந்தப்பெயர் விளங்கும்.

**கொச்சை** : மச்சகந்தியோடு ஆற்றின் நடுவில் தோணியில் புணர்ந்த பராசரரை முனிவர்கள் கன்னிகாமிக் கள்வன் எனத் தூற்றினமையால் அப்பராசரர் இப்பதி வந்து பூசித்துக் கொச்சையாகிய பழி தம்மைப் பற்றாவண்ணம் அருள் பெற்றதால் இப்பெயர் விளங்கும்.

**வேணுபுரம்** : தவம்புரியும் சூரன், பதுமன் என்பவர்கள் முன் பிரமேசர் மூங்கில் வடிவாய் முளைத்து அருள் புரிந்தமையாலும், மூங்கில் வழியாக வந்து இந்திரன் பூசித்தமையாலும் இப்பெயர் பெறும். வேணு - மூங்கில்.

**கழுமலம்** : உரோமசமுனிவர் எப்பதிகளிலும் தொலையாத தம் மலத்தொகுதிகள் யாவும் இப்பதிவரவும் நீங்கப் பெற்றமையால் இப்பெயர் விளங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**புறவம்** : சிபிச்சக்கரவர்த்தியைப் பரிசோதிக்கக் கடவுலருளால் வந்த இந்திரன் பருந்தாகவும் அக்கினி புறாவாகவும் சிபிமுன்போய் கலகம் விளைவித்து, புறாவின் நிறைக்குச் சமமாகத் துடையில் சதைமுற்றும் சிபிச்சக்கரவர்த்தி அரிந்து சுமத்தியும் சமமாகாததால் தாமேறவும் சரியாகப் பின் அவருள் இந்திரன் அருள்புரிய, அக்கினியாம் புறா சிபியின் தாகம் நீங்கக் காவிரி நீர் கொண்டுவந்தமையாலும், புறாவால் அரசர் புகழ் பெறலானும் இப்பெயர் தோன்றியது.

**பூந்தராய்** : இரணியாக்கன் ஒரு காலத்தில் தேவலோகத்தின் அமிர்தம் முதலிய நிதிகளைக் கவர்ந்து கொண்டும், பூவுலகவாசிகள் நிதிகளையும் கொண்டு போய் பாதாளத்தில் இருக்கவும், தேவர்கள் திருமாலிடம் இரக்க, அவர் சுவேதவராக(வெள்ளைப்பன்றி) உருவம் கொண்டு பூமியைக் கிழித்துச் சென்று அவனைக்கொன்று நிதிகளைச் சேர்த்தபின்னர், களிமேலிட்டு உலகினை வருத்தும் சுவேதவராகத்தின் முன் சுப்பிரமணியர் வந்தருள் புரிய, உணர்ந்ததும் காழியம்பதி வந்து வராகவுருக்கழித்துத் தம்முருவடைந்து அருள்பெற்றார். பூமியைக் கிழித்துச் சென்றதால் பூந்தராய் எனும் பெயர் விளங்கிற்று.

*******



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய சிவபுராணம்

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அநேகன் இறைவ னடிவாழ்க
வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்குஞ் சீரோன் கழல்வெல்க
ஈச னடிபோற்றி எந்தை யடிபோற்றி
தேச னடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமல னடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்ன னடிபோற்றி
சீரார் பெருந்துறைநம் தேவ னடிபோற்றி
ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவனவன்என் சிந்தையுள் நின்ற அதனால்
அவனரு ளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் மோய உரைப்பன்யான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை யிலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா நின்றஇத் தாவர சங்கமத்துள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்க ளேத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல்போர்த் தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்தஅன் பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில்வஞ் சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்றானே
இன்பமுந் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக் கன்பனே யாவையுமாய் அல்லையுமாஞ்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேஎன் சிந்தனையுள்
ஊற்றான உண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேனெம் ஐயா அரனேஓ என்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்ஆனார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓஎன்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கோளறு பதிகம்— நவக்கிரக தோஷங்களால் நலியாமல் ஓதும் பதிகம்.**

வேயுறு தோளிபங்கன் விடமுண்டகண்டன் மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள்கங்கை முடிமே லணிந்தென் உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள்செவ்வாய் புதன்வியாழம் வெள்ளி சனிபாம் பிரண்டு முடனே
ஆசறு நல்லநல்ல வவை நல்ல நல்ல அடியா ரவர்க்கு மிகவே

என்பொடு கொம்பொடாமை யிவைமார் பிலங்க எருதேறி யேழை யுடனே
பொன்பொதி மத்தமாலை புனல்சூடி வந்தென் உளமே புகுந்த அதனால்
ஒன்பதொ டொன்றொடேழு பதினெட்டொ டாறும் உடனாய நாள்களவைதாம்
அன்பொடு நல்லநல்ல வவைநல்ல நல்ல அடியா ரவர்க்கு மிகவே.

உருவளர் பவளமேனி யொளிநீ றணிந்து உமையோடும் வெள்ளை
விடைமேல், முருகலர் கொன்றைதிங்கண் முடிமே லணிந்தென் உளமே
புகுந்த அதனால், திருமகள் கலையதூர்தி செயமாது பூமி திசைதெய்வ மான
பலவும் அருநெதி நல்லநல்ல வவைநல்ல நல்ல அடியா ரவர்க்கு மிகவே.

மதிநுதன் மங்கையோடு வடபா லிருந்து மறையோது மெங்கள் பரமன்
நதியொடு கொன்றைமாலை முடிமே லணிந்தென் உளமே புகுந்த அதனால்
கொதியுறு காலனங்கி நமனோடு தூதர் கொடுநோய்க ளான பலவும்
அதிகுணம் நல்லநல்ல வவைநல்ல நல்ல அடியா ரவர்க்கு மிகவே.

நஞ்சணி கண்டன்எந்தை மடவாள்த னோடும் விடையேறு நங்கள் பரமன்
துஞ்சிருள் வன்னிகொன்றை முடிமே லணிந்தென் உளமே புகுந்த அதனால்
வெஞ்சின அவுணரோடு உருமிடியும் மின்னும் மிகையான பூத மவையும்
அஞ்சிடு நல்லநல்ல வவைநல்ல நல்ல அடியா ரவர்க்கு மிகவே.

வாள்வரி யதளதாடை வரிகோ வணத்தர் மடவாள் தனோடும் உடனாய்
நாண்மலர் வன்னிகொன்றை நதிசூடி வந்தென் உளமே புகுந்த அதனால்
கோளரி யுழுவையோடு கொலையானை கேழல் கொடுநாக மோடு கரடி
ஆளரி நல்லநல்ல வவைநல்ல நல்ல அடியா ரவர்க்கு மிகவே.

செப்பிள முலைநன்மங்கை யொருபாக மாக விடையேறு செல்வனடைவார்
ஒப்பிள மதியுமப்பும் முடிமே லணிந்தென் உளமே புகுந்த அதனால்
வெப்பொடு குளிரும்வாத மிகையான பித்தும் வினையான வந்து நலியா
அப்படி நல்லநல்ல வவைநல்ல நல்ல அடியா ரவர்க்கு மிகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேள்பட விழிசெய்தன்று விடைமே லிருந்து மடவாள் தனோடும் உடனாய்
வாண்மதி வன்னிகொன்றை மலர்சூடி வந்தென் உளமே புகுந்த அதனால்
ஏழ்கடல் சூழிலங்கை அரையன்ற னோடும் இடரான வந்து நலியா
ஆழ்கடல் நல்லநல்ல வவைநல்ல நல்ல அடியா ரவர்க்கு மிகவே.

பலபல வேடமாகும் பரனாரி பாகன் பசுவேறும் எங்கள் பரமன்
சலமக ளோடெருக்கு முடிமே லணிந்தென் உளமே புகுந்த அதனால்
மலர்மிசை யோனுமாலு மறையோடு தேவர் வருகால மான பலவும்
அலைகடல் மேருநல்ல வவைநல்ல நல்ல அடியா ரவர்க்கு மிகவே.

கொத்தலர் குழலியோடு விசையற்கு நல்கு குணமாய வேட விகிர்தன், மத்தமு
மதியுநாக முடிமே லணிந்தென் உளமே புகுந்த அதனால் புத்தரோ
டமணைவாதில் அழிவிக்கும்அண்ணல் திருநீறு செம்மை திடமே
அத்தகு நல்லநல்ல வவைநல்ல நல்ல அடியா ரவர்க்கு மிகவே.

தேனமர் பொழில்கொளாலை விளைசெந்நெல் துன்னி வளர்செம்பொன்
எங்கும் நிகழ, நான்முகன் ஆதியாய பிரமா புரத்து மறைஞான ஞான முனிவன்
தானுறு கோளுநாளும் அடியாரை வந்து நலியாத வண்ணம் உரைசெய்
ஆனசொல் மாலையோதும் அடியார்கள் வானில் அரசாள்வர் ஆணை நமதே.

********



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருநள்ளாற்றுப் பதிகம் – சனிக்கிரகத்தால் வரும் தோஷங்களை போக்கி நலம் தரும் பதிகம்.**

போகமார்த்த பூண்முலையாள் தன்னோடும் பொன்னகலம்
பாகமார்த்த பைங்கண்வெள் ளேற்றண்ணல் பரமேட்டி
ஆகமார்த்த தோலுடையன் கோவண வாடையின்மேல்
நாகமார்த்த நம்பெருமான் மேயது நள்ளாறே.

தோடுடைய காதுடையன் தோலுடை யன்தொலையாப்
பீடுடைய போர்விடையன் பெண்ணுமோர் பாலுடையன்
ஏடுடைய மேலுலகோ டேழ்கட லுஞ்சூழ்ந்த
நாடுடைய நம்பெருமான் மேயது நள்ளாறே.

ஆன்முறையா லாற்றவெண்ணீ றாடி யணியிழையோர்
பான்முறையால் வைத்தபாதம் பத்தர் பணிந்தேத்த
மான்மறியும் வெண்மழுவுஞ் சூலமும் பற்றியகை
நான்மறையான் நம்பெருமான் மேயது நள்ளாறே.

புல்கவல்ல வார்சடைமேற் பூம்புனல் பெய்தயலே
மல்கவல்ல கொன்றைமாலை மதியோ டுடன்சூடிப்
பல்கவல்ல தொண்டர்தம்பொற் பாதநி ழற்சேர
நல்கவல்ல நம்பெருமான் மேயது நள்ளாறே.

ஏறுதாங்கி யூர்திபேணி யேர்கொள் இளமதியம்
ஆறுதாங்குஞ் சென்னிமேலோர் ஆடர வஞ்சூடி
நீறுதாங்கி நூல்கிடந்த மார்பில் நிரைகொன்றை
நாறுதாங்கு நம்பெருமான் மேயது நள்ளாறே.

திங்களுச்சி மேல்விளங்குந் தேவன் இமையோர்கள்
எங்களுச்சி யெம்மிறைவன் என்றடி யேயிறைஞ்சத்
தங்களுச்சி யால்வணங்குந் தன்னடி யார்கட்கெல்லாம்
நங்களுச்சி நம்பெருமான் மேயது நள்ளாறே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெஞ்சுடர்த்தீ யங்கையேந்தி விண்கொண் முழவதிர
அஞ்சிடத்தோ ராடல்பாடல் பேணுவ தன்றியும்போய்ச்
செஞ்சடைக்கோர் திங்கள்சூடித் திகழ்தரு கண்டத்துள்ளே
நஞ்சடைத்த நம்பெருமான் மேயது நள்ளாறே.

சிட்டமார்ந்த மும்மதிலுஞ் சிலைவரைத் தீயம்பினால்
சுட்டுமாட்டிச் சுண்ணவெண்ணீ றாடுவ தன்றியும்போய்ப்
பட்டமார்ந்த சென்னிமேலோர் பான்ம தியஞ்சூடி
நட்டமாடும் நம்பெருமான் மேயது நள்ளாறே.

உண்ணலாகா நஞ்சுகண்டத் துண்டுடனே யொடுக்கி
அண்ணலாகா வண்ணல்நீழல் ஆரழல் போலுருவம்
எண்ணலாகா வுள்வினையென் றெள்க வலித்திருவர்
நண்ணலாகா நம்பெருமான் மேயது நள்ளாறே.

மாசுமெய்யர் மண்டைத் தேரர் குண்டர்கு ணமிலிகள்
பேசும்பேச்சை மெய்யென்றெண்ணி யந்நெறி செல்லன்மின்
மூசுவண்டார் கொன்றைசூடி மும்மதி ளும்முடனே
நாசஞ்செய்த நம்பெருமான் மேயது நள்ளாறே.

தண்புனலும் வெண்பிறையுந் தாங்கிய தாழ்சடையன்
நண்புநல்லார் மல்குகாழி ஞானசம் பந்தன்நல்ல
பண்புநள்ளா றேத்துபாடல் பத்தும் இவைவல்லார்
உண்புநீங்கி வானவரோ டுலகில் உறைவாரே.

******



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தீர்த்த உற்சவங்களில் சுண்ணமிடிக்கும் போது பாடும் திருவாசகம்**
**திருப்பொற்சுண்ணம்**

முத்துநல் தாமம்பூ மாலை தூக்கி
முளைக்குடம் தூபம்நல் தீபம் வைம்மின்
சத்தியும் சோமியும் பார்மகளும்
நாமக ளோடுபல் லாண்டி சைமின்
சித்தியுங் கௌரியும் பார்ப்பதியும்
கங்கையும் வந்து கவரி கொண்மின்
அத்தன்ஐ யாறன்அம் மானைப் பாடி
ஆடப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே. (01)

பூவியல் வார்சடை எம்பி ராற்குப்
பொற்றிருச் சுண்ணம் இடிக்க வேண்டும்
மாவின் வடுவகி ரன்ன கண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடு மின்கள்
கூவுமின் தொண்டர் புறம்நி லாமே
குனிமின் தொழுமின்எம் கோனெங் கூத்தன்
தேவியுங் தானும்வந் தெம்மை யாளச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்தும் நாமே. (02)

சுந்தர நீறணிந் தும்மெழுகித்
தூயபொன் சிந்தி நிதிப ரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டி எங்கும்
எழிற்சுடர் வைத்துக் கொடியெடுமின்
அந்தரர் கோன்அயன் றன்பெருமான்
ஆழியான் நாதன்நல் வேலன் தாதை
எந்தரம் ஆள்உமை யாள்கொழுநற்
கேய்ந்தபொற் சுண்ணம் இடித்தும் நாமே. (03)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசணி மின்கள் உலக்கை யெல்லாங்
காம்பணி மின்கள் கறையுரலை
நேச முடைய அடிய வர்கள்
நின்று நிலாவுக என்று வாழ்த்தித்
தேசமெல் லாம்புகழ்ந் தாடுங் கச்சித்
திருவேகம் பன்செம்பொற் கோயில் பாடிப்
பாச வினையைப் பறித்து நின்று
பாடிப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே. (04)

அறுகெடுப் பார்அய னும்மரியும்
அன்றிமற் றிந்திர னோடமரர்
நறுமுறு தேவர் கணங்க ளெல்லாம்
நம்மிற்பின் பல்ல தெடுக்க வொட்டோம்
செறிவுடை மும்மதில் எய்த வில்லி
திருவேகம் பன்செம்பொற் கோயில் பாடி
முறுவற்செவ் வாயினீர் முக்க ணப்பற்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே. (05)

உலக்கை பலஓச்சு வார்பெரியர்
உலகமெ லாம்உரல் போதா தென்றே
கலக்க அடியவர் வந்து நின்றார்
காண உலகங்கள் போதா தென்றே
நலக்க அடியோமை ஆண்டு கொண்டு
நாண்மலர்ப் பாதங்கள் சூடத் தந்த
மலைக்கு மருகனைப் பாடிப் பாடி
மகிழ்ந்து பொற்சுண்ணம் இடித்தும் நாமே. (06)

சூடகந் தோள்வளை ஆர்ப்ப ஆர்ப்பத்
தொண்டர் குழாமெழுந் தார்ப்ப ஆர்ப்ப
நாடவர் நந்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப
நாமும் அவர்தம்மை ஆர்ப்ப ஆர்ப்பப்
பாடகம் மெல்லடி ஆர்க்கும் மங்கை
பங்கினன் எங்கள் பரா பரனுக்
காடக மாமலை அன்ன கோவுக்
காடப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே. (07)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாள்தடங் கண்மட மங்கை நல்லீர்
வரிவளை ஆர்ப்பவண் கொங்கை பொங்கத்
தோள்திரு முண்டந் துதைந்தி லங்கச்
சோத்தெம்பி ரானென்று சொல்லிச் சொல்லி
நாட்கொண்ட நாண்மலர்ப் பாதங் காட்டி
நாயிற் கடைப்பட்ட நம்மை இம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப் பாடி
ஆடப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே. (08)

வையகம் எல்லாம் உரல தாக
மாமேரு என்னும் உலக்கை நாட்டி
மெய்யெனும் மஞ்சள் நிறைய அட்டி
மேதகு தென்னன் பெருந் துறையான்
செய்ய திருவடி பாடிப் பாடிச்
செம்பொன் உலக்கை வலக்கை பற்றி
ஐயன் அணிதில்லை வாண னுக்கே
ஆடப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே. (09)

முத்தணி கொங்கைகள் ஆட ஆட
மொய்குழல் வண்டினம் ஆட ஆடச்
சித்தஞ் சிவனொடும் ஆட ஆடச்
செங்கயற் கண்பனி ஆட ஆடப்
பித்தெம் பிரானொடும் ஆட ஆடப்
பிறவி பிறரொடும் ஆட ஆட
அத்தன் கருணையொ டாட ஆட
ஆடப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே. (10)

மாடு நகைவாள் நிலாஎ றிப்ப
வாய்திறந் தம்பவ ளந்து டிப்பப்
பாடுமின் நந்தம்மை ஆண்ட வாறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப் பாடித்
தேடுமின் எம்பெரு மானைத் தேடிச்
சித்தங் களிப்பத் திகைத்துத் தேறி
ஆடுமின் அம்பலத் தாடி னானுக்
காடப் பொற் சுண்ணம் இடித்தும் நாமே. (11)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மையமர் கண்டனை வான நாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன் றன்னை
ஐயனை ஐயர்பி ரானை நம்மை
அகப்படுத் தாட்கொண் டருமை காட்டும்
பொய்யர்தம் பொய்யனை மெய்யர் மெய்யைப்
போதரிக் கண்ணிணைப் பொற்றொ டித்தோள்
பையர வல்குல் மடந்தை நல்லீர்
பாடிப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே. (12)

மின்னிடைச் செந்துவர் வாய்க்க ருங்கண்
வெண்ணகைப் பண்ணமர் மென்மொழியீர்
என்னுடை ஆரமு தெங்க ளப்பன்
எம்பெரு மான்இம வான்ம கட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன்த கப்பன்
தமையன்எம் ஐயன் தாள்கள் பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கை நல்லீர்
பொற்றிருச் சுண்ணம் இடித்தும் நாமே. (13)

சங்கம் அரற்றச் சிலம்பொ லிப்பத்
தாழ்குழல் சூழ்தரு மாலை யாடச்
செங்கனி வாயித ழுந்து டிப்பச்
சேயிழை யீர்சிவ லோகம் பாடிக்
கங்கை இரைப்ப அராஇ ரைக்குங்
கற்றைச் சடைமுடி யான்க ழற்கே
பொங்கிய காதலிற் கொங்கை பொங்கப்
பொற்றிருச் சுண்ணம் இடித்தும் நாமே. (14)

ஞானக் கரும்பின் தெளிவைப் பாகை
நாடற் கரிய நலத்தை நந்தாத்
தேனைப் பழச்சுவை ஆயி னானைச்
சித்தம் புகுந்துதித் திக்க வல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டு கொண்ட
கூத்தனை நாத்தழும் பேற வாழ்த்திப்
பானற் றடங்கண் மடந்தை நல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே. (15)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவகை நாமும்வந் தன்பர் தம்மோடு
ஆட்செயும் வண்ணங்கள் பாடி விண்மேல்
தேவர் கனாவிலுங் கண்டறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டுஞ் செல்வச்
சேவகம் ஏந்திய வெல்கொ டியான்
சிவபெரு மான்புரஞ் செற்ற கொற்றச்
சேவகன் நாமங்கள் பாடிப் பாடிச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்தும் நாமே. (16)

தேனக மாமலர்க் கொன்றை பாடிச்
சிவபுரம் பாடித் திருச்ச டைமேல்
வானக மாமதிப் பிள்ளை பாடி
மால்விடை பாடி வலக்கை யேந்தும்
ஊனக மாமழுச் சூலம் பாடி
உம்பரும் இம்பரும் உய்ய அன்று
போனக மாகநஞ் சுண்டல் பாடிப்
பொற்றிருச் சுண்ணம் இடித்தும் நாமே. (17)

அயன்தலை கொண்டுசெண் டாடல் பாடி
அருக்கன் எயிறு பறித்தல் பாடிக்
கயந்தனைக் கொன்றுரி போர்த்தல் பாடிக்
காலனைக் காலால் உதைத்தல் பாடி
இயைந்தன முப்புரம் எய்தல் பாடி
ஏழை அடியோமை ஆண்டு கொண்ட
நயந்தனைப் பாடிநின் றாடி யாடி
நாதற்குச் சுண்ணம் இடித்தும் நாமே. (18)

வட்ட மலர்க்கொன்றை மாலை பாடி
மத்தமும் பாடி மதியும் பாடிச்
சிட்டர்கள் வாழுந்தென் தில்லை பாடிச்
சிற்றம் பலத்தெங்கள் செல்வம் பாடிக்
கட்டிய மாசுணக் கச்சை பாடிக்
கங்கணம் பாடிக் கவித்த கைம்மேல்
இட்டுநின் றாடும் அரவம் பாடி
ஈசற்குச் சுண்ணம் இடித்தும் நாமே. (19)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதமும் வேள்வியும் ஆயி னார்க்கு
மெய்ம்மையும் பொய்ம்மையும் ஆயி னார்க்குச்
சோதியு மாய்இருள் ஆயி னார்க்குத்
துன்பமு மாய்இன்பம் ஆயி னார்க்குப்
பாதியு மாய்முற்றும் ஆயி னார்க்குப்
பந்தமு மாய்வீடும் ஆயி னாருக்கு
ஆதியும் அந்தமும் ஆயி னாருக்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே. (20)

******

**திருக்கோவில்களில் திருவனந்தல் பூஜையில் ஓதப்படும் திருப்பள்ளி எழுச்சி**

போற்றிஎன் வாழ்முத லாகிய பொருளே
புலர்ந்தது பூங்கழற் கிணைதுணை மலர்கொண்
டேற்றிநின் திருமுகத் தெமக்கருள் மலரும்
எழில்நகை கொண்டுநின் திருவடி தொழுகோம்
சேற்றிதழ்க் கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
ஏற்றுயர் கொடியுடை யாய்எனை யுடையாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே (01)

அருணன்இந் திரன்திசை அணுகினன் இருள்போய்
அகன்றது உதயநின் மலர்த்திரு முகத்தின்
கருணையின் சூரியன் எழஎழ நயனக்
கடிமலர் மலரமற் றண்ணல்அங் கண்ணாம்
திரள்நிரை அறுபதம் முரல்வன இவையோர்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
அருள்நிதி தரவரும் ஆனந்த மலையே
அலைகட லேபள்ளி எழுந்தரு ளாயே (02)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூவின பூங்குயில் கூவின கோழி
குருகுகள் இயம்பின இயம்பின சங்கம்
ஓவின தாரகை யொளிஒளி உதயத்
தொருப்படு கின்றது விருப்பொடு நமக்குத்
தேவநற் செறிகழல் தாளிணை காட்டாய்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
யாவரும் அறிவரி யாய்எமக் கெளியாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே (03)

இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்
இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்
துன்னிய பிணைமலர்க் கையினர் ஒருபால்
தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால்
சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
என்னையும் ஆண்டுகொண் டின்னருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே (04)

பூதங்கள் தோறும்நின் றாயெனின் அல்லால்
போக்கிலன் வரவிலன் எனநினைப் புலவோர்
கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால்
கேட்டறி யோம்உனைக் கண்டறி வாரைச்
சீதங்கொள் வயல்திருப் பெருந்துறை மன்னா
சிந்தனைக் கும்அரி யாய்எங்கள் முன்வந்
தேதங்கள் அறுத்தெம்மை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே (05)

பப்பற வீட்டிருந் துணரும்நின் அடியார்
பந்தனை வந்தறுத் தாரவர் பலரும்
மைப்புறு கண்ணியர் மானுடத் தியல்பின்
வணங்குகின் றார்அணங் கின்மண வாளா
செப்புறு கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
இப்பிறப் பறுத்தெமை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே (06)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுபழச் சுவையென அமுதென அறிதற்
கரிதென எளிதென அமரரும் அறியார்
இதுஅவன் திருவுரு இவன்அவன் எனவே
எங்களை ஆண்டுகொண் டிங்கெழுந் தருளும்
மதுவளர் பொழில்திரு வுத்தர கோச
மங்கையுள் ளாய்திருப் பெருந்துறை மன்னா
எதுஎமைப் பணிகொளு மாறது கேட்போம்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே (07)

முந்திய முதல்நடு இறுதியு மானாய்
மூவரும் அறிகிலர் யாவர்மற் றறிவார்
பந்தணை விரலியும் நீயும்நின் அடியார்
பழங்குடில் தொறும்எழுந் தருளிய பரனே
செந்தழல் புரைதிரு மேனியுங் காட்டித்
திருப்பெருந் துறையுறை கோயிலுங் காட்டி
அந்தண னாவதுங் காட்டிவந் தாண்டாய்
ஆரமு தேபள்ளி எழுந்தரு ளாயே (08)

விண்ணகத் தேவரும் நண்ணவும் மாட்டா
விழுப்பொரு ளேயுன தொழுப்படி யோங்கள்
மண்ணகத் தேவந்து வாழச்செய் தானே
வண்திருப் பெருந்துறை யாய்வழி யடியோம்
கண்ணகத் தேநின்று களிதரு தேனே
கடலமு தேகரும் பேவிரும் படியார்
எண்ணகத் தாய்உல குக்குயி ரானாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே (09)

புவனியிற் போய்ப்பிற வாமையில் நாள்நாம்
போக்குகின் றோம்அவ மேஇந்தப் பூமி
சிவனுய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கித்
திருப்பெருந் துறையுறை வாய்திரு மாலாம்
அவன்விருப் பெய்தவும் மலரவன் ஆசைப்
படவும்நின் அலர்ந்தமெய்க் கருணையும் நீயும்
அவனியிற் புகுந்தெமை ஆட்கொள்ள வல்லாய்
ஆரமு தேபள்ளி எழுந்தரு ளாயே (10)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவெம்பாவை

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னேயென்னே
ஈதே எந்தோழி பரிசேலோர் எம்பாவாய். (01)

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல்நாம்
பேசும்போ தெப்போதிப் போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசி யிவையுஞ் சிலவோ விளையாடி
ஏசு மிடமீதோ விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசு மலர்ப்பாதந் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார்யாம் ஆரேலோர் எம்பாவாய். (02)

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
அத்தன் ஆனந்தன் அமுதன்என் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன் பழவடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோநின் அன்புடைமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நம்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோர் எம்பாவாய். (03)

ஒள்நித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உள்நெக்கு நின்றுருக யாம்மாட்டோம் நீயேவந்து
எண்ணிக் குறையில் துயிலேலோர் எம்பாவாய். (04)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலறியா நான்முகனும் காணா மலையினைநாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மைஆட் கொண்டருளிக் கோதாட்டும்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்று
ஓலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோர் எம்பாவாய். (05)

மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
நானே யெழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறும்எமக்கும்
ஏனோர்க்குந் தங்கோனைப் பாடேலோர் எம்பாவாய். (06)

அன்னே இவையுஞ் சிலவோ பலஅமரர்
உன்னற் கரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னாஎன் னாமுன்னம் தீசேர் மெழுகொப்பாய்
என்னானை என்னரையன் இன்னமுதென் றெல்லோமுஞ்
சொன்னோங்கேள் வெவ்வேறாய் இன்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோர் எம்பாவாய். (07)

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ
வாழிஈ தென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடேலோர் எம்பாவாய். (08)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றஉன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எம்கணவ ராவார் அவர்உகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோமேலோர் எம்பாவாய். (09)

பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்
ஓத உலவா ஒருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்றன் கோயிற் பிணாப்பிள்ளைகாள்
ஏதவன்ஊர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆரயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோர் எம்பாவாய். (10)

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோங்காண் ஆரழல்போற்
செய்யாவெண் ணீறாடீ செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயாநீ ஆட்கொண் டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமையேலோர் எம்பாவாய். (11)

ஆர்த்த பிறவித் துயர்கெடநாம் ஆர்த்தாடும்
தீர்த்தன்நற் றில்லைச்சிற் றம்பலத்தே தீயாடும்
கூத்தன்இவ் வானும் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்தம் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீ ராடேலோர் எம்பாவாய். (12)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்துநம்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய். (13)

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோர் எம்பாவாய். (14)

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத் தான்பணியாள்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய். (15)

முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள்நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய். (16)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செங்கண வன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய். (17)

அண்ணா மலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கண்ணா ரமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேயிப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய். (18)

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம்என்று
அங்கப் பழஞ்சொற் புதுக்குமெம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போம்கேள்
எங்கொங்கை நின்னன்ப ரல்லார்தோள் சேரற்க
எங்கை உனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல் பகல்எங்கண் மற்றொன்றுங் காணற்க
இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயி றெமக்கேலோர் எம்பாவாய். (19)

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றிஎல் லாவுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்
போற்றிஎல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றிஎல் லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீ ராடேலோர் எம்பாவாய். (20)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொடியேற்றத்தின் போது தம்பத்தடியில் ஓதவேண்டிய பதிகங்கள்

### பண்– தக்கராகம் ,கணபதிதாளம் (பொது)

மடையில் வாளை பாய மாதரார்
குடையும் பொய்கைக் கோலக் காவுளான்
சடையும் பிறையுஞ் சாம்பற் பூச்சுங்கீள்
உடையுங் கொண்ட வுருவ மென்கொலோ.

பெண்டான் பாக மாகப் பிறைச்சென்னி
கொண்டான் கோலக் காவு கோயிலாக்
கண்டான் பாதங் கையாற் கூப்பவே
உண்டா னஞ்சை யுலக முய்யவே.

நலங்கொள் காழி ஞானசம் பந்தன்
குலங்கொள் கோலக் காவு ளானையே
வலங்கொள் பாடல் வல்ல வாய்மையார்
உலங்கொள் வினைபோ யோங்கி வாழ்வரே.

## மூஷிக தாளம் (விநாயகர் ஆலயங்கள்)

### பண் – காந்தார பஞ்சமம்

பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை
ஆவினுக் கருங்கல மரனஞ் சாடுதல்
கோவினுக் கருங்கலங் கோட்ட மில்லது
நாவினுக் கருங்கல நமச்சி வாயவே.

சலமிலன் சங்கரன் சார்ந்த வர்க்கலால்
நலமில னாடொறு நல்கு வானலன்
குலமில ராகிலுங் குலத்துக் கேற்பதோர்
நலமிகக் கொடுப்பது நமச்சி வாயவே.

மாப்பிணை தழுவிய மாதொர் பாகத்தன்
பூப்பிணை திருந்தடி பொருந்தக் கைதொழ
நாப்பிணை தழுவிய நமச்சி வாயப்பத்
தேத்தவல் லார்தமக் கிடுக்க ணில்லையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ரிஷப தாளம் (சிவாலயங்கள்), பண் – காந்தார பஞ்சமம்**

இடரினும் தளரினும் எனதுறுநோய்
தொடரினும் உனகழல் தொழுதெழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்தநஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே
இதுவொஎமை ஆளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுன தின்னருள் ஆவடுதுறை அரனே.

வெந்துயர் தோன்றியோர் வெருவுறினும்
எந்தாய்உன் னடியலால் ஏத்தாதென்நா
ஐந்தலை யரவுகொண் டரைக்கசைத்த
சந்தவெண் பொடியணி சங்கரனே
இதுவோஎமை ஆளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுன தின்னருள் ஆவடுதுறை அரனே.

அலைபுனல் ஆவடு துறைஅமர்ந்த
இலைநுனை வேற்படை யெம்இறையை
நலமிகு ஞானசம் பந்தன்சொன்ன
விலையுடை அருந்தமிழ் மாலைவல்லார்
வினையாயினநீங் கிப்போய் விண்ணவர் வியனுலகம்
நிலையாகமுன் ஏறுவர்நிலமிசை நிலையிலரே.

**சிம்ம தாளம்(அம்பாள் ஆலயங்கள்) பண்– நட்டபாடை**

தோடுடையசெவி யன்விடையேறியோர் தூவெண்மதிசூடிக்
காடுடையசுட லைப்பொடிபூசியென் னுள்ளங்கவர்கள்வன்
ஏடுடையமல ரான்முனை நாட்பணிந் தேத்தவருள்செய்த
பீடுடையபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே.

ஒருமைபெண்மையுடை யன்சடையன்விடை யூரும்மிவனென்ன
அருமையாகவுரை செய்யவமர்ந்தென துள்ளங்கவர்கள்வன்
கருமைபெற்றகடல் கொள்ளமிதந்ததொர் காலம்மிதுவென்னப்
பெருமைபெற்றபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே.

அருநெறியமறை வல்லமுனியகன் பொய்கையலர்மேய
பெருநெறியபிர மாபுரமேவிய பெம்மானிவன்றன்னை
ஒருநெறியமனம் வைத்துணர்ஞானசம் பந்தன்னுரைசெய்த
திருநெறியதமிழ் வல்லவர்தொல்வினை தீர்தல்எளிதாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மயூர தாளம்(முருகன் ஆலயங்கள்), பண்– இந்தளம**

பித்தாபிறை சூடீ பெருமானே யரு ளாளா
எத்தான்மறவாதே நினைக்கினறேன்மனத்துன்னை
வைத்தாய்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட் டுறையுள்
அத்தாஉனக் காளாய்இனிஅல்லேனென லாமே.

பாதம்பணி வார்கள்பெறு பண்டம்மது பணியா
யாதன்பொரு ளானேன் அறிவில்லேன்அரு ளாளா
தாதார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட் டுறையுள்
ஆதீஉனக் காளாய்இனி அல்லேன்என லாமே.

காரூர்புன லெய்திக்கரை கல்லித்திரைக் கையால்
பாரூர்புக ழெய்தித்திகழ்பன்மாமணி யுந்திச்
சீரூர்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட் டுறையுள்
ஆரூரன்எம் பெருமாற்காள் அல்லேன்என லாமே.

**நவசந்திகளில் கொடியேற்றம் / கொடி இறக்கத்தில் ஓதவேண்டிய பதிகங்கள்**

**பிரம்ம சந்தி(மத்தி) ,பண்– மேகராகக் குறிச்சி, திருஞானசம்பந்தர் அருளியது**

வேதர் வேதமெல்லா முறையால் விரித்
தோத நின்ற வொருவனார்
பாதிபெண்ணுரு வாவர் பராய்த்துறை
ஆதியாய வடிகளே.

மறையுமோதுவர் மான்மறிக்கையினர்
கறைகொள்கண்ட முடையவர்
பறையுஞ்சங்கு மொலிசெய்பராய்த்துறை
அறையநின்ற வடிகளே

செல்வமல்கிய செல்வர்பராய்த்துறைச்
செல்வர்மேற்சிதை யாதன
செல்வன்ஞானசம் பந்தனசெந்தமிழ்
செல்வமாமிவை செப்பவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இந்திர சந்தி (கிழக்கு) , பண் காந்தாரம், திருஞானசம்பந்தர் அருளியது**

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருவால வாயான் திருநீறே.

வேதத்தி லுள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு
போதந் தருவது நீறு புன்மை தவிர்ப்பது நீறு
ஓதத் தகுவது நீறு வுண்மையி லுள்ளது நீறு
சீதப் புனல்வயல் சூழ்ந்த திருவால வாயான் திருநீறே

ஆற்ற லடல்விடை யேறு மால வாயான்றிரு நீற்றைப்
போற்றிப் புகலி நிலாவும் பூசுரன் ஞானசம் பந்தன்
தேற்றித் தென்ன னுடலுற்ற தீப்பிணி யாயின தீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே.

**அக்கினி சந்தி (தென் கிழக்கு), பண்– கொல்லி, திருஞானசம்பந்தர் அருளியது**

மண்ணின்நல் லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணின்நல் லகதிக்கி யாதுமோர் குறைவிலை
கண்ணினல் ல.்.துறுங் கழுமல வளநகர்ப்
பெண்ணினல் லாளொடும் பெருந்தகை யிருந்ததே.

அடைவிலோம் என்றுநீ அயர்வொழி நெஞ்சமே
விடையமர் கொடியினான் விண்ணவர் தொழுதெழும்
கடையுயர் மாடமார் கழுமல வளநகர்ப்
பெடைநடை யவளொடும் பெருந்தகை யிருந்ததே.

கருந்தடந் தேன்மல்கு கழுமல வளநகர்ப்
பெருந்தடங் கொங்கையோ டிருந்தளம் பிரான்றனை
அருந்தமிழ் ஞானசம் பந்தன செந்தமிழ்
விரும்புவா ரவர்கள்போய் விண்ணுல காள்வரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இயம சந்தி (தெற்கு), பண்–கௌஷிகம், திருஞானசம்பந்தர் அருளியது**

காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொரு ளாவது
நாதன் நாமம் நமச்சி வாயவே

கொல்வா ரேனுங் குணம்பல நன்மைகள்
இல்லா ரேனு மியம்புவ ராயிடின்
எல்லாத் தீங்கையு நீங்குவ ரென்பரால்
நல்லார் நாமம் நமச்சி வாயவே.

நந்தி நாமம் நமச்சிவா யவெனும்
சந்தை யாற்றமிழ் ஞானசம் பந்தன்சொல்
சிந்தை யால்மகிழ்ந் தேத்தவல் லாரெலாம்
பந்த பாசம் அறுக்கவல் லார்களே.

**நிருதி சந்தி (தென்மேற்கு ), பண் நட்ட பாடை, திருஞானசம்பந்தர் அருளியது**

உண்ணாமுலை யுமையாளொடும் உடனாகிய வொருவன்
பெண்ணாகிய பெருமான்மலை திருமாமணி திகழ
மண்ணார்ந்தன வருவித்திரண் மழலைம்முழ வதிரும்
அண்ணாமலை தொழுவார்வினை வழுவாவண்ண மறுமே.

விளவார்கனி படநூறிய கடல்வண்ணனும் வேதக்
கிளர்தாமரை மலர்மேலுறை கேடில்புக ழோனும்
அளவாவண மழலாகிய அண்ணாமலை யண்ணல்
தளராமுலை முறுவல்லுமை தலைவன்னடி சரணே.

வெம்புந்திய கதிரோனொளி விலகும்விரி சாரல்
அம்புந்திமூ வெயிலெய்தவன் அண்ணாமலை யதனைக்
கொம்புந்துவ குயிலாலுவ குளிர்காழியுண் ஞான
சம்பந்தன தமிழ்வல்லவர் அடிபேணுதல் தவமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வருணசந்தி (மேற்க்கு) பண் –சீகாமரம், திருஞானசம்பந்தர் அருளியது**

கள்ளார்ந்த பூங்கொன்றை மதமத்தங் கதிர்மதியம்
உள்ளார்ந்த சடைமுடியெம் பெருமானா ருறையுமிடந்
தள்ளாய சம்பாதி சடாயென்பார் தாமிருவர்
புள்ளானார்க் கரையனிடம் புள்ளிருக்கு வேளுரே

தையலா ளொருபாகஞ் சடைமேலா ளவளோடும்
ஐயந்தேர்ந் துழல்வாரோ ரந்தணனா ருறையுமிடம்
மெய்சொல்லா விராவணனை மேலோடி யீடழித்துப்
பொய்சொல்லா துயிர்போனான் புள்ளிருக்கு வேளூரே

செடியாய வுடல்தீர்ப்பான் தீவினைக்கோர் மருந்தாவான்
பொடியாடிக் கடிமைசெய்த புள்ளிருக்கு வேளூரைக்
கடியார்ந்த பொழிற்காழிக் கவுணியன்சம் பந்தன்சொல்
மடியாது சொல்லவல்லார்க் கில்லையாம் மறுபிறப்பே

**வாயு சந்தி (வடமேற்க்கு ) பண் தக்கேசி, திருஞானசம்பந்தர் அருளியது**

பூவார்மலர்கொண் டடியார்தொழுவார் புகழ்வார் வானோர்கள்
மூவார்புரங்க ளெரித்தவன்று மூவர்க் கருள்செய்தார்
தூமாமழைநின் றதிரவெருவித் தொறுவின் னிரையோடும்
ஆமாம்பிணைவந் தணையுஞ்சாரல் அண்ணா மலையாரே.

வந்தித்திருக்கு மடியார்தங்கள் வருமேல் வினையோடு
பந்தித்திருந்த பாவந்தீர்க்கும் பரம னுறைகோயில்
முந்தியெழுந்த முழவினோசை முதுகல் வரைகண்மேல்
அந்திப்பிறைவந் தணையுஞ்சாரல் அண்ணா மலையாரே.

அல்லாடரவ மியங்குஞ்சாரல் அண்ணா மலையாரை
நல்லார்பரவப் படுவான்காழி ஞான சம்பந்தன்
சொல்லான்மலிந்த பாடலான பத்து மிவைகற்று
வல்லாரெல்லாம் வானோர்வணங்க மன்னி வாழ்வாரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குபேர சந்தி (வடக்கு ) பண் தக்கராகம், திருஞானசம்பந்தர் அருளியது

பொடியுடைமார்பினர் போர்விடையேறிப் பூதகணம் புடைசூழக்
கொடியுடையூர்திரிந் தையங் கொண்டு பலபலகூறி
வடிவுடைவாணெடுங் கண்ணுமைபாக மாயவன்வாழ்கொளி புத்தூர்க்
கடிகமழ் மாமலரிட்டுக் கறைமிடற்றானடி காண்போம்.

கரியவனான்முகன் கைதொழுதேத்தக் காணலுஞ்சாரலு மாகா
எரியுருவாகியூ ரைய மிடுபலியுண்ணியென் றேத்தி
வரியரவல்குன் மடந்தையொர்பாக மாயவன்வாழ்கொளி புத்தூர்
விரிமல ராயினதூவி விகிர்தனசேவடி சேர்வோம்

கல்லுயர்மாக்கட னின்றுமுழங்குங் கரைபொரு காழியமூதூர்
நல்லுயர் நான்மறை நாவின் நற்றமிழ் ஞானசம்பந்தன்
வல்லுயர்சூலமும் வெண்மழுவாளும் வல்லவன்வாழ்கொளி புத்தூர்ச்
சொல்லியபாடல்கள் வல்லார் துயர்கெடுதல்லெளி தாமே.

ஈசான சந்தி (வடகிழக்கு ) பண் – சாலா பாணி, திருநாவுக்கரச
சுவாமிகள் அருளியது

தலையே நீவணங்காய் – தலை மாலை தலைக்கணிந்து
தலையா லேபலி தேருந் தலைவனைத் தலையே நீவணங்காய்

நெஞ்சே நீநினையாய் நிமிர் புன்சடை நின்மலனை
மஞ்சா டும்மலை மங்கை மணாளனை நெஞ்சே நீநினையாய்

ஆக்கை யாற்பயனென் அரன் கோயில் வலம்வந்து
பூக்கையா லட்டிப் போற்றியென் னாதஇவ் ஆக்கை யாற்பயனென்

உற்றா ராருளரோ வுயிர் கொண்டு போம்பொழுது
குற்றா லத்துறை கூத்தனல் லால்நமக் குற்றா ராருளரோ.

தேடிக் கண்டுகொண்டேன் - திருமாலொடு நான்முகனும்
தேடித் தேடொணாத் தேவனை யென்னுளே தேடிக்
கண்டுகொண்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்பாள் தோத்திரம் – அபிராமிப்பட்டர் அருளிய அபிராமி அந்தாதி

### கணபதி காப்பு

தாரமர் கொன்றையும் சண்பகமாலையும் சாத்தும் தில்லை
ஊரார் தம் பாகத்து உமைமைந்தனே! உலகு ஏழும் பெற்ற
சீர் அபிராமி அந்தாதி எப்போதும் என் சிந்தையுள்ளே
காரமர் மேனிக் கணபதியே! நிற்க கட்டுரையே.

1. உதிக்கின்ற செங்கதிர், உச்சித்திலகம், உணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்கம், மாதுளம் போது, மலர்க்கமலை
துதிக்கின்ற மின்கொடி, மென்கடிக்குங்கும தோயமென்ன
விதிக்கின்ற மேனி அபிராமி என்தன் விழித்துணையே.

2. துணையும் தொழும் தெய்வமும், பெற்றதாயும் சுருதிகளின்
பணையும், கொழுந்தும் பதி கொண்டவேரும் பனிமலர்பூங்
கணையும், கருப்புச்சிலையும், மென்பாசாங்குசமும், கையில்
அணையும் திரிபுர சுந்தரி ஆவது அறிந்தனமே.

3. அறிந்தேன் எவரும் அறியா மறையை, அறிந்துகொண்டு
செறிந்தேன் உனது திருவடிக்கே, திருவே! வெருவிப்
பிறந்தேன் நின்அன்பர் பெருமைஎண்ணாதகரும நெஞ்சால்
மறிந்தே விழு நரகுக்கு உறவாய மனிதரையே.

4. மனிதரும் தேவரும் மாயா முனிவரும் வந்து சென்னி
குனிதரும் சேவடிக் கோமளமே! கொன்றைவார்சடைமேல்
பனிதரும் திங்களும், பாம்பும், பகீரதியும் படைத்த
புனிதரும் நீயும் என்புந்தி எந்நாளும் பொருந்துகவே.

5. பொருந்திய முப்புரை! செப்புரை செய்யும் புணர்முலையால்
வருந்திய வஞ்சி மருங்குல் மனோன்மணி! வார்சடையோன்
அருந்திய நஞ்சு அமுதாக்கிய அம்பிகை! அம்புயமேல்
திருந்திய சுந்தரி அந்தரி பாதம்என் சென்னியதே.

6. சென்னியது உன்பொன் திருவடித்தாமரை சிந்தையுள்ளே
மன்னியது உன் திருமந்திரம் சிந்தூர வண்ணப்பெண்ணே!
முன்னிய நின் அடி யாருடன் கூடி முறை முறையே
பன்னியது என்றும் உன் தன் பரமாகம பத்ததியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. ததியுறு மத்திற் சுழலும் என்ஆவி தளர்விலதோர்
கதியுறும் வண்ணம் கருது கண்டாய் கமலாலயனும்,
மதியுறு வேணி மகிழ்நனும், மாலும் வணங்கிஎன்றும்
துதியுறு சேவடியாய்! சிந்துரானன சுந்தரியே.

8. சுந்தரி! எந்தை துணைவி! என் பாசத் தொடரைஎல்லாம்
வந்தரி சிந்துர வண்ணத்தினாள் மகிடன் தலைமேல்
அந்தரி நீலி அழியாத கன்னிகை ஆரணத்தோன்
சுந்தரி கைத்தலத்தாள் மலர்த்தாள் என் கருத்தனவே.

9. கருத்தன, எந்தை தன் கண்ணன வண்ணக் கனகவெற்பில்
பெருத்தன, பால்அழும் பிள்ளைக்கு நல்கின, பேரருள்கூர்
திருத்தன பாரமும் ஆரமும், செங்கைச் சிலையும், அம்பும்
முருத்தனமூரலும், நீயும், அம்மே! வந்துஎன்முன் நிற்கவே.

10. நின்றும், இருந்தும், கிடந்தும், நடந்தும் நினைப்பது உன்னை
என்றும் வணங்குவது உன்மலர்த்தாள் எழுதாமறையின்
ஒன்றும் அரும் பொருளே! அருளே! உமையே இமயத்து
அன்றும் பிறந்தவளே! அழியா முத்தி ஆனந்தமே!

11. ஆனந்தமாய் என் அறிவாய், நிறைந்த அமுதமுமாய்,
வான் அந்தமான வடிவுடையாள், மறை நான்கினுக்கும்
தான் அந்தமான சரணார விந்தம் தவளநிறக்
கானம்தம் ஆடரங்காம் எம்பிரான் முடிக்கண்ணியதே.

12. கண்ணியது உன்புகழ் கற்பது உன் நாமம் கசிந்து பத்தி
பண்ணியது உன் இருபாதாம் புயத்தில் பகல் இரவா
நண்ணியது உன்னை நயந்தோர் அவையத்து நான் முன்செய்த
புண்ணியம் ஏது என் அம்மே புவி ஏழையும் பூத்தவளே.

13. பூத்தவளே புவனம் பதினான்கையும் பூத்தவண்ணம்
காத்தவளே பின்கரந்தவளே! கறைக் கண்டனுக்கு
மூத்தவளே! என்றும் மூவா முகுந்தற்கு இளையவளே!
மாத்தவளே உன்னை அன்றிமற்றோர் தெய்வம் வந்திப்பதே!

14. வந்திப்பவர் உன்னை வானவர், தானவர், ஆனவர்கள்
சிந்திப்பவர் நல் திசைமுகர் நாரணர் சிந்தையுள்ளே
பந்திப்பவர் அழியாப் பரமானந்தர் பாரில் உன்னைச்
சந்திப்பவர்க்கு எளிதாம் எம்பிராட்டி நின் தண்ணளியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. தண்ணளிக்கு என்றுமுன்னே பலகோடிதவங்கள் செய்வார்
மண்ணளிக்கும் செல்வமோ பெறுவார்? மதிவானவர் தம்
விண்ணளிக்கும் செல்வமும் அழியா முத்தி வீடுமன்றோ?
பண்ணளிக்கும் சொல் பரிமள யாமளைப் பைங்கிளியே.

16. கிளியே! கிளைஞர் மனத்தே கிடந்து, கிளர்ந்து, ஒளிரும்
ஒளியே! ஒளிரும் ஒளிக்கிடமே எண்ணில் ஒன்றுமில்லா
வெளியே! வெளிமுதல் பூதங்களாகி விரிந்த அம்மே!
அளியேன் அறிவளவிற்கு அளவானது அதிசயமே.

17. அதிசயமான வடிவுடையாள், அரவிந்தமெல்லாம்
துதிசய ஆனன சுந்தரவல்லி, துணைஇரதி
பதிசயமானது அபசயம் ஆக முன் பார்த்தவர் தம்
மதிசயமாக அன்றோ வாமபாகத்தை வவ்வியதே.

18. வவ்விய பாகத்து இறைவரும், நீயும் மகிழ்ந்திருக்கும்
செவ்வியும், உங்கள் திருமணக்கோலமும் சிந்தையுள்ளே
அவ்வியம் தீர்த்தென்னை ஆண்டபொற்பாதமும் ஆகிவந்து
வெவ்விய காலன் என்மேல்வரும் போது வெளிநிற்கவே.

19. வெளிநின்ற நின் திருமேனியைப் பார்த்தென் விழியும் நெஞ்சும்,
களிநின்ற வெள்ளம் கரை கண்டதில்லை கருத்தினுள்ளே
தெளிநின்ற ஞானம் திகழ்கின்றது என்ன திருவுளமோ?
ஒளிநின்ற கோணங்கள் ஒன்பதும் மேவி உறைபவளே.

20. உறைகின்ற நின் திருக்கோயில் நின்கேள்வர் ஒருபக்கமோ?
அறைகின்ற நான்மறையின் அடியோ? முடியோ? அமுதம்
நிறைகின்ற வெண்திங்களோ? கஞ்சமோ? எந்தன் நெஞ்சமோ?
மறைகின்ற வாரிதியோ? பூரணாசல மங்கலையே.

21. மங்கலை! செங்கலசம் முலையாள்! மலையாள்! வருணச்
சங்கலை செங்கை! சகலகலாமயில்! தாவுகங்கை
பொங்கு அலைதங்கும் புரிசடையோன் புடையாள்! உடையாள்!
பிங்கலை! நீலி! செய்யாள்! வெளியாள்! பசும் பொற்கொடியே.

22. கொடியே! இளவஞ்சிக் கொம்பே எனக்கு வம்பே பழுத்த
படியே! மறையின் பரிமளமே! பனிமால் இமயப்
பிடியே! பிரமன் முதலாய தேவரைப் பெற்ற அம்மே!
அடியேன் இறந்து இங்கு இனிப்பிறவாமல் வந்தாண்டு கொள்ளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23. கொள்ளேன் மனத்தில் நின்கோலம் அல்லாது அன்பர் கூட்டம்
தன்னைவிள்ளேன் பரசமயம் விரும்பேன் வியன் மூவுலகுக்கு
உள்ளே, அனைத்தினுக்கும் புறம்பே உள்ளத்தே விளைந்த
கள்ளே! களிக்கும் களியே அளிய என் கண்மணியே.

24. மணியே! மணியின் ஒளியே! ஒளிரும் மணிபுனைந்த
அணியே! அணியும் அணிக்கு அழகே! அணுகாதவர்க்குப்
பிணியே! பிணிக்கு மருந்தே! அமரர் பெருவிருந்தே!
பணியேன் ஒருவரை நின் பத்மபாதம் பணிந்தபின்னே.

25. பின்னே திரிந்து உன் அடியாரைப் பேணிப் பிறப்பறுக்க
முன்னே தவங்கள் முயன்று கொண்டேன் முதல் மூவருக்கும்
அன்னே! உலகுக்கு அபிராமி என்னும் அருமருந்தே!
என்னே! இனி உன்னையான் மறவாமல் நின்று ஏத்துவனே.

26. ஏத்தும் அடியவர் ஈரேழுலகினையும் படைத்தும்,
காத்தும், அழித்தும் திரிபவராம் கமழ் பூங்கடம்பு
சாத்தும்குழல் அணங்கே! மணம் நாறும் நின்தாள் இணைக்கு என்
நாத்தங்கு புன்மொழி ஏறியவாறு நகையுடைத்தே.

27. உடைத்தனை வஞ்சப் பிறவியை உள்ளம் உருகும் அன்பு
படைத்தனை பத்மபதயுகம் சூடும் பணி எனக்கே
அடைத்தனை நெஞ்சத்து அழுக்கை எல்லாம் நின் அருள்புனலால்
துடைத்தனை சுந்தரி! நின்னருள் ஏதென்று சொல்லுவதே.

28. சொல்லும் பொருளும் என நடமாடும் துணைவருடன்
புல்லும் பரிமளப் பூங்கொடியே நின் புதுமலர்த்தாள்
அல்லும் பகலும் தொழும் அவர்க்கே அழியா அரசும்
செல்லும் தவநெறியும் சிவலோகமும் சித்திக்குமே.

29. சித்தியும், சித்திதரும் தெய்வமுமாகி திகழும்
பராசக்தியும், சக்தி தழைக்கும் சிவமும் தவம் முயல்வார்
முத்தியும், முத்திக்கு வித்தும், வித்தாகி முளைத்தெழுந்த
புத்தியும், புத்தியின் உள்ளே புரக்கும் புரத்தையன்றே.

30.அன்றே தடுத்து! என்னை ஆண்டுகொண்டாய் கொண்டதல்ல
என்கை நன்றே உனக்கு இனி நான் என்செயினும், நடுக்கடலுள்
சென்றே விழினும் கரையேற்றுகை நின் திருவுளமே
ஒன்றே! பல உருவே! அருவே! என் உமையவளே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31. உமையும், உமையொரு பாகனும் ஏக உருவில் வந்திங்கு
எமையும் தமக்கு அன்பு செய்ய வைத்தார் இனி எண்ணுதற்குச்
சமையங்களும் இல்லை ஈன்றெடுப்பாள் ஒரு தாயும் இல்லை
அமையும் அமையுறு தோளியர் மேல் வைத்த ஆசையுமே.

32. ஆசைக்கடலில் அகப்பட்டு அருளற்ற அந்தகன் கைப்
பாசத்தில் அல்லல்பட இருந்தேனை, நின் பாதம் என்னும்
வாசக்கமலம் தலைமேல் வலியவைத்து ஆண்டு கொண்ட
நேசத்தை என் சொல்லுவேன்? ஈசர்பாகத்து நேரிழையே!

33. இழைக்கும் வினைவழியே அடும் காலன் எனைநடுங்க
அழைக்கும் பொழுதுவந்து அஞ்சல் என்பாய் அத்தர் சித்தமெல்லாம்
குழைக்கும் களபக் குவிமுலை யாமளைக் கோமளையே!
உழைக்கும் பொழுது உன்னையே அன்னையே என்பன் ஓடிவந்தே.

34. வந்தே சரணம் புகும் அடியாருக்கு வான்உலகம்
தந்தே பரிவொடு தான்போய் இருக்கும் சதுர்முகமும்
பைந்தேன் அலங்கல் பருமணி ஆகமும் பாகமும் பொன்
செந்தேன் மலரும் அலர்கதிர் ஞாயிறும் திங்களுமே.

35. திங்கள் பசுவின் மணம் நாறும் சீறடி சென்னிவைக்க
எங்கட்கு ஒருதவம் எய்தியவா! எண்ணிறந்த விண்ணோர்
தங்கட்கும் இந்தத் தவம் எய்துமோ? தரங்கக் கடலுள்
வெங்கண் பணியணைமேல் துயில்கூரும் விழுப்பொருளே.

36. பொருளே! பொருள் முடிக்கும் போகமே! அரும்போகம் செய்யும்
மருளே! மருளில் வரும் தெருளே என் மனத்து வஞ்சத்து
இருளேதும் இன்றி ஒளிவெளியாகி இருக்கும் உன்தன்
அருளேது அறிகின்றிலேன் அம்புயாதனத்து அம்பிகையே!

37. கைக்கே அணிவது கன்னலும் பூவும் கமலம் அன்ன
மெய்க்கே அணிவது வெண்முத்து மாலை விட அரவின்
பைக்கே அணிவது பண்மணிக்கோவையும் பட்டும், எட்டுத்
திக்கே அணியும் திருவுடையான் இடம் சேர்பவளே!

38. பவளக் கொடியில் பழுத்த செவ்வாயும், பனிமுறுவல்
தவளத் திருநகையும் துணையா எங்கள் சங்கரனைத்
துவளப் பொருது துடியிடை சாய்க்கும் துணை முலையாள்
அவளைப் பணிமின் கண்டீர் அமராவதி ஆளுகைக்கே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

39. ஆளுகைக்கு உன் தன் அடித்தாமரைகள் உண்டு அந்தகன்பால்
மீளுகைக்கு உன் தன் விழியின் கடைஉண்டு மேல் இவற்றின்
மூளுகைக்கு என்குறை நின்குறையே அன்று முப்புரங்கள்
மாளுகைக்கு அம்பு தொடுத்த வில்லான் பங்கில் வாள்நுதலே!

40. வாணுதல் கண்ணியை, விண்ணவர் யாவரும் வந்திறைஞ்சிப்
பேணுதற்கு எண்ணிய எம்பெருமாட்டியைப் பேதைநெஞ்சில்
காணதற்கு அண்ணியள் அல்லாத கன்னியைக் காணும் அன்பு
பூணுதற்கு எண்ணிய எண்ணமன்றோ முன்செய் புண்ணியமே.

41. புண்ணியம் செய்தனமே மனமே! புதுப் பூங்குவளைக்
கண்ணியும், செய்ய கணவரும் கூடி நம் காரணத்தால்
நண்ணி இங்கே வந்து தம் அடியார்கள் நடுவிருக்கப்
பண்ணிநம் சென்னியின் மேல் பத்மபாதம் பதித்திடவே.

42. இடம் கொண்டு விம்மி, இணைகொண்டு இறுகி, இளகி, முத்து
வடம்கொண்ட கொங்கை மலை கொண்டு, இறைவர் வலிய நெஞ்சை
நடம்கொண்ட கொள்கை நலங்கொண்ட நாயகி நல்லரவின்
படங்கொண்ட அல்குல் பனிமொழி வேதப்பரிபுரையே.

43. பரிபுரச் சீறடி! பாசாங் குசை! பஞ்ச பாணி! இன்சொல்
திரிபுர சுந்தரி சிந்துர மேனியள் தீமைநெஞ்சில்
பரிபுர வஞ்சரை அஞ்சக் குனிபொருப்புச் சிலைக்கை
எரிபுரை மேனி இறைவர் செம்பாகத்து இருந்தவளே.

44. தவளே! இவள் எங்கள் சங்கரனார் மனை மங்கலமாம்
அவளே, அவர் தமக்கு அன்னையும் ஆயினள் ஆகையினால்
இவளே, கடவுளர் யாவர்க்கும் மேலை இறைவியுமாம்
துவளேன், இனியொரு தெய்வம் உண்டாக மெய்த்தொண்டு செய்தே.

45. தொண்டு செய்யாது நின் பாதம் தொழாது, துணிந்து இச்சையே
பண்டு செய்தார் உளரோ? இலரோ? அப்பரிசு அடியேன்
கண்டு செய்தால் அது கைதவமோ? அன்றிச் செய்தவமோ?
மிண்டு செய்தாலும் பொறுக்கை நன்றே பின் வெறுக்கை அன்றே.

46. வெறுக்கும் தகைமைகள் செய்யினும் தம் அடியாரை மிக்கோர்
பொறுக்கும் தகைமை புதியதன்றே புது நஞ்சைஉண்டு
கறுக்கும் திருமிடற்றான் இடப்பாகம் கலந்த பொன்னே!
மறுக்கும் தகைமைகள் செய்யினும், யான் உன்னை வாழ்த்துவனே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

47. வாழும்படி ஒன்று கண்டு கொண்டேன் மனத்தே ஒருவர்
வீழும்படி அன்று, விள்ளும் படி அன்று, வேலைநிலம்
ஏழும் பருவரை எட்டும் எட்டாமல் இரவுபகல்
சூழும் சுடர்க்கு நடுவே கிடந்து சுடர்கின்றதே.

48. சுடரும் கலைமதி துன்றும் சடைமுடிக் குன்றில் ஒன்றிப்
படரும் பரிமளப் பச்சைக் கொடியைப் பதித்து நெஞ்சில்
இடரும் தவிர்த்து இமைப்போது இருப்பார் பின்னும் எய்துவரோ
குடரும் கொழுவும் குருதியும் தோயும் குரம்பையிலே.

49. குரம்பை அடுத்துக் குடிபுக்க ஆவி வெங்கூற்றுக்கிட்ட
வரம்பை அடுத்து மறுகும் அப்போது வளைக்கை அமைத்து
அரம்பை அடுத்த அரிவையர் சூழவந்து அஞ்சல்என்பாய்
நரம்பை அடுத்த இசைவடிவாய் நின்ற நாயகியே.

50. நாயகி நான்முகி நாராயணி கை நளின பஞ்ச
சாயகி சாம்பவி சங்கரி சாமளை சாதிநச்சு
வாயகி மாலினி வாராகி சூலினி மாதங்கி என்று
ஆயகி ஆதி உடையாள் சரணம் அரண் நமக்கே.

51. அரணம் பொருள் என்றருள் ஒன்றிலாத அசுரர் தங்கள்
முரண்அன்றழிய முனிந்த பெம்மானும், முகுந்தனுமே
சரணம் சரணம் எனநின்ற நாயகி தன் அடியார்
மரணம், பிறவி இரண்டும் எய்தார் இந்த வையகத்தே.

52. வையம், துரகம், மதகரி, மாமகுடம், சிவிகை
பெய்யும் கனகம், பெருவிலை ஆரம், பிறைமுடித்த
ஐயன் திருமனையாள் அடித்தாமரைக்கு, அன்பு முன்பு
செய்யும் தவம் உடையார்க்கு உளவாகிய சின்னங்களே.

53. சின்னஞ்சிறிய மருங்கினில் சாத்திய செய்யபட்டும்,
பென்னம் பெரிய முலையும், முத்தாரமும் பிச்சிமொய்த்து
கன்னங்கரிய குழலும்கண் மூன்றும் கருத்தில் வைத்துத்
தன்னந்தனி இருப்பார்க்கு இது போலும் தவமில்லையே.

54. இல்லாமை சொல்லி ஒருவர் தம்பால்சென்று இழிவுபட்டு
நில்லாமை நெஞ்சில் நினைகுவிரேல், நித்தம் நீடுதவம்
கல்லாமை கற்ற கயவர்தம்பால் ஒரு காலத்திலும்
செல்லாமை வைத்த திரிபுரை பாதங்கள் சேர்மின்களே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

55. மின்னாயிரம் ஒரு மெய்வடிவாகி விளங்குகின்ற
அன்னாள் அகமகிழ் ஆனந்தவல்லி அருமறைக்கு
முன்னாய் நடுஎங்குமாய் முடிவாய முதல்விதன்னை
உன்னாது ஒழியினும், உன்னினும் வேண்டுவது ஒன்று இல்லையே.

56. ஒன்றாய் அரும்பிப் பலவாய் விரிந்து இவ்வுலகு எங்குமாய்
நின்றாள், அனைத்தையும் நீங்கி நிற்பாள்என்தன் நெஞ்சினுள்ளே
பொன்றாது நின்று புரிகின்றவா இப்பொருள் அறிவார்
அன்று ஆலிலையில் துயின்ற பெம்மானும் என் ஐயனுமே.

57. ஐயன் அளந்தபடி இருநாழி கொண்டு அண்டமெல்லாம்
உய்ய அறம்செய்யும் உன்னையும் போற்றி ஒருவர்தம்பால்
செய்ய பசுந்தமிழ்ப் பாமாலையும் கொண்டு சென்று பொய்யும்
மெய்யும் இயம்ப வைத்தாய் இதுவோ உன்தன் மெய்யருளே.

58. அருணாம் புயத்தும் என் சித்தாம் புயத்தும் அமர்ந்திருக்கும்
தருணாம் புயமுலைத் தையல் நல்லாள், தகை சேர்நயனக்
கருணாம் புயமும் வதனாம் புயமும் கராம்புயமும்,
சரணாம் புயமும் அல்லாற் கண்டிலேன் ஒருதஞ்சமுமே.

59. தஞ்சம் பிறதில்லை ஈதல்லது என்று உன் தவநெறிக்கே
நெஞ்சம் பயில நினைக்கின்றிலேன் ஒன்றை நீள்சிலையும்
அஞ்சு அம்பும் மிக்கலராக நின்றாய் அறியார் எனினும்
பஞ்சு அஞ்சும் மெல்லடியார் அடியார் பெற்ற பாலரையே.

60. பாலினும் சொல் இனியாய்! பனி மாமலர்ப்பாதம் வைக்க
மாலினும் தேவர் வணங்கநின்றோன் கொன்றை வார்சடையின்
மேலினும் கீழ்நின்று வேதங்கள் பாடும் மெய்ப்பீடம் ஒரு
நாலினும் சாலநன்றோ அடியேன் முடைநாய்த்தலையே?

61. நாயேனையும் இங்கு ஒரு பொருளாக நயந்துவந்து
நீயே நினைவின்றி ஆண்டுகொண்டாய் நின்னை உள்ளவண்ணம்
பேயேன் அறியும் அறிவுதந்தாய் என்ன பேறுபெற்றேன்?
தாயே! மலைமகளே! செங்கண்மால் திருத்தங்கச்சியே.

62. தங்கச்சிலை கொண்டு தானவர் முப்புரம் சாய்த்து, மத
வெங்கண் கரிபுரி போர்த்த செஞ்சேவகன் மெய்யடையக்
கொங்கைக் குரும்பைக் குறியிட்ட நாயகி! கோகனகச்
செங்கைக் கரும்பும், அலரும் எப்போதும் என் சிந்தையதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

63. தேறும்படி சில ஏதுவும் காட்டிமுன் செல்கதிக்குக்
கூறும்பொருள் குன்றில்கொட்டும் தறிகுறிக்கும் சமயம்
ஆறும் தலைவி இவளாய் இருப்பது அறிந்திருந்தும்
வேறும் சமயம் உண்டென்று கொண்டாடிய வீணருக்கே.

64. வீணே பலிகவர் தெய்வங்கள் பாற்சென்று மிக்க அன்பு
பூணேன் உனக்கு அன்பு பூண்டு கொண்டேன் நின்புகழ்ச்சியன்றிப்
பேணேன் ஒருபொழுதும் திருமேனிப் பிரகாசமின்றிக்
காணேன் இருநிலமும் திசை நான்கும் ககனமுமே.

65. ககனமும், வானமும், புவனமும் காணவிற் காமன் அங்கம்
தகனம்முன் செய்த தவப்பெருமாற்குத் தடக்கையும் செம்
முகனும் முந்நான்கு இருமூன்றெனத் தோன்றிய மூதறிவின்
மகனும் உண்டாயது அன்றோ? வல்லி நீ செய்த வல்லபமே!

66. வல்லபம் ஒன்றறியேன் சிறியேன் நின் மலரடிச்செம்
பல்லவம் அல்லது பற்று ஒன்றிலேன் பசும் பொற்பொருப்பு
வில்லவர் தம்முடன் வீற்றிருப்பாய் வினையேன்தொடுத்த
சொல் அவமாயினும் நின்திருநாமங்கள் தோத்திரமே.

67. தோத்திரம் செய்து, தொழுது, மின்போலும் நின் தோற்றம்ஒரு
மாத்திரைப் போதும் மனதில் வையாதவர் வண்மை, குலம்
கோத்திரம், கல்வி, குணம், குன்றி நாளும் குடில்கள்தொறும்
பாத்திரம் கொண்டு பலிக்கு உழலாநிற்பர் பாரெங்குமே.

68. பாரும், புனலும், கனலும், வெங்காலும், படர்விசும்பும்,
ஊரும் முருகு சுவைஒளி ஊறொலி ஒன்றுபடச்
சேரும் தலைவி, சிவகாமசுந்தரி சீரடிக்கே
சாரும் தவமுடையார் படையாத தனம் இல்லையே.

69. தனந்தரும் கல்வி தரும் ஒருநாளும் தளர்வறியா
மனந்தரும் தெய்வ வடிவுந்தரும் நெஞ்சில் வஞ்சமில்லா
இனந்தரும் நல்லன எல்லாம் தரும் அன்பர் என்பவர்க்கே
கனந்தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே.

70. கண்களிக்கும்படி கண்டுகொண்டேன் கடம்பாடவியில்
பண்களிக்கும் குரல் வீணையும் கையும் பயோதரமும்
மணிகளிக்கும் பச்சை வண்ணமும் ஆகி மதங்கர் குலப்
பெண்களில் தோன்றிய எம்பெருமாட்டிதன் பேரழகே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

71. அழகுக்கு ஒருவரும் ஒவ்வாதவல்லி அருமறைகள்
பழகிச் சிவந்த பதாம் புயத்தாள் பனி மாமதியின்
குழவித் திருமுடிக் கோமள யாமளைக் கொம்பிருக்க
இழவுற்று நின்ற நெஞ்சே இரங்கேல் உனக்கு என் குறையே!

72. என்குறை தீரநின்று ஏத்துகின்றேன் இனி யான் பிறக்கின்
நின்குறையே அன்றி யார் குறை காண் இரு நீள்விசும்பின்
மின்குறை காட்டி மெலிகின்ற நேரிடை மெல்லியலாய்?
தன்குறை தீர எங்கோன் சடைமேல்வைத்த தாமரையே.

73. தாமம் கடம்பு படைபஞ்சபாணம் தனுக்கரும்பு
யாமம் வயிரவர் ஏத்தும் பொழுது எமக்கென்று வைத்த
சேமம் திருவடி செங்கைகள் நான்கு ஒளி செம்மை அம்மை
நாமம் திரிபுரை ஒன்றோடு இரண்டு நயனங்களே.

74. நயனங்கள் மூன்றுடை நாதனும், வேதமும், நாரணனும்
அயனும் பரவும் அபிராமவல்லி அடியிணையை
பயன்என்று கொண்டவர் பாவையர் ஆடவும், பாடவும்பொன்
சயனம் பொருந்து தமனியக் காவினில் தங்குவரே.

75. தங்குவர் கற்பகத் தாருவின் நீழலில் தாயரின்றி
மங்குவர், மண்ணில் வழுவாப் பிறவியை மால்வரையும்
பொங்குவர் ஆழியும்! ஈரேழ்புவனமும் பூத்த உந்திக்
கொங்கிவர் பூங்குழலாள் திருமேனி குறித்தவரே.

76. குறித்தேன் மனத்தில் நின்கோலம் எல்லாம் நின் குறிப்பறிந்து
மறித்தேன் மறலிவருகின்ற நேர்வழி வண்டுகிண்டி
வெறித்தேன் அவிழ்கொன்றை வேணிப்பிரான் ஒருகூற்றை மெய்யில்
பறித்தே குடிபுகுதும் பஞ்சபாண பயிரவியே.

77. பயிரவி, பஞ்சமி, பாசாங்குசை, பஞ்சபாணி, வஞ்சவர்
உயிரவி உண்ணும் உயர்சண்டி, காளி ஒளிரும்கலா
வயிரவி, மண்டலி, மாலினி, சூலி வராகி என்றே
செயிரவி நான்மறை சேர்திருநாமங்கள் செப்புவரே.

78. செப்பும், கனக கலசமும் போலும் திருமுலைமேல்
அப்பும் களப அபிராமவல்லி! அணிதரளக்
கொப்பும், வயிரக் குழையும், விழியின் கொழுங்கடையும்
துப்பும் நிலவும் எழுதிவைத்தேன்என் துணைவிழிக்கே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

79. விழிக்கே அருளுண்டு அபிராமவல்லிக்கு வேதம்சொன்ன
வழிக்கே வழிபட நெஞ்சுண்டு எமக்கு அவ்வழி கிடக்கப்
பழிக்கே சுழன்று வெம் பாவங்களே செய்து பாழ்நரகக்
குழிக்கே அழுந்தும் கயவர் தம்மோடு என்ன கூட்டினியே.

80. கூட்டியவா! என்னைத் தன் அடியாரில் கொடியவினை
ஓட்டியவா! என்கண் ஓடியவா! தன்னை உள்ளவண்ணம்
காட்டியவா! கண்ட கண்ணும் மனமும் களிக்கின்றவா!
ஆட்டியவா நடம் ஆடகத்தாமரை ஆரணங்கே.

81. அணங்கே! அணங்குகள் நின் பரிவாரங்கள் ஆகையினால்
வணங்கேன் ஒருவரை வாழ்த்துகிலேன் நெஞ்சில் வஞ்சகரோடு
இணங்கேன் எனது உனது என்றிருப்பார் சிலர் யாவரொடும்
பிணங்கேன் அறிவொன்றிலேன் என்கண் நீவைத்த பேரளியே.

82. அளியார் கமலத்தில் ஆரணங்கே! அகிலாண்டமும் நின்
ஒளியாக நின்ற ஒளிர்திருமேனியை உள்ளுதொறும்
களியாகி, அந்தக்கரணங்கள் விம்மி, கரைபுரண்டு,
வெளியாய்விடின், எங்ஙனே மறப்பேன் நின்விரகினையே.

83. விரவும் புதுமலர் இட்டு நின்பாத விரைக்கமலம்
இரவும் பகலும் இறைஞ்ச வல்லார், இமையோர் எவரும்
பரவும் பதமும், அயிராவதமும், பகீரதியும்
உரவும் குலிசமும், கற்பகக் காவும் உடையவரே.

84. உடையாளை, ஒல்கு செம்பட்டு உடையாளை ஒளிர்மதிசெஞ்
சடையாளை வஞ்சகர் நெஞ்சடையாளை, தயங்குநுண்ணூல்
இடையாளை, எங்கள்பெம்மான் இடையாளை, இங்கு என்னை இனிப்
படையாளை, உங்களையும் படையாவண்ணம் பார்த்திருமே.

85. பார்க்கும் திசைதொறும் பாசாங்குசமும், பனிச்சிறை வண்டு
ஆர்க்கும் புதுமலர் ஐந்தும், கரும்பும் என் அல்லல்எல்லாம்
தீர்க்கும் திரிபுரையாள் திருமேனியும் சிற்றிடையும்,
வார்க்குங்கும முலையும், முலைமேல் முத்துமாலையுமே.

86. மாலயன் தேட, மறைதேட, வானவர் தேட, நின்ற
காலையும், சூடகக் கையையும், கொண்டு, கதித்தகப்பு
வேலை வெங்காலன் என்மேல் விடும்போது வெளிநில்கண்டாய்
பாலையும் தேனையும், பாகையும் போலும் பணிமொழியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

87. மொழிக்கும், நினைவுக்கும் எட்டாத நின் திருமூர்த்தி என்தன்
விழிக்கும் வினைக்கும் வெளிநின்றதால்! விழியால் மதனை
அழிக்கும் தலைவர் அழியா விரதத்தை அண்டமெல்லாம்
பழிக்கும் படி ஒருபாகம் கொண்டாளும் பராபரையே.

88. பரம் என்று உனை அடைந்தேன் தமியேனும் உன் பக்தருக்குள்
தரம் அன்று இவன்என்று தள்ளத்தகாது தரியலர் தம்
புரம்அன்று எரியப் பொருப்புவில்வாங்கிய போதில் அயன்
சிரம் ஒன்று செற்ற கையான் இடப்பாகம் சிறந்தவளே!

89. சிறக்கும் கமலத் திருவே! நின்சேவடி சென்னிவைக்கத்
துறக்கம் தரும், நின் துணைவரும் நீயும் துரியம் அற்ற
உறக்கம் தரவந்து உடம்போடு உயிர் உறவற்ற, அறிவு
மறக்கும் பொழுது, என்முன்னே வரல்வேண்டும் வருந்தியுமே.

90. வருந்தா வகைஎன் மனத்தாமரையினில் வந்துபுகுந்து
இருந்தாள் பழைய இருப்பிடமாக இனிஎனக்குப்
பொருந்தாது ஒருபொருள் இல்லை விண்மேவும் புலவருக்கு
விருந்தாக, வேலை மருந்தானதை நல்கும் மெல்லியலே.

91. மெல்லிய நுண் இடைமின் அனையாளை, விரிசடையோன்
புல்லிய மென்முலை பொன் அனையாளைப் புகழ்ந்துமறை
சொல்லிய வண்ணம் தொழும்அடியாரைத் தொழுமவர்க்குப்
பல்லியம் ஆர்த்தெழ வெண்பகடு ஊரும் பதம்தருமே.

92. பதத்தே உருகி, நின்பாதத்திலே மனம் பற்றி, உன்தன்
இதத்தே ஒழுக அடிமைகொண்டாய் இனியான் ஒருவர்
மதத்தே மதிமயங்கேன் அவர் போன வழியும் செல்லேன்
முதல்தேவர் மூவரும், யாவரும் போற்றும் முகிழ்நகையே.

93. நகையே இஃதிந்த ஞாலம் எல்லாம்பெற்ற நாயகிக்கு
முகையே முகிழ்முலை மானே முதுகண் முடிவில் அந்த
வகையே பிறவியும் வம்பே மலைமகள் என்பது நாம்
மிகையே இவள்தன் தகைமையை நாடி விரும்புவதே.

94. விரும்பித் தொழும் அடியார், விழிநீர்மல்கி மெய்புளகம்
அரும்பி, ததும்பிய ஆனந்தமாகி அறிவிழந்து,
சுரும்பிற் களித்து மொழி தடுமாறி, முன் சொன்னஎல்லாம்
தரும்பித்தர் ஆவரென்றால், அபிராமி சமயம் நன்றே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

95. நன்றே வருகினும், தீதே விளைகினும், நான் அறிவது
ஒன்றேயும் இல்லை உனக்கே பரம் எனக்கு உள்ள எல்லாம்
அன்றே உனதென்று அளித்து விட்டேன் அழியாத குணக்
குன்றே! அருட்கடலே! இமவான் பெற்ற கோமளமே!

96. கோமள வல்லியை அல்லியம் தாமரைக்கோயில் வைகும்
யாமள வல்லியை, ஏதம் இலாளை, எழுதரிய
சாமள மேனிச் சகலகலா மயில் தன்னைத் தம்மால்
ஆமளவும் தொழுவார் எழுபாருக்கும் ஆதிபரே.

97. ஆதித்தன், அம்புலி, அங்கி, குபேரன், அமரர்தங்கோன்
போதிற் பிரமன், புராரி, முராரி, பொதியமுனி,
காதிப் பொருபடைக் கந்தன், கணபதி, காமன் முதல்
சாதித்த புண்ணியர் எண்ணிலர் போற்றுவர் தையலையே.

98. தைவந்து நின்னடித் தாமரைசூடிய சங்கரற்குக்
கைவந்த தீயும், தலைவந்த ஆறும் கரந்தது எங்கே?
மெய்வந்த நெஞ்சில் அல்லால் ஒருகாலும் விரகர் தங்கள்
பொய்வந்த நெஞ்சில் புக அறியா மடப் பூங்குயிலே.

99. குயிலாய் இருக்கும் கடம்பாடவியிடை கோல இயல்
மயிலாய் இருக்கும் இமயாசலத்திடை வந்துதித்த
வெயிலாய் இருக்கும் விசும்பில் கமலத்தின் மீது அன்னமாம்
கயிலாயருக்கு அன்று இமவான் அளித்த கனங்குழையே.

100. குழையைத் தழுவிய கொன்றை அம்தார் கமழ் கொங்கைவல்லி
கழையைப் பொருத திருநெடுந்தோளும், கரும்புவில்லும்
விழையப்பொருதிறல்வேரி அம்பாணமும் வெண்ணகையும்,
உழையப் பொருகண்ணும், நெஞ்சில் எப்போதும் உதிக்கின்றனவே.

101. நூற்பயன்
ஆத்தாளை, எங்கள் அபிராமவல்லியை, அண்டம் எல்லாம்
பூத்தாளை, மாதுளம் பூநிறத்தாளை, புவிஅடங்க காத்தாளை
ஐங்கணை பாசாங்குசமும், கரும்பும், அங்கை சேர்த்தாளை,
முக்கண்ணியைத் தொழுவார்க்கு ஒரு தீங்கு இல்லையே

******



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகன் தோத்திரம் – அருணகிரிநாதர் அருளிய கந்தர் அநுபூதி

காப்புச் செய்யுள்

நெஞ்சக் கனகல்லு நெகிழ்ந்துருகத்
தஞ்சத் தருள்சண் முகனுக் கியல்சேர்
செஞ்சொற் புனைமாலை சிறந் திடவே
பஞ்சக் கரவானை பதம் பணிவாம்.

"சரணம்" என்று தம்மை வந்தடைந்தவர்களுக்கு அருள்புரியும் ஆறுமுகக் கடவுளின் அணிகலனாகக் கல்போன்ற நெஞ்சமும் இளகி உருகுமாறு செம்மையான இலக்கியத் தமிழ்ச் சொற்களால் தொடுக்கப்பெற்ற கந்தரநுபூதி என்னும் கவிமாலையானது சிறப்பாக அமையும் பொருட்டு ஐந்து கரங்களையுடைய திரு விநாயகப்பெருமானின் திருவடிகளைப் பணிந்து வணங்குகின்றேன்"

01) ஆடும் பரிவே லணிசே வலெனப்
பாடும் பணியே பணியா வருள்வாய்
தேடும் கயமா முகனைச் செருவிற்
சாடுந் தனியானை சகோதரனே!

"ஆடிவரும் குதிரையைப்போன்ற மயில்வாகனமே! வேலாயுதமே! அழகான சேவலே!" என்று துதிசெய்து திருப்பாடல்களைப் பாடுவதையே அடியேனின் வாழ்நாட்பணியாக இருக்கும்படி அருள்புரிவீராக! "கஜமுகாசுரன்" எனப்படும் ஓர் அசுரன் பெரியதொரு யானையின் முகத்தையுடையவனாகத் தோன்றி விண்ணோர்களைப் பகைவர்களாகக் கருதி அவர்களைத் தேடிச்சென்றபோது, போர்க்களத்தில் அவனைக் கொன்றழித்த திருவிநாயகப்பெருமானின் சோதரனாகிய கந்தப்பெருமானே!.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

02) உல்லாச நிராகுல யோக விதச்
சல்லாப விநோதனு நீ யலையோ
எல்லாமற என்னை இழந்த நலஞ்
சொல்லாய் முருகா சுரபூ பதியே!

திருமுருகப்பெருமானே! விண்ணோர்களின் மன்னரே! உள்ளக் களிப்பும் கலக்கமின்மையும் அற்று, பல்வகை யோக-மார்க்க வழிகள் சம்பந்தமான பேச்சுக்களில் ஈடுபட்டு மகிழ்ச்சியைத் தருபவர் தேவரீர் ஒருவரே அன்றோ! எல்லாவிதமான பந்தங்களும், "யான்", "எனது" எனப்படும் ஆணவ மலங்கள் அழிந்து தொலைவதற்குரிய மேலான ஆன்மிக உபதேசங்களை அடியேனுக்கு உபதேசித்தருள்வீராக!

03) வானோ புனல்பார் கனல்மா ருதமோ
ஞானோ தயமோ நவில்நான் மறையோ
யானோ மனமோ எனையாண் டவிடந்
தானோ பொருளா வது சண் முகனே?

ஆறுமுகக் கடவுளே! "பரம்பொருள்" என்பது யாது? ஆகாயமோ? நீரோ? பூமியோ? நெருப்போ? காற்றோ? ஞானத்தினால் அறியக்கூடிய பொருளோ? ஓதப்படுகின்ற நான்கு வேதங்களோ? "நான்" என்று சொல்லப்படுகின்ற சீவனோ? மனமோ? "நீயேநான்-நானேநீ" என்று கூறி அடியேனை ஆட்கொண்ட தேவரீரோ?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04) வளைபட்டகைம் மாதொடு மக்க ளெனுந்
தளைபட் டழியத் தகுமோ தகுமோ
கிளைபட் டெழுசூ உரமுங் கிரியுந்
தொளைபட் டுருவத் தொடுவே லவனே!

வளையல் அணிந்த கைகளையுடைய மனைவியொடு மக்கள் என்று சொல்லப்படும் குடும்பப் பந்தத்தில் அகப்பட்டு அடியேன் அழிந்துபோவது நியாயமாகுமோ? அசுரர்களாகிய தன் சுற்றத்தினர் சூழ, போரிடுவதற்கு எழுந்த சூரபன்மனின் மார்பையும் அவன் தன் சுற்றத்தினருடன் ஒளிந்திருந்த கிரவுஞ்ச மலையையும் தொளைத்துக்கொண்டு ஊடுருவிச் செல்லும்படியாக விடுவித்த வேலாயுதத்தையுடைய கந்தப்பெருமானே!

05) மகமாயை களைந்திட வல்லபிரான்
முகமாறு மொழிந்து மொழிந் திலனே
அகமாடை மடந்தைய ரென் றயருஞ்
சகமாயையுள் நின்று தயங்குவதே!

இவ்வுலக வாழ்க்கையைச் சார்ந்த பொய்யான காட்சிகளாலும் நம்பிக்கைகளாலுமான பெரிய மாயையை நீக்கவல்ல கடவுளான திருமுருகப்பெருமான் தன் ஆறு திருமுகங்களாலும் பல வழிகளில் உபதேசித்து அருளிய தத்துவங்களை, அந்தோ, மீண்டும் நினைவுகூர்ந்து சொல்லாமற் போய்விட்டேனே! "வீடு-துணிமணி-மாதர்கள்" ஆகியவற்றால் இறுதியில் பெரும் வருத்தத்தைத் தரும் பொய்யான இவ்வுலக மாயையில் அகப்பட்டுக் கொண்டு அதை உண்மை என்று நம்பி அடியேன் இன்னும் தயங்கிக் கொண்டிருக்கின்றேனே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06) திணியா னமனோ சிலைமீ துனதாள்
அணியா ரரவிந்த மரும்புமதோ?
பணியா வென வள்ளி பதம் பணியுந்
தணியா வதிமோக தயாபரனே!

அடியேனின் கடினமான கல்போன்ற மனத்தின்மீது தேவரீரின் திருவடிகளாகிய அழகுநிறைந்த தாமரைப் பூக்கள் மலரக்கூடுமோ? வள்ளியம்மையாரின் திருவடிகள் மீது குறையாத மிக்க காதல் கொண்ட கருணாகரனே! அடியேன் செய்யவேண்டிய பணிகள் எவை என்று கூறுவீரோ?

07) கெடுவாய் மனனே கதிகேள் கரவா
திடுவாய் வடிவே லிறைதாள் நினைவாய்
சுடுவாய் நெடுவே தனைதூள் படவே
விடுவாய் விடுவாய் வினையா வையுமே!

அழிந்துபோகின்ற மனமே! நீ முக்திபெறும் வழியைக் கூறுகின்றேன், கேட்பாயாக! உன்னிடம் உள்ளதை மறைக்காமல் பிறருக்குத் தானமாகக் கொடுப்பாயாக! கூர்மையான வேலினைத் தாங்கிய இறைவன் திருமுருகப்பெருமானின் திருவடிகளை நினைந்து தியானம் செய்துவருவாயாக! நீண்டகாலமாகத் தொடர்ந்துவருகின்ற பிறவித் துன்பமாகிய வேதனையைத் தூளாக்கும் பொருட்டு அந்தத் துன்பத்தின் காரணமாகிய பற்றினைச் சுட்டெரிப்பாயாக! வினைகள் எல்லாவற்றிலிருந்தும் விடுபட்டிருப்பாயாக!

08) அமரும் பதிகே ளகமா மெனுமிப்
பிமரங் கெடமெய்ப் பொருள் பேசியவா
குமரன் கிரிராச குமாரி மகன்
சமரம்பொரு தானவ நாசகனே!

குமாரப்பெருமானே! அடியேன் விரும்பி வாழும் ஊர், மனைவி மக்கள் முதலிய உறவினர்கள், "நான்" என்று சொல்லப்படுகின்ற ஆன்மா ஆகியவை பற்றிய அடியேனின் மயக்கம் கெடுமாறு உண்மைப் பொருளைப் போதித்தவரே! என்றென்றும் குமரனாகவும் (இமய) மலையரசனின் குமாரி (பார்வதிதேவியின்) மைந்தனாகவும் இருந்துகொண்டு, போர்க்களத்தில் போரிடும் (சூரபன்மன் முதலிய) அசுரர்களை அழித்த பெருமானே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09) மட்டூர்குழல் மங்கையர் மையல் வலைப்
பட்டுசல் படும் பரிசென் றொழிவேன்
தட்டு டறவேல் சயிலத் தெறியும்
நிட்டுர நிராகுல நிர்ப்பயனே!

தேன்சொரியும் நறுமண மலர்களால் அலங்கரிக்கப்பட்ட கூந்தலையுடைய பெண்களின் மோகவலையில் சிக்கிக்கொண்டு உள்ளம் தடுமாற்றம் அடையும் துன்பத்திலிருந்து அடியேன் எப்போது நீங்குவேன்? தடைகள் எதுவுமின்றி கிரவுஞ்ச மலையை ஊடுருவிச் செல்லும்படி வேற்படையை எறிந்த வலிமையுடையவரும், துன்பமும் பயமும் அற்றவருமான திருமுருகப்பெருமானே!

10) கார்மா மிசைகா லன்வரிற் கலபத்
தேர்மா மிசைவந் தெதிரப் படுவாய்
தார்மார்ப வலாரி தலாரி யெனுஞ்
சூர்மா மடியத் தொடுவே லவனே!

கரிய எருமைக்கடாவின்மீது அடியேனின் உயிரைக் கவர்ந்து செல்லவேண்டி யமன் வரும்பொழுது அழகிய தோகைகளையுடைய மயிலின்மீது ஏறி அடியேன் முன்வந்து காப்பாற்றியருள்வீராக! மாலைகளால் அலங்கரிக்கப்பட்ட மார்பினையுடையவரே! "வலாரி" எனப்படும் இந்திரனின் விண்ணுலகத்திற்குப் விரோதியாகிய சூரபன்மன் ஒளிந்திருந்த மாமரம் அழிந்துபோகுமாறு வேலாயுதத்தை வீசிய திருமுருகப்பெருமானே!

11) கூகா எனஎன் கிளைகூ டிஅழப்
போகா வகைமெய்ப் பொருள்பே சியவா
நாகாசல வேலவ நாலுகவித்
தியாகா சுரலோக சிகாமணியே!

"கூகா" என கூச்சலிட்டு அடியேனின் சுற்றத்தார் ஒன்றுகூடி அழ அடியேன் இறந்துபோகா வண்ணம் உண்மையான ஞானப்பொருளை எனக்கு உபதேசித்த பரம்பொருளே! "நாகாசலம்" எனப்படும் திருச்செங்கோட்டுமலைமீது வதியும் வேலாயுதனே! ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம்" என்னும் நான்கு வகையான கவிகளைப் பாடும் திறத்தை தேவரீரின் அடியார்களுக்கு வழங்கியருளும் பெருமாளே! வானுலகத்து சிரோரத்தினமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12) செம்மான் மகளைத் திருடுந் திருடன்
பெம்மான் முருகன் பிறவான் இறவான்
சும்மா இருசொல் லற என் றலுமே
அம்மா பொருள் ஒன்றும் அறிந்திலனே!

செவ்விய மான் ஈன்ற மகளாம் வள்ளி-அம்மையாரைக் களவிற் கொண்டு சென்ற கள்வனாகிய பிறப்பும் இறப்பு இல்லாத திருமுருகப்பெருமான், "பேசாத மவுன நிலையில் சும்மா இருப்பாயாக!" என்று அடியேனுக்கு உபதேசித்தவுடனே இவ்வுலகப் பொருள் எல்லாம் மறைந்துபோனது வியப்பாகவுள்ளது!

13) முருகன் தனிவேல் முநிநம் குருவென்
றருள்கொண் டறியார் அறியுந் தரமோ
உருவன் றருவன் றுளதன் றிலதன்
திருளன் றொளியன் றெனநின் றதுவே!

ஒப்பற்ற வேலாயுதத்தை ஏந்திய திருமுருகப்பெருமான் நமது குரு என்று, அப்பெருமானின் திருவருளால் அறியாதவர் அப்பெருமானின் திருவருளை அறியும் தன்மையுடையவரோ? மெய்ப்பொருளாகிய திருமுருகப்பெருமான், உருவமுடையவரும் அல்லர் உருமற்றவரும் அல்லர் உள்ளதோர் பொருளும் அல்லர் இல்லாத பொருளும் அல்லர் இருள் சூழ்ந்த பொருளும் அல்லர் ஒளி பொருந்திய பொருளும் அல்லர்!

14) கைவாய் கதிர்வேல் முருகன் கழல்பெற்
றுய்வாய் மனனே ஒழிவாய் ஒழிவாய்
மெய்வாய் விழி நாசியொடும் செவியாம்
ஐவாய் வழி செல்லும் அவாவினையே!

மனமே! ஒளிபொருந்திய வேலாயுதத்தை ஏந்திய திருமுருகப்பெருமானின் வீரக்கழல்கள் அணியப்பெற்ற திருவடிகளை அடைந்து முக்தியைப் பெறுவாயாக! உடல், வாய், கண், மூக்கு, காது ஆகிய ஐம்பொறிகள் வழியாக உண்டாகும் ஆசைகளை உறுதியாக விட்டுவிடுவாயாக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15) முருகன் குமரன் குகனென்று மொழிந்
துருகுஞ் செயல்தந் துணர்வென் றருள்வாய்
பொருபுங் கவரும் புவியும் பரவுங்
குருபுங்கவ எண்குண பஞ்சரனே!

"முருகா, குமரா, குகா!" என்று மனம் உருகி அழைக்கும் செயலொழுக்கத்தையும் ஞானத்தையும் எப்போது அருள்வீர்?" என்று பக்தியுடன் பொருந்தி நிற்கும் வானோரும் இப்பூவுலகத்தினரும் துதித்துப் போற்றும் "தன் வயத்தம், தூய்மை, இயற்கையறிவு, முற்றறிவு, பற்றின்மை, பேரருள், எல்லாம்வன்மை, வரம்பிலா இன்பம்" என்னும் எட்டு வகையான தெய்வீகக் குணங்களாலாகிய பஞ்சரத்தில் வதியும் மகா குருவாகிய திருமுருகப்பெருமானே!

16) பேராசை எனும் பிணியிற் பிணிபட்
டோரா வினையேன் உழலத் தகுமோ
வீரா முதுசூர் படவேல் எறியுஞ்
சூரா சுர லோக துரந்தரனே!

பேராசை என்னும் நோயில் கட்டுண்டு, "நல்லது, கெட்டது" எது என்பதைத் தெளிவாக ஆராய்ந்து அறியாத செயல்களை மேற்கொண்டு அடியேன் இவ்வாறு அலைந்து திரிவது தகுமோ? தெய்வீக வீரரே! பழங்காலத்து அசுரன் சூரபன்மன் இறந்தொழியும்படி வேலாயுதத்தைச் செலுத்திய சூரரே! தேவருலகைக் காப்பாற்றியவரே!

17) யாமோதிய கல்வியும் எம்மறிவுந்
தாமேபெறவேலவர் தந்ததனாற்
பூமேல் மயல்போய் அறமெய்ப் புணர்வீர்
நாமேல் நடவீர் நடவீர் இனியே!

கற்று அறியும் கல்வியும் பெற்றுள்ள அறிவும் வேலாயுதப் பெருமானே நமக்கு அருளியுள்ள காரணத்தால், (உலகத்தோரே!) இந்நிலவுலகில் உள்ள அளவு ஆசையால் விளையும் மயக்கத்தை நீக்கி, அறச்செயல்களையும் உண்மையையும் கடைப்பிடித்து அறநெறியில் சென்றுசேர்வீர்களாக மேலும் திருமுருகப்பெருமான் அருட்கொடையாக அளித்த நாவைக் கொண்டு அப்பரம்பொருளின் புகழை ஓதிக்கொண்டிருப்பீர்களாக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18) உதியா மரியா உணரா மறவா
விதிமால் அறியா விமலன் புதல்வா!
அதிகா! அநகா! அபயா! அமரா!
பதிகா! வலசூர! பயங் கரனே!

சிவபெருமானின் மைந்தரே! பிறவாமலும், இறவாமலும், உணராமலும், மறவாமலும், பிரமனும் திருமாலும் அறியாமலும் விளங்குபவரே! யாவரினும் மேம்பட்டவரே! பாவமற்றவரே! புகலிடம் அளிக்கும் மூர்த்தியே! வானுலகைக் காத்தருளும் பெருமானே! சூரபன்மனுக்கு அச்சம் தருபவரே!

19) வடிவுந் தனமும் மனமுங் குணமுங்
குடியுங் குலமுங் குடிபோ கியவா
அடியந் தமிலா அயில்வேல் அரசே!
மிடியொன்றொரு பாவி வெளிப் படினே!

கூரிய வேலாயுதத்தை ஏந்தியவாறு பிரபஞ்சத்தை ஆளும் ஆதியும் அந்தமும் இல்லாத மாமன்னரே! "வறுமை" என்னும் ஒரு பாவி தோன்றியவுடனே அழகும் செல்வமும் நல்ல மனமும் குணமும் குடும்பத்தின் பெருமையும் குலத்தின் பெருமையும் ஒருவரை விட்டுப் போய்விடுகின்றனவே!

20) அரிதா கியமெய்ப் பொருளுக் கடியேன்
உரிதா உபதேசம் உணர்த் தியவா
விரிதாரண விக்ரம வேளிமையோர்
புரிதாரக நாக புரந் தரனே!

கிடைத்தற்கு அரிய உண்மைப் பொருளைப் பெறுதற்கு அடியேன் தகுதியுள்ளவனாகக் கருதித் தேவரீர் அடியேனுக்கு உபதேசத்தைப் போதித்தமுறை வியக்கத் தக்கதே! மிகவும் உறுதியானதும் நிலையானதுமான வலிமையுடைய பிரணவப் பொருளாக வானோர் விரும்பித் தியானிக்கும் செவ்வேளே! வானோர் உலகைத் தாங்குபவரே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21) கருதா மறவா நெறிகாண எனக்
கிருதாள் வனசந் தரஎன் றிசைவாய்
வரதா முருகா மயில்வா கனனே
விரதா சுரசூர விபாட ணனே!

நினைவும் மறதியும் அற்ற ஆன்மிக நிலையைக் கண்டுகொள்ள அடியேனுக்குத் தேவரீரின் தாமரை மலர்களையொத்த இரு திருவடிகளை அருள்வதற்கென்று மனம் இரங்குவீராக! கேட்ட வரங்களை அளிக்கும் மூர்த்தியே! திருமுருகப்பெருமானே! மயில் வாகனக் கடவுளே! அருவருப்புக்குரிய அசுரனாகிய சூரபன்மனைத் தேவரீரின் வேலாயுதத்தால் பிளந்தவரே!

22) காளைக் கும ரேசன் எனக்கருதித்
தாளைப் பணியத் தவமெய் தியவா
பாளைக் குழல் வள்ளி பதம்பணியும்
வேளைச் சுரபூ பதி மேருவையே!

காளைப் பருவத்துக் குமாரமூர்த்தி என்று தியானித்து தேவரீரின் திருவடிகளைப் பணிபும்படியான தவப்பேற்றை அடியேன் அடைந்தது வியப்பானதொன்றே! தென்னம் பாளையைப் போன்ற நீண்ட கூந்தலை உடைய வள்ளியம்மையாரின் திருப்பாதங்களைப் போற்றும் தேவரீர், விண்ணோர்களுக்குத் தலைவராய் மேருமலையை ஒத்த பெருமை உடையவராகத் திகழ்கின்றீர்!

23) அடியைக் குறியா தறியா மையினான்
முடியக் கெடவோ முறையோ முறையோ
வடிவிக் ரமவேல் மகிபா குறமின்
கொடியைப் புணருங் குணபூ தரனே!

தேவரீரின் திருவடிகளைத் குறித்துத் தியானிக்காமல் அடியேன் அறிவின்மையால் முழுதும் அழிந்துபடலாமோ? இது முறையோ? கூர்மையும் ஆற்றலும் உடைய வேலாயுதத்தை ஏந்தியவாறு (உலகை ஆளும்) மாமன்னரே, மின்னலையும் கொடியையும் ஒத்த குறவர்குல நங்கையாகிய வள்ளியம்மையாரைச் சேர்ந்த குணக்குன்று போன்றவரே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24) சூர்வேல் விழி மங்கையர் கொங்கையிலே
சேர்வேன் அருள் சேரவும் எண்ணுமதோ
சூர்வே ரொடு குன்று தொளைத்தநெடும்
போர்வேல புரந்தர பூ பதியே!

சூரிய வேல் போன்ற கண்களையுடைய மாதர்களின் கொங்கையிலே சேரும் விருப்பத்தை உடைய அடியேனின் மனம் தேவரீரின் திருவருள் கிடைக்கவேண்டும் என்று எண்ணும் நற்பேற்றினைப் பெறுமோ? மாமரமாகவும் கிரவுஞ்ச மலையாகவும் உருவெடுத்திருந்த அசுரன் சூரபன்மனை அழிப்பதற்கென்று அவற்றை வேரொடு தொளைத்து அழித்த பெரும் போர் செய்யவல்ல வேலாயுத்தை ஏந்தியவாறு உலகத்தைக் காக்கும் கடவுளே!

25) மெய்யே எனவெவ் வினைவாழ் வையுகந்
தையோ அடியேன் அலையத் தகுமோ
கையோ அயிலோ கழலோ முழுதுஞ்
செய்யோய் மயிலேறிய சேவகனே!

உண்மை வாழ்வென்று எண்ணி கொடிய வினைக்கு ஈடான இந்த வாழ்வில் களித்து மகிழ்ந்து, ஐயோ, அடியேன் அலைதல் முறையோ? தேவரீரின் திருக்கரங்கள் மட்டுமன்றி, கையில் ஏந்தும் வேலாயுதம், வீரக்கழல்கள் அணியப்பெற்ற திருவடிகள் ஆகியவை எல்லாம் செந்நிறமாய் அமைந்து, மயில் வாகனத்தின் மீது ஏறிய மாவீரரே!

26) ஆதாரம் இலேன் அருளைப் பெறவே
நீதான் ஒரு சற்று நினைந்திலையே
வேதாகம ஞான விநோதமநோ
தீதா சுரலோக சிகாமணியே!

விண்ணுலகத்தின் நாயகமணியே, ஒருதுணையும் இல்லாத அடியேன் தேவரீரின் திருவருளைப் பெறுமாறு சிறிதளவேனும் தேவரீர் எண்ணவில்லையே! வேதங்களாலும் ஆகமங்களாலும் போற்றப்படுபவரே! வேத முதல்வரே! வேதங்களைத் தொகுத்தவரே! ஆகமங்களை வகுத்தவரே! ஞான விநோத மூர்த்தியே! மனத்துக்கு எட்டாதவரே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

27) மின்னே நிகர்வாழ்வை விரும்பிய யான்
என்னே விதியின் பயன்இங் கிதுவோ
பொன்னே மணியே பொருளே அருளே
மன்னே மயிலேறிய வானவனே!

மின்னலைப் போலத் தோன்றி உடனே மறையும் நிலையற்ற வாழ்வை விரும்பியவனாகிய அடியேன் இவ்வாறு இருப்பதற்குக் காரணம் அடியேனின் வினைப்பயன் தானோ? பொன்னே! மணியே! செல்வமே! முக்தியாகிய அருட்பேற்றினை அளிப்பவரே! உலகை ஆளும் மாமன்னரே! மயில் வாகனத்தில் ஏறிவரும் முழுமுதற் கடவுளே!

28) ஆனா அமுதே! அயில்வேல் அரசே!
ஞானா கரனே! நவிலத் தகுமோ
யானாகிய என்னை விழுங்கி வெறுந்
தானாய் நிலைநின் றதுதற் பரமே?

இனிய அமுதமே! கூரிய வேலாயுதத்தை ஏந்திய மாமன்னரே! ஞானத்தின் இருப்பிடமே! "யான்" என்னும் ஆணவமுடைய அடியேனை தேவரீர் ஆட்கொண்டு அருளி எல்லாம் தானாகி நிலைத்திருக்கும் மேலான நிலையை இத்தன்மையது என்று விளக்கிக் கூறமுடியுமோ?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29) இல்லே எனுமாயையில் இட்டனைநீ
பொல்லேன் அறியாமைபொறுத்திலையே
மல்லே புரி பன்னிரு வாகுவில்என்
சொல்லே புனையுஞ் சுடர்வே லவனே!

இல்வாழ்க்கை என்னும் மாய வாழ்வில் அடியேனைச் சிக்கவைத்துள்ள தேவரீர் கொடியவனாகிய அடியேனது அறியாமையைப் பொறுத்து மன்னித்தருளவில்லையே! மற்போர் செய்வதற்குரிய பன்னிரண்டு தோள்களிலும் அடியேனின் சொற்களாலாகிய பாடல்களையே மாலைகளாக அணிந்துகொள்ளும் ஒளிவீசும் வேலாயுதரே!

30) செவ்வான் உருவில் திகழ்வே லவன்அன்
றொவ்வா ததென உணர்வித் ததுதான்
அவ்வா றறிவார் அறிகின் றதலால்
எவ்வா றொருவர்க் கிசைவிப் பதுவே?

சிவந்த வானத்தின் உருவில் விளங்கும் வேலாயுதப் பெருமான் அன்று அடியேனுக்கு உபதேசித்தருளிய ஒப்பற்ற ஞான உபதேசத்தை ஒருவர் அறிந்து அனுபவிக்க முடியுமே தவிர, எங்ஙனம் மற்றொருவருக்குச் சொல்ல இயலும்?

31) பாழ்வாழ் வெனுமிப் படுமாயையிலே
வீழ்வாயென என்னை விதித்தனையே
தாழ்வா னவைசெய் தனதாம் உளவோ
வாழ்வாய் இனிநீ மயில்வா கனனே!

மயிலை வாகனமாகக் கொண்டுள்ள திருமுருகப்பெருமானே! பாழ்படுவதான வாழ்க்கை என்னும் இந்தப் பெரிய மாயைச் சூழலிலே அடியேன் வீழ்க என்று தேவரீர் விதித்துவிட்டீரே! தேவரீர் அடியேனை இங்ஙனம் மாயை வாழ்வில் தள்ளி சிக்கவைத்தற்கு ஏற்கனவே அடியேன் செய்துள்ள தாழ்வான செயல்கள் ஏதேனும் காரணமாக உள்ளனவோ? அது எவ்வாறாயினும் தேவரீர் நீடு வாழ்வீராக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

32) கலையே பதறிக் கதறித் தலையூ
டலையே படுமா றதுவாய் விடவோ
கொலையே புரி வேடர்குலப் பிடிதோய்
மலையே மலைகூறிடு வாகையனே!

வெற்றி வேலனே! கலை சார்ந்த நூல்களையே அடியேன் கலக்கத்துடன் விரைந்து உருப்போட்டுக்கற்று தலை வேதனையுறும்படி ஆகிவிடவோ? கொலைத்தொழில் புரியும் வேடர் குலத்தில் தோன்றிய பெண் யானையைப் போன்ற வள்ளியம்மையாரைச் சேர்ந்தவரும் கிரவுஞ்ச மலையை வெற்றி வேலால் பிளந்தவருமான மலைபோன்ற கடவுளே!

33) சிந்தா குலஇல் லொடுசெல் வமெனும்
விந்தா டவி என்று விடப் பெறுவேன்
மந்தா கினிதந்த வரோதயனே
கந்தா முருகா கருணா கரனே!

கங்கை நதி ஈன்ற வரத மூர்த்தியே! கந்தப்பெருமானே! திருமுருகப்பெருமானே! கருணைக்கு இருப்பிடமானவரே! மனத்துக்கு வருத்தம் தரும் இல்லற வாழ்க்கையுடன் செல்வம் என்னும் விந்தியமலைக்காடு போன்ற சிக்கல் நிறைந்த சூழலை அடியேன் என்று விட்டு விலகுவேன்?

34) சிங்கார மடந்தையர் தீநெறிபோய்
மங்காமல் எனக்கு வரந் தருவாய்!
சங்க்ராம சிகாவல சண் முகனே!
கங்காநதி பாலக்ரு பாகரனே!

போரில் வல்ல மயில் வாகனத்தையுடையவரே! சண்முக மூர்த்தியே! கங்கை நதியின் பால குமாரனே! கிருபாகர மூர்த்தியே! அழகிய மாதர்கள் நிமித்தம் தீய வழியில் சென்று அடியேன் மனம் குலைந்து போகா வண்ணம் அடியேனுக்கு வரந்தந்து அருள்வாயாக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

35) விதிகாணும் உடம்பை விடா வினையேன்
கதிகாண மலர்க்கழல் என் றருள்வாய்
மதிவா ணுதல்வள் ளியையல் லதுபின்
துதியா விரதா சுரபூ பதியே!

பிறை போன்ற ஒளிவீசும் நெற்றியை உடைய வள்ளியம்மையாரைத் தவிர வேறு யாரையும் துதிக்காத விரதம் பூண்டவரே! விண்ணோர்களின் மாமன்னரே! பிரமன் படைத்ததும் வினையாலானதுமான உடலைப் புறக்கணித்துவிட்டு அடியேன் நற்கதியை அடையும்படி செந்தாமரை மலர்களையொக்கும் தேவரீரின் வீரக்கழல்கள் அணியப்பெற்ற திருவடிகளை அடியேனுக்கு எப்போது அருள்வீர்?

36) நாதா குமரா நம என் றனார்
ஓதாய் என ஓதியதெப் பொருள்தான்
வேதா முதல் விண்ணவர் சூடும் மலர்ப்
பாதா குறமின் பாதசே கரனே!

பிரமன் முதலாய விண்ணோர் தங்கள் தலையுச்சிமேல் அணியும் செந்தாமரை மலர்களையொக்கும் திருவடிகளை உடையவரே! வள்ளியம்மையாரின் திருவடிகளைத் தேவரீரின் முடிமீது கொள்பவரே! சிவபெருமான், "நாதரே, குமராய நம" என்று வணங்கி பிரணவ மந்திரத்தின் பொருளைத் தமக்கு உபதேசிப்பீராக என்று கேட்கத் தேவரீர் உபதேசித்தருளிய பொருள்தான் யாதோ?

37) கிரிவாய் விடுவிக் ரமவேல் இறையோன்
பரிவா ரம்எனும் பதமே வலையே
புரிவாய் மனனே பொறையாம் அறிவால்
அரிவாய் அடியோடும் அகந்தையையே!

மனமே! அசுரன் சூரபன்மன் ஒளிந்திருந்த கிரவுஞ்ச மலைமீது செலுத்திய ஆற்றல்மிக்க வேலாயுதத்தை ஏந்திய திருமுருகக் கடவுளைப் போற்றும் அடியார்களின் குழுவைச் சேர்ந்தவன் என்னும் பதவியைப் பெறுவதையே நீ விரும்புவாயாக! "யான்" என்னும் ஆணவத்தை பொறுமையாகிய அறிவைக்கொண்டு அடியோடு வேருடன் அரிந்து தள்ளிவிடுவாயாக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

38) ஆதாளியை ஒன் றறியே னை அறத்
தீதாளியை ஆண் டதுசெப் புமதோ
கூதாள கிராத குலிக் கிறைவா
வேதாள கணம் புகழ் வேலவனே!

கூதள மாலை அணியப் பெற்றவரே! வேடர் குலத்தவரான வள்ளியம்மையாரின் தலைவரே! வேதாளக் கூட்டத்தினர் புகழ்கின்ற வேலாயுத மூர்த்தியே! வீண்பேச்சு பேசுபவனாகவும் மிகவும் தீய குணமுடையவனுமாகிய அடியேனை ஒரு பொருளாகக் கருதி தேவரீர் ஆண்டருளிய கருணையானது சொல்லுந்தரமுடையதோ?

39) மாவேழ் சனனங் கெடமா யைவிடா
மூவேடணை யென்று முடிந்திடுமோ
கோவே குறமின் கொடித்தோள் புணருந்
தேவே சிவசங்கர தேசிகனே!

உலகை ஆளும் மாமன்னரே! வேடர் குலத்தவரும் மின்னற்கொடி போன்றவருமான வள்ளியம்மையாரின் தோள்களைச் சேரும் கடவுளே! சிவபெருமானுக்குக் குருமூர்த்தியானவரே! பெரிய ஏழுவகையான பிறப்பு நீங்குமாறு மயக்கம் நீங்காத மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை எனப்படும் மூன்று வகை ஆசைகளும் எப்போதுதான் முடிவுறுமோ?

40) வினையோட விடுங் கதிர்வேல் மறவேன்
மனையோடு தியங்கி மயங் கிடவோ
சுனையோ டருவித் துணையோ டுபசுந்
திணையோ டிதணோடு திரிந்தவனே!

சுனைகள், அருவித் துறைகள், பசிய தினைப்புனம் ஆகியவற்றினிடையே வள்ளியம்மையாரைக் காணும் பொருட்டுத் திரிந்தவரே! வினையை வெருட்டி ஓட்டும் ஒளிபொருந்திய தேவரீரின் வேலாயுதத்தை அடியேன் மறவேன்! அத்தகைய அடியேன் இல்லற வாழ்வில் அகப்பட்டுக் கலங்கி அறிவை இழந்து மயக்கம் அடையலாகுமோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

41) சாகா தெனையே சரணங் களிலே
காகா நமனார் கலகஞ் செயுநாள்
வாகா முருகா மயில்வா கனனே
யோகா சிவஞா னொபதே சிகனே!

வெற்றியைத் தரவல்ல வேலாயுதத்தை உடையவரே! திருமுருகப்பெருமானே! மயில் வாகனனே! யோக மூர்த்தியே! சிவபெருமானுக்கு ஞானோபதேசம் செய்த குருமூர்த்தியே! யமன் அடியேனின் உயிரைக் கலக்கிப் பிடிக்க வரும் அந்நாளில் அடியேன் இறவாது தேவரீரின் திருவடிகளை அடியேன் சேருமாறு காப்பாற்றியருள்வீராக!

42) குறியைக் குறியாது குறித்தறியும்
நெறியைத் தனிவேலை நிகழ்த்திடலுஞ்
செறிவற் றுலகோ டுரைசிந் தையுமற்
றறிவற் றறியாமையும் அற்றதுவே!

(தியானிக்கப்படும் பொருளை, பசு, பாசம் பற்றிய அறிவைக் கொண்டு தியானிக்காமல்), பதிஞானத்தைத் தியானித்து அறிகின்ற வழியைத் தனிச் சிறப்புமிக்க வேலாயுதத்தை உடைய திருமுருகப்பெருமான் அடியேனுக்கு உபதேசித்தருளியவுடனே உலகத்தாருடன் கொண்டொழுகும் நெருங்கிய உறவுகள், வாக்கு, மனம், அறிவு ஆகியவற்றோடு அறியாமையும் நீங்கி ஒழிந்தனவே!

43) தூசா மணியுந் துகிலும் புனைவாள்
நேசா முருகா நினதன் பருளால்
ஆசா நிகளந் துகளா யினபின்
பேசா அநுபூதி பிறந்ததுவே!

ஆடை அலங்காரமாக முத்து, மரகதம் ஆகிய மணி வகைகளையும் ஆடையையும் அணியப்பெற்றவரும் வேடர் குலத்தவருமான வள்ளியம்மையாரின் அன்பரே! திருமுருகப்பெருமானே! தேவரீரின் அன்பும் அருளும் அடியேனுக்குக் கிடைத்த நற்பேற்றால், அடியேனின் ஆசை என்னும் விலங்கு பொடியாகிய பின்னர் மவுனம் என்னும் அனுபவ ஞானம் பிறந்ததுவே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

44) சாடுந் தனிவேல் முருகன் சரணஞ்
சூடும் படிதந் ததுசொல் லுமதோ
வீடுஞ் சுரர்மா முடிவே தமும்வெங்
காடும் புனமுங் கமழுங் கழலே!

பகைவர்களைத் தொளைத்து அழிக்கும் ஒப்பற்ற வேலாயுதத்தை உடைய திருமுருகப்பெருமானே! வீடுபேற்றின் நிலையிலும், விண்ணோர்களின் தலைமீதும் நான்கு வேதங்களிலும் கொடிய காட்டிடையேயும் தினைப்புனத்திலும் விளங்கும் வீரக்கழல்கள் அணியப்பெற்றத் தேவரீரின் திருவடிகளை அடியேன் சிரசின்மீது அடைக்கலமாகச் சூட்டிக் கொள்ளுமாறு தேவரீர் தந்தருளிய கருணையை அடியேன் எடுத்துச் சொல்லக்கூடுமோ?

45) கரவா கியகல்வி யுளார் கடைசென்
றிரவா வகைமெய்ப் பொருள் ஈகுவையோ
குரவா குமரா குலிசா யுதகுஞ்
சரவா சிவயோக தயாபரனே!

குரு மூர்த்தியே! குமாரப்பெருமானே! குலிசாயுதத்தை உடையவனே! பிணிமுகம் என்னும் யானையை வாகனமாகக் கொண்டவனே! சிவயோகத்தை அருளும் கருணா மூர்த்தியே! தாம் கற்ற கல்வியறிவை பிறருக்குப் பயன்படுமாறு எடுத்துச் சொல்லாது வைத்துக் கொண்டிருப்பவர்களிடம் சென்று அடியேன் இரந்து கேளாவண்ணம் தேவரீர் உண்மை ஞானப்பொருளை ஈந்து அருள்புரிவீரோ?

46) எந்தாயும் எனக் கருள்தந் தையுநீ
சிந்தா குலமா னவைதீர்த் தெனையாள்
கந்தா கதிர்வே லவனே உமையாள்
மைந்தா குமரா மறைநா யகனே!

கந்தப் பெருமானே! ஒளிவீசும் வேலாயுதத்தை உடையவரே! உமாதேவியின் மைந்தரே! குமார மூர்த்தியே! வேத மூர்த்தியே! தேவரீர் அடியேனின் தாயும், அடியேனுக்கு அருள்புரியும் தந்தையும் ஆவீர்! அடியேனின் மனவருத்தங்கள் யாவற்றையும் நீக்கி அடியேனை ஆண்டருள்வீராக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

47) ஆறா றையுநீத் ததன்மேல் நிலையைப்
பேறா அடியேன் பெறுமா றுளதோ
சீறா வருசூர் சிதைவித் திமையோர்
கூறா வுலகங் குளிர்வித் தவனே!

சீற்றங்கொண்டு வந்த சூரபன்மனை அழித்து, விண்ணோர் இன்புறுமாறு அவர்களின் பொன்னுலகைக் குளிர்வித்தவரே! (24) ஆன்ம தத்துவம், 7 வித்யா தத்துவம், 5 சிவ தத்துவம் ஆகிய முப்பத்தாறு தத்துவங்களையும் கடந்து அவற்றிற்கு அப்பால் உள்ள நிலையை எய்தும் நற்பேற்றினை அடியேன் பெறும் வாய்ப்பு உண்டோ?

48) அறிவொன் றறநின் றறிவார் அறிவிற்
பிறிவொன் றறநின்ற பிரான் அலையோ
செறிவொன் றறவந் திருளே சிதைய
வெறிவென் றவரோ டுறும்வே லவனே!

ஜீவபோதம் கடந்த நிலையில் நின்று சிவபோதத்தால் தேவரீரை அறியும் ஞானியரின் ஞானநிலையில் பிரிவு ஒன்றும் இல்லாது நிற்கும் திருமுருகப்பெருமான் அன்றோ தேவரீர்! உலக பந்தமான நெருங்கிய உறவுகள் அற்றுப் போகும் நிலையை எய்துவதால் அறியாமை என்னும் இருள் சிதைவுற்று அழியுமாறு மனக்கலக்கம் என்னும் மயக்கத்தை வென்ற ஞானியர்களோடு பொருந்தும் வேலாயுதக் கடவுளே!

49) தன்னந் தனிநின் றதுதான் அறிய
இன்னம் ஒருவர்க் கிசைவிப் பதுவோ
மின்னுங் கதிர்வேல் விகிர்தா நினைவார்
கின்னங் களையும் க்ருபைசூழ் சுடரே!

ஒளி வீசும் கதிர்களையுடைய வேலாயுத்தை ஏந்திய வேறுபாடுடைய திருமுருகப்பெருமானே! தேவரீரை நினைத்துத் தியானிப்பவர்களின் துக்கங்களை நீக்கும் கருணை விளங்கும் பேரொளியே! ஒரு சார்பும் இல்லாது தனித்து விளங்கும் பரம்பொருள் இத்தன்மைத்து என்று அறியுமாறு மற்றவருக்கு அடியேன் சொல்லவியலுமோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

50) மதிகெட் டறவா டிமயங் கிஅறக்
கதிகெட் டவமே கெடவோ கடவேன்?
நதிபுத் திர ஞான சுகா திபவத்
திதிபுத் திரர்வீ றடுசே வகனே!

கங்கை நதிக்கு மைந்தரே! ஞானசுகத்தின் தலைவரே! திதி என்பவளின் புத்திரர்களாகிய அசுரர்களின் பெருமையைக் கெடுத்து அழித்த அதிவீரரே! அறிவு குலைந்து மிகவும் உள்ளம் சோர்வுற்று மயங்கி நற்கதி பெறும்வழியை இழந்து வீணாகக் கெட்டழிதல் அடியேனின் தலைவிதியோ?

51) உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்க்
கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே!

உருவமுள்ளவராகவும், உருவமில்லாதவராகவும், உள்ள பொருளாகவும், காணவியலாத பொருளாகவும், நறுமணமாகவும், அந்த நறுமணத்தை உடைய மலராகவும், இரத்தினமாகவும் அந்த இரத்தினம் வீசும் ஒளியாகவும், உயிர் இடம்பெறும் கருவாகவும், உடலாகவும், உயிராகவும் நற்கதியான புகலிடமாகவும் அந்த நற்கதியை நோக்கிச் செலுத்தும் விதியாகவும் விளங்கும் குகமூர்த்தியே! தேவரீர் குருமூர்த்தியாக எழுந்தருளிவந்து அடியேனுக்கு அருள்புரிவீராக!

****





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அருணகிரிநாதர் அருளிய கந்தரலங்காரம்**

**காப்பு விநாயகர்**

அடலரு ணைத்திருக் கோபுரத் தேயந்த வாயிலுக்கு
வடவரு கிற்சென்று கண்டுகொண் டேன்வரு வார்தலையிற்
தடப டெனப்படு குட்டுடன் சர்க்கரை மொக்கியகைக்
கடதட கும்பக் களிற்றுக் கிளைய களிற்றினையே.

தன்னை நினைவுகூரும் மாத்திரத்திலேயே பக்தர்களுக்கு முக்தியினைத் தரவல்ல திருவண்ணாமலை-கோயிலின் அழகிய கோபுரத்தின் வாயிலுக்கு வடக்குப் பக்கம் சென்று (அக்கோபுரத்தின் வாயிலுக்குத் தெற்குப் பக்கத்தில் வீற்றிருக்கும் திருவிநாயகப்பெருமானை) வழிபடுவதற்கு வருபவர்கள் "தட, பட" என்ற ஒலியுடன் தங்கள் தலைமீது போட்டுக்கொள்ளும் குட்டுடன் அவர்கள் படைக்கும் சர்க்கரை முதலிய உணவுப் பொருட்களையும் தம் துதிக்கையால் ஏற்றுக் கொள்பவரும்,"இச்சை-கிரியை-ஞானம்" என்னும் மும்மதங்களையும் விசாலமான கும்பத்தலங்களையும் கொண்டிருப்பவருமான யானை முகத்தான் திரு விநாயகப் பெருமானின் இளையோனாகிய திருமுருகப் பெருமானின் தரிசனம் கண்டுகொண்டேன்.

பேற்றைத் தவஞ்சற்று மில்லாத வென்னைப்ர பஞ்சமென்னும்
சேற்றைக் கழிய வழிவிட்ட வா! செஞ் சடாடவிமேல்
ஆற்றைப் பணியை யிதழியைத் தும்பையை யம்புலியின்
கீற்றைப் புனைந்த பெருமான் குமாரன் க்ருபாகரனே.

குமரப் பெருமானே, முக்தியைப் பெறுவதற்குரிய தவப்பயன் சிறிதேனும் இல்லாத அடியேன், அசுத்தப்படுத்தும் பிரபஞ்சம் என்னும் சேற்றினை விட்டு உய்யுமாறு உண்மையான வழியைக் காட்டியருளினீர்! அடர்ந்த சிவந்த சடையின்மீது கங்கை நதியையும் நாகப் பாம்பினையும் கொன்றை மலரையும் தும்பை மலரையும் சந்திரனது பிறையையும் சூடிக் கொண்டுள்ள சிவபெருமானின் குமாரனாகிய தேவரீர், திருமுருகப்பெருமானாக மட்டுமன்றி, கருணைக்கு உறைவிடமான கிருபாகரனாகவும் விளங்குகின்றீர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழித்துப் பிறக்கவொட்டா அயில் வேலன் கவியையன்
பால்எழுத்துப் பிழையறக் கற்கின்றி லீரெரி மூண்டதென்ன
விழித்துப் புகையெழப் பொங்குவெங் கூற்றன் விடுங்கயிற்றாற்
கழுத்திற் சுருக்கிட் டிழுக்குமன் றோகவி கற்கின்றதே.

தீவினைகளை அழித்து இவ்வுலகில் மீண்டும் பிறவி எடுக்காமல் பேரின்ப வீட்டை (முக்தியை) வழங்கவல்ல கூர்மையான வேலினைத் தாங்கிய திருமுருகப்பெருமானைப் புகழும் திருப்புகழ்ப் பாடல்களை இன்றே மெய்யன்புடன் எழுத்துப் பிழைகள் சிறிதுமின்றி கற்றுக் கொள்ளாமல் (ஓதாமல்) இருக்கின்றீர்களே! நெருப்புமூண்டு எரிவதைப்போல கண்களை உருட்டிப் பார்த்துப் புகை எழுமாறு சீறுகின்ற கொடிய இயமன் வீசுகின்ற பாசக் கயிற்றினால் கழுத்திலே சுருக்குப் போட்டு உங்கள் உயிரைப் பற்றி இழுக்கின்ற அந்த நாளிலா திருப்புகழ்ப் பாடல்களைக் கற்பது (ஓதுவது) இயலும்?

ஓரவொட் டாரொன்றை யுன்னவொட் டார்மல ரிட்டுனதாள்
சேரவொட் டாரைவர் செய்வதென் யான்சென்று தேவருய்யச்
சோரநிட் டூரனைச் சூரனைக் காருடல் சோரிகக்கக்
கூரகட்டாரியிட் டோரிமைப் போதினிற் கொன்றவனே.

ஐம்புலன்களாகிய ஐவர், தேவரீரின் திருவடிப்பெருமைகளை ஆராயவிடமாட்டார். ஒரே பரம்பொருளாகிய தேவரீரை நினைக்கவிடமாட்டார். நறுமணமிக்க மலர்களால் அருச்சித்து தேவரீரின் தாமரை மலர் போன்ற திருவடிகளைச் சென்றடையவிடமாட்டார். அடியேன் என்ன செய்வது? அமரர்கள் உய்யவேண்டி, திருட்டுத்தனமும் கொடூரமும் பொருந்திய சூரனை, அவனுடைய கரிய உடலிலிருந்து இரத்தம் வெளிவருமாறு கூர்மையான வேலாயுதத்தைச் செலுத்தி ஓர் இமைப் பொழுதிலேயே அழித்தவரே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோழிக் கொடிய னடிபணி யாமற் குவலத்தே
வாழக் கருது மதியிலி காளுங்கள் வல்வினைநோய்
ஊழிற் பெருவலி யுண்ணவொட்டாது உங்களத்தமெல்லாம்
ஆழப் புதைத்துவைத் தால்வருமோ நும் மடிப்பிறகே.

சேவலைக் கொடியாக உடைய திருமுருகப்பெருமானது திருவடிகளை வணங்காமல் இவ்வுலகில் வாழ்வதற்கு நினைக்கின்ற அறிவில்லாதவர்களே! உங்களுடைய வலிய தீவினையால் உண்டாகும் நோயாகிய ஊழினது பெரிய வலிமையானது செல்வத்தை அனுபவிக்க விடுவதில்லை. உங்களுடைய செல்வம் முழுவதையும் மண்ணில் ஆழமான குழியில் புதைத்து வைத்தீர்களாயினும் அந்தச் செல்வம் உங்கள் காலடியைப் பின்தொடர்ந்து வருமோ?

மரணப்ர மாத நமக்கில்லை யாமென்றும் வாய்த்ததுணை
கிரணக் கலாபியும் வேலுமுண் டேகிண் கிணிமுகுள
சரணப்ர தாப சசிதேவி மங்கல்ய தந்துரக்ஷா
பரணக்ரு பாகர ஞானா கரசுர பாஸ்கரனே.

இறப்பு என்னும் அபாயம் தேவரீரின் அடியார்களாகிய எங்களுக்கு இல்லை. காரணம் எந்நாளும் வாய்த்த துணையாக ஒளிபடைத்த மயிலும் வேலும் எங்களுக்கு உள்ளன. கிண்கிணிகள் ஒலிக்கும்படியான திருவடிகளையுடைய வீரரே! இந்திரனின் துணைவியான சசிதேவியின் மங்கல நாணினைக் காப்பாற்றியருளியவரே! கருணைக்கு உறைவிடமானவரே! அறிவுவடிவினரே! தேவசூரியனே!

தெய்வத் திருமலைச் செங்கோட்டில் வாழுஞ் செழுஞ்சுடரே
வைவைத்த வேற்படை வானவ னேமற வேனுனைநான்
ஐவர்க் கிடம்பெறக் காலிரண் டோட்டி யதிலிரண்டு
கைவைத்த வீடு குலையுமுன்னே வந்து காத்தருளே.

தெய்வீகம் பொருந்தியதும் அழகானதுமான மலையாகிய திருச்செங்கோட்டில் வதியும் செழுமையைத் தரும் சோதியே! கூர்மையானவேலை ஆயுதமாகக் கொண்ட தெய்வமே! உனை அடியேன் மறவேன். ஐம்புலன்களுக்கு இடமாகும்படி இரண்டு கால்களை நிறுத்தி அங்கு இரண்டு கைகளை அமைத்துள்ள இல்லம் போன்ற இந்த உடம்பு அழிவதற்கு முன்னரே தேவரீர் அடியேனுக்குமுன் தோன்றிக் காப்பாற்றியருள்வீராக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தண்டா யுதமுந் திரிசூல மும்விழத் தாக்கியுன்னைத்
திண்டாட வெட்டி விழவிடு வேன்செந்தில் வேலுனக்குத்
தொண்டா கியவென் னவிரோத ஞானச் சுடர்வடிவாள்
கண்டா யடாவந்த காவந்து பார்சற்றென் கைக்கெட்டவே.

அந்தகா (இயமனே)! உன்னுடைய கதாயுதமும் முத்தலைச் சூலமும் உன் கையிலிருந்து பொடிபட்டுச் சிந்த உன்னை மோதி வலியழிந்து வருந்துமாறு துண்டித்து உன்னை வீழ்த்துவேன். திருச்செந்தூரில் எழுந்தருளியுள்ள வேற்படையுடைய திருமுருகப்பெருமானுக்கு அடிமையாகிய அடியேனுடைய விரோதமில்லாத ஞானமாகிய ஒளிபொருந்தியதும் கூர்மையானதுமாகிய வாளாயுதத்தைப் பார்த்தாயடா? எனது கைக்கு எட்டுகின்ற அளவில் சிறிது நீ வந்து பாராய்!

நீலச் சிகண்டியி லேறும் பிரானெந்த நேரத்திலுங்
கோலக் குறத்தி யுடன்வரு வான்குரு நாதன்சொன்ன
சீலத்தை மெள்ளத் தெளிந்தறி வார்சிவ யோகிகளே
காலத்தை வென்றிருப்பார், மரிப் பார்வெறுங் கர்மிகளே.

நீலநிற மயில்வாகனத்தின் மீது ஏறுகின்ற திருமுருகப்பெருமான் எந்த நேரத்திலும் அழகுமிக்க வள்ளியம்மையாருடன் அருள்புரிவதற்கு வருவார். மேலும் அடியேனின் குருமூர்த்தியாகிய எம்பெருமான் உபதேசித்த மெய்ப்பொருளின் தன்மையை மெல்ல தேர்ந்து தெளிந்து புரிந்துகொள்பவர்களாகிய சிவயோகிகள் மாத்திரமே காலதத்துவத்தை வென்று அதனைக் கடந்து காலாதீதராக இருப்பார்கள். வெறும் கர்மயோகிகளோ காலத்துக்கு உட்பட்டு மாய்ந்துபோவர்.

ஓலையுந் தூதருங் கண்டுதிண் டாட லொழித்தெனக்குக்
காலையு மாலையு முன்னிற்கு மேகந்த வேள்மருங்கிற்
சேலையுங் கட்டிய சீராவுங் கையிற் சிவந்தசெச்சை
மாலையுஞ் சேவற் பதாகையுந் தோகையும் வாகையுமே.

திருமுருகப்பெருமானின் பக்தனாகிய அடியேன் இயமனின் ஓலையையும் அவனது தூதரையும் கண்டு கலங்குவதே இல்லை. காரணம், கந்தவேளாகிய திருமுருகப்பெருமான் தம் பீதாம்பரத்தின் மீது கட்டும் கச்சை, அதில் செருகிய சிறிய கூரிய உடைவாள், தோளில் அணிந்த சிவந்த நிறமுடைய வெட்சி மலர்மாலை, சேவற்கொடி,மயில்வாகனம் வெற்றி மாலைகள் ஆகியவற்றோடு எனக்கென்று காலையிலும் மாலையிலும் அடியேன்முன் காட்சியளித்து அருள்புரிகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாப் பிறவிக் கடலிற் புகார்முழு துங்கெடுக்கு
மிடியாற் படியில் விதனப் படார்வெற்றி வேற்பெருமாள்
அடியார்க்கு நல்ல பெருமாள் அவுணர் குலமடங்கப்
பொடியாக் கியபெரு மாள்திரு நாமம் புகல்பவரே.

தாண்டமுடியாத பிறவிப்பெருங்கடலில் மூழ்கமாட்டார்கள். எல்லா நலன்களையும் கெடுக்கும் வறுமைப் பிணியால் வேதனைப்பட மாட்டார்கள். வெற்றி பொருந்திய வேலாயுதத்தைத் தாங்கியவரும், தம் திருவடிகளை வணங்குகின்ற அடியவர்களுக்கு நன்மையைத் தருகின்ற பெருமாளும், அவுணர் கூட்டம் அழியும்படி தூளாகச்செய்த பெருமாளுமாக விளங்கும் திருமுருகப்பெருமானின் திருநாமத்தை ஓதுபவர்கள்.

பத்தித் துறையிழிந் தாநந்த வாரி படிவதினால்
புத்தித் தரங்கந் தெளிவதென் றோபொங்கு வெங்குருதி
மெத்திக் குதிகொள்ள வெஞ்சூ ரனைவிட்ட சுட்டியிலே
குத்தித் தரங்கொண் டமரா வதிகொண்ட கொற்றவனே.

பக்தியாகிய அன்பு வழியில் இறங்கி இன்பமாகிய கடலில் மூழ்குவதினால் அடியேனின் புத்தியில் அலை போன்ற அசைவுகள் தெளிவடைவது எக்காலமோ? அலைகள் போன்று பொங்கிப் பெருகும் வெப்பமான அசுரர் இரத்தம் ஆனந்தக் கூத்தாடுமாறு வெய்ய சூரபன்மனின் கிரௌஞ்ச மலைமீது ஏவிய வேலாயுதம் குத்திய மேன்மையினால் தேவர் உலகை மீட்டுக் கொண்ட மன்னர் திருமுருகப்பெருமானே.

சுழித்தோடு மாற்றிற் பெருக்கானது செல்வந் துன்ப மின்பங்
கழித்தோடு கின்றதெக் காலநெஞ்சே கரிக் கோட்டு முத்தைக்
கொழித்தோடு காவிரிச் செங்கோட னென்கிலை குன்றமெட்டுங்
கிழித்தோடு வேலென் கிலையெங்ங னேமுத்தி கிட்டுவதே.

ஓநெஞ்சே, சுழித்து ஓடுகின்ற ஆற்றின் வெள்ளத்திற்கு நிகராகும் செல்வத்தினால் உண்டாகும் துன்பங்களையும் இன்பங்களையும் அறவே நீக்கிப் பற்றற்று விரைந்து செல்வது எந்தக் காலமோ? "யானையின் தந்தத்தில் உண்டாகிய முத்துக்களைக் கொழித்துக் கொண்டு ஓடுகின்ற காவிரி நதியால் சூழப்பட்டுள்ள திருச் செங்கோட்டில் எழுந்தருளியுள்ளவரே என்று துதிக்கவில்லை எட்டு குலமலைகளைப் பிளந்து போகத்தக்க வேலாயுதமே" என்று நீ துதிக்கவில்லை. இவ்வாறு இருக்க உனக்கு முத்தி கிடைப்பது எவ்வாறு?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளென் செயும்வினை தானென் செயுமெனை நாடிவந்த
கோளென் செயுங்கொடுங் கூற்றென் செயுங்கும ரேசரிரு
தாளுஞ் சிலம்புஞ் சதங்கையும் தண்டையுஞ் சண்முகமுந்
தோளுங் கடம்பு மெனக்குமுன் னேவந்து தோன்றிடினே.

நாட்கள் அடியேனை என்ன செய்யும்? வினைதான் என்ன செய்யும்? அடியேனைத் தேடிவந்த கோள் தான் என்ன செய்யும்? கொடிய இயமனால்தான் என்ன செய்யமுடியும்? குமரக்கடவுளின் இரண்டு திருவடிகளும் சிலம்புகளும் சதங்கையும், தண்டைகளும் ஆறு திருமுகங்களும் பன்னிருதோள்களும் கடப்ப மலர் மாலையும் அடியேனுக்கு முன்வந்து தோன்றிடுமே.

சேல்பட் டழிந்தது செந்தூர் வயற்பொழில் தேங்கடம்பின்
மால்பட் டழிந்தது பூங்கொடி யார்மனம் மாமயிலோன்
வேல்பட் டழிந்தது வேலையுஞ் சூரனும் வெற்புமவன்
கால்பட் டழிந்ததிங் கென்றலை மேலயன் கையெழுத்தே.

சேல் என்னும் மீன்கள் குதித்துத் திரிவதனால் திருச்செந்தூரில் உள்ள வயல்கள் அழிந்துபோயின. மலர்க்கொடி போன்ற பெண்களின் மனமானது சோலையிலுள்ள இனிமையான கடப்ப மலர் மாலையை விரும்பியதால் அழிந்துபோயிற்று. பெருமைதங்கிய மயில் வாகனத்தையுடைய திருமுருகப்பெருமானது வேலாயுதம் பட்டதால் கடலும் சூரபன்மனும் கிரௌஞ்ச மலையும் அழிந்துபோயின. இவ்வுலகில் கந்தவேளின் திருவடிகள் அடியேனின் தலைமீது பட்டதால் பிரம்ம தேவனால் எழுதப்பட்டிருந்த "விதி" என்னும் கையெழுத்தும் அழிந்துபோயிற்று.

பத்தித் திருமுக மாறுடன் பன்னிரு தோள்களுமாய்த்
தித்தித் திருக்கு மமுதுகண் டேன்செயன் மாண்டடங்கப்
புத்திக் கமலத் துருகிப் பெருகிப் புவனமெற்றித்
தத்திக் கரைபுர ளும்பர மாநந்த சாகரத்தே.

திருமுருகப்பெருமானின் வரிசையான அழகிய திருமுகங்கள் ஆறோடு பன்னிரண்டு தோள்களுமான இனிய அமுதத்தை அடியேன் கண்டேன்.ஜீவனுடைய செயல்கள் கெட்டு ஒடுங்கியபோது அறிவாகிய தாமரை மலரில் கரைந்து பெருக்கெடுத்து எல்லா உலகங்களையும் கடந்து அவற்றின் கரை மீது புரளுகின்ற மேலான இன்பக் கடலில் திருமுருகப்பெருமானின் வரிசையான அழகிய திருமுகங்கள் ஆறோடு பன்னிரண்டு தோள்களுமான இனிய அமுதத்தைக் கண்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தியை வாங்கிநின் பாதாம் புயத்திற் புகட்டியன்பாய்
முத்தியை வாங்க அறிகின்றி லேன்முது சூர்நடுங்கச்
சத்தியை வாங்கத் தரமோ குவடு தவிடுபடக்
குத்திய காங்கேய னேவினை யேற்கென் குறித்தனையே.

தீய வழிகளில் சென்று அல்லற்படும் அடியேனின் புத்தியை அவ்வாறு செல்லா வண்ணம் தடுத்து தேவரீரின் திருவடித் தாமரை மலர்களில் அன்புடன் செலுத்தி வீடுபேற்றைப் பெற்று உய்வதற்கு அடியேன் அறியவில்லை. நீண்டகாலம் கொடூரமான செயல்கள் புரிந்த வயதான சூரபன்மன் நடுங்கும்படி சக்திவேலினை விடுவதற்கு அடியேனால் முடியுமா? கிரௌஞ்சமலை பொடிபடும்படி வேலாயுதத்தால் குத்திய கங்கையின் மைந்தரே, வினையின் விளைவை உடையவனாகிய அடியேன் யாது செய்யவேண்டும் என எண்ணியுள்ளீர்?

சூரிற் கிரியிற் கதிர்வே லெறிந்தவன் தொண்டர்குழாஞ்
சாரிற் கதியன்றி வேறிலை காண் தண்டு தாவடிபோய்த்
தேரிற் கரியிற் பரியிற் றிரிபவர் செல்வமெல்லாம்
நீரிற் பொறியென் றறியாத பாவி நெடுநெஞ்சமே.

ஓ மனமே, சூரபன்மன் மீதும் கிரௌஞ்சமலை மீதும் ஒளிவீசும் வேலை விடுத்து அருளிய திருமுருகப்பெருமானின் அடியார்களது திருக்கூட்டத்தை அடைவதைவிட சிறந்த கதி வேறு ஒன்றும் எங்கும் இல்லை என்பதைக் காண்பாயாக. படைகளுடன் பிரயாணம்செய்து, தேரின்மீதும் யானையின்மீதும் குதிரையின்மீதும் ஏறி உலாவுகின்ற செல்வம் முழுவதும் நீரின்மீது எழுதிய எழுத்துக்கு ஒப்பாகும் என்று நீ உணரவில்லையே, நீண்டகாலப் பாவியாகிய மனமே!

படிக்குந் திருப்புகழ் போற்றுவன் கூற்றுவன் பாசத்தினாற்
பிடிக்கும் பொழுதுவந் தஞ்செலென் பாய்பெரும் பாம்பினின்று
நடிக்கும் பிரான்மரு காகொடுஞ் சூர னடுங்கவெற்பை
இடிக்குங் கலாபத் தனிமயி லேறு மிராவுத்தனே.

தேவரீரின் திருப்புகழை எப்பொழுதும் போற்றி ஓதுபவன் அடியேன். எனவே இயமன் வந்து பாசக் கயிற்றை வீசி அடியேனின் உயிரைப் பிடிக்கும் வேளையில் எழுந்தருளிவந்து, "அஞ்சாதே" என்று கூறி அடியேனை ஆட்கொள்வாயாக. காளிங்கன் என்னும் பெரிய பாம்பின் படத்தின்மீது நின்று கூத்தாடும் திருமாலின் திருமருகரே! கொடிய சூரபன்மன் நடுங்குமாறு கிரௌஞ்சமலையைத் தன் பெரிய தோகையால் இடித்த தனியொரு மயிலின்மீது ஏறிவரும் சேவகரே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையாறு கூறெழ வேல்வாங்கி னானை வணங்கியன்பின்
நிலையான மாதவஞ் செய்குமி னோநும்மை நேடிவருந்
தொலையா வழிக்குப் பொதிசோறு முற்ற துணையுங்கண்டீர்
இலையா யினும்வெந்த தேதா யினும்பகிர்ந் தேற்றவர்க்கே.

கிரௌஞ்சமலையின் நடுப்பாகம் பிளவுபட்டு அங்கு வழிதோன்றுமாறு வேலாயுதத்தை ஏவியருளிய திருமுருகப்பெருமானை அன்புடன் வணங்கி யாசிப்பவர்களுக்குத் தானம் செய்வதாகிய நிலையான பெருந்தவத்தைச் செய்வீர்களாக. இத்தகைய தவத்தின் பயனானது, உங்களைத் தேடிவரும் தொலையாத இறுதியாத்திரை வழிக்கு கட்டமுது போன்ற பொருத்தமான துணையாக அமையும் என்பதை உணர்வீர்களாக. உம்மிடம் வந்து யாசித்தவர்களுக்கு இலைக் கறியாயினும், வெந்தது எதுவாயினும், பகிர்ந்து கொள்ளுங்கள்.

சாகைக்கு மீண்டு பிறக்கைக்கு மன்றித் தளர்ந்தவர்க்கொன்
றீகைக் கெனைவிதித் தாயிலை யேயிலங் காபுரிக்குப்
போகைக்கு நீவழி காட்டென்று போய்க்கடல் தீக்கொளுந்த
வாகைச் சிலைவளைத் தோன்மரு காமயில் வாகனனே.

இறப்பதற்கும் மீண்டும் திரும்பத் திரும்பப் பிறப்பதற்கும் அல்லாமல் வறுமையால் தளர்வுற்றவர்களுக்கு ஒரு பொருளைக் கொடுத்து உதவி செய்வதற்கு அடியேனை விதிக்கவில்லையே! "இலங்கை மாநகரத்திற்குச் செல்வதற்கு நீ வழிகாட்டக் கடவாய்" என்று சொன்னதும் அந்தக் கடலானது நெருப்புப் பற்றிக்கொள்ளுமாறு வெற்றியுடைய கோதண்ட வில்லினை வளைத்தவராகிய இராமபிரானாக அவதரித்த திருமாலின் திருமருகரே, மயிலை வாகனமாக உடையவரே.

ஆங்கா ரமுமடங் காரொடுங் கார்பர மாநந்தத்தே
தேங்கார் நினைப்பு மறப்பு மறார்தினைப் போதளவும்
ஓங்காரத் துள்ளொளிக் குள்ளே முருக னுருவங்கண்டு
தூங்கார் தொழும்பு செய்யா ரென்செய் வார்யம தூதருக்கே.

"நான்" என்னும் அகங்காரம், "எனது" என்னும் மமகாரம் ஆகிய இரண்டையும் ஒழித்து அருள் அனுபவத்தில் அடங்கப் பெறமாட்டார். பொறிபுலன்கள் ஒடுங்கப்பெறமாட்டார், பேரின்ப வெள்ளத்தில் மூழ்கி நிறைவு பெறமாட்டார். நினைப்பும் மறப்பும் அற்றச் சமாதி நிலையில் பொருந்தமாட்டார் ஒரு தினையளவு காலமாயினும் ஓங்காரமாகிய நாதத்துக்குள்ளே ஒளிரும் ஜோதியினுள்ளே திருமுருகப்பெருமானின் திருவுருவத்தின் தரிசனம் கண்டு அப்பரவச நிலையில் தூங்கமாட்டார், மற்றவர்களுக்குத் தொண்டு செய்யமாட்டார். இயமனுடைய தூதர் வரும்போது என்ன செய்வார்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழியும் படியடற் குன்றெறிந் தோன்கவி கேட்டுருகி
இழியுங் கவிகற் றிடாதிருப் பீரெரி வாய்நரகக்
குழியுந் துயரும் விடாய்ப்படக் கூற்றுவனூர்க் குச்செல்லும்
வழியுந் துயரும் பகரீர் பகரீர் மறந்தவர்க்கே.

வலிமையுடைய கிரௌஞ்ச மலையைப் பிளந்து ஒழியுமாறு வலிமையுடைய வேலாயுதத்தை விடுத்து அருளிய திருமுருகப் பெருமானைப் புகழும் அருட்பாடல்களைக் கேட்டு உள்ளம் உருகி ஏனைய இழிந்த பாடல்களைக் கற்காமல் இருப்பீராக. நெருப்புடன் கூடிய நரகக்குழியையும் அதனால் அனுபவிக்கக் கூடிய துன்பத்தையும் நீரில்லாத வழியே சென்று தவித்து இயமனுடைய ஊருக்குப் போகின்ற கொடிய வழியையும் அதனால் உண்டாகும் துன்பத்தையும் மறந்தவர்களுக்குச் சொல்லுங்கள், மீண்டும் சொல்லுங்கள்.

ஆலுக் கணிகலம் வெண்டலை மாலை யகிலமுண்ட
மாலுக் கணிகலந் தண்ணந் துழாய்மயி லேறுமையன்
காலுக் கணிகலம் வானோர் முடியுங் கடம்புங்கையில்
வேலுக் கணிகலம் வேலையுஞ் சூரனும் மேருவுமே.

சிவபெருமானுக்கு அணிகலனாக விளங்குவது வெண்மையான கபால மாலையாகும், திருமாலுக்கு அணிகலனாக விளங்குவது குளிர்ந்த அழகிய துளசி மாலையாகும். மயில் வாகனத்தின்மீது ஏறி வருகின்ற திருமுருகப் பெருமானின் திருவடிகளுக்கு அணிகலன்களாக விளங்குவன தேவர்களின் மணிமுடிகளும் அவர்கள் சூட்டும் கடப்ப மலர் மாலைகளுமாகும். திருமுருகப்பெருமானின் திருக்கரத்தில் உள்ள வேலாயுதத்திற்கு அணிகலன்களாக விளங்குவன கடலும், சூரபன்மனும் மகாமேரு மலையுமாகும்.

வெட்டுங் கடாமிசைத் தோன்றும் வெங்கூற்றன் விடுங் கயிற்றாற்
கட்டும் பொழுது விடுவிக்க வேண்டுங் கராசலங்கள்
எட்டுங் குலகிரி யெட்டும்விட் டோடவெட் டாதவெளி
மட்டும் புதைய விரிக்குங் கலாப மயூரத்தனே.

வெட்டுகின்ற எருமைக் கடாவின் மீது வருகின்ற வெம்மையாகிய இயமன் வீசுகின்ற பாசக் கயிற்றினால் அடியேனைக் கட்டிப்பிடிக்கும் போது தேவரீர் தோன்றி விடுவித்து காப்பாற்றி அருளவேண்டும். கைகளையுடைய மலைபோன்ற திக்கு யானைகள் எட்டும் குலமலைகள் எட்டும் தத்தம் இடம் விட்டு விலகும்படி கண்களுக்கு எட்டாத ஆகாய வெளி வரைக்கும் மறையும்படி விரிக்கின்ற தோகையையுடைய மயிலை வாகனமாக உடையவரே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீர்க் குமிழிக்கு நிகரென்பர் யாக்கைநில் லாதுசெல்வம்
பார்க்கு மிடத்தந்த மின்போலு மென்பர் பசித்துவந்தே
ஏற்கு மவர்க்கிட வென்னினெங் கேனு மெழுந்திருப்பார்
வேற் குமரற் கன்பிலாதவர் ஞான மிகவுநன்றே.

"இந்த உடலானது நீரின்மீது தோன்றி மறையும் குமிழிக்கு ஒப்பாகும்" என்றும், "பொருட்செல்வம் என்றென்றும் நிலைபெற்றிராது. ஆராய்ந்து பார்க்கும்போது அப்பொருட்செல்வம் மின்னலைப்போன்றது" என்றும் கூறுவார்கள் அறிஞர்கள். மிகவும் பசியால் வாடி வந்து, "அன்னமிடுங்கள்" என்று யாசிப்பவர்களுக்கு "ஏதாவது கொடுங்கள்" என்று சொன்னால் எங்காவது போய்விடலாம் என்று எழுந்து போய்விடுவார்கள் சிலர். வேலாயுதத்தையுடைய திருமுருகப் பெருமான்பால் பக்தி இல்லாத அத்தகைய மனிதர்களது போலி "ஞானம்" மிகவும் நன்றாக இருக்கின்றது!

பெறுதற் கரிய பிறவியைப் பெற்றுநின் சிற்றடியைக்
குறுகிப் பணிந்து பெறக்கற் றிலேன்மத கும்பகம்பத்
தறுகட் சிறுகட் சங்க்ராம சயில சரசவல்லி
இறுகத் தழுவுங் கடகா சலபன் னிருபுயனே.

பெறுவதற்கு மிகவும் அருமையான இந்த மானிடப் பிறவியைப் பெற்றும் தேவரீரது சிறிய திருவடிகளை அடைந்து தொழுது முக்தியைப் பெறுவதற்கு கற்றேன் இல்லை. மதநீர் ஒழுகுவதும் கும்பஸ் தலத்தை உடையதும் அசைந்துகொண்டே இருக்கும் தன்மையுடையதும் அஞ்சாமையையும் சிறிய கண்களையும் உடையதுமான யானையை வாகனமாகக் கொண்டு விளங்கும் போர்வீரரே, மலையில் பிறந்து வளர்ந்தவரும் விளையாடல் புரிபவரும் கொடிபோன்றவருமாகிய வள்ளியம்மையாரின் மார்பினை இறுகத் தழுவும், வீரக் கடகங்களை அணிந்துள்ளனவும் மலைபோல் விளங்குவதுமாகிய பன்னிரண்டு புயங்களை உடையவரே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாடுஞ் சமரத் தனிவேன் முருகன் சரணத்திலே
ஓடுங் கருத்தை யிருத்தவல் லார்க்குகம் போய்ச்சகம்போய்ப்
பாடுங் கவுரி பவுரிகொண்டாடப் பசுபதிநின்
றாடும் பொழுது பரமா யிருக்குமதீதத்திலே.

அறநெறிக்கு மாறுபட்டவர்களையும் தீய வினைகளையும் போர்செய்து அழிக்கவல்லதாகிய ஒப்பற்ற வேலாயுதத்தை உடைய திருமுருகப் பெருமானின் திருவடிகளில், பல்வேறு வழிகளில் ஓடித்திரியும் மனத்தை நிலைபெறச் செய்யும் ஆற்றல் உள்ளவரின் மனமானது, அனைத்து யுகங்களும் எல்லா உலகமும் முடிவுக்கு வரும் தறுவாயிலும், பாடல்வல்ல உமாதேவியார் மெச்சிப் புகழ, பசுபதியாகிய சிவபெருமான் ஊழித்தாண்டவத்தை நிகழ்த்தும் இறுதிக் காலத்திலும்கூட அழியாமல் மேன்மைபெற்று விளங்கும்.

விழிக்குத் துணைதிரு மென்மலர்ப் பாதங்கள் மெய்ம்மைகுன்றா
மொழிக்குத் துணைமுரு காவெனு நாமங்கள் முன்புசெய்த
பழிக்குத் துணையவன் பன்னிரு தோளும் பயந்ததனி
வழிக்குத் துணைவடி வேலுஞ்செங் கோடன் மயூரமுமே.

நமது கண்களுக்குத் துணையாவது திருமுருகப்பெருமானது புனிதமானவையும் மென்மையானவையுமான செந்தாமரை மலர் போன்ற திருவடிகளேயாகும். உண்மையில் ஒருசிறிதும் குறையாத சொல்லுக்குத் துணையாவது “முருகா“ என்று கூறும் அப்பரமபதியின் திருநாமங்களே ஆகும். முன்பு செய்த பழியைத் தருகின்ற பாவத்தை அகற்றுவதற்குத் துணையாவது திருமுருகப்பெருமானின் பன்னிரண்டு புயங்களுமேயாகும். அஞ்சுந்தன்மையுடைய தனிமையான வழிக்குத் துணையாவது திருச்செங்கோட்டில் எழுந்தருளியுள்ள கந்தப்பெருமானுடைய கூர்மையான வேலாயுதமும் மயிலுமேயாகும்.

சேந்தனைக் கந்தனைச் செங்கோட்டு வெற்பனைச் செஞ்சுடர்வேல்
வேந்தனைச் செந்தமிழ் நூல்விரித் தோனை விளங்குவள்ளி
காந்தனைக் கந்தக் கடம்பனைக் கார்மயில் வாகனனைச்
சாந்துணைப் போது மறவா தவர்க்கொரு தாழ்வில்லையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவந்த திருமேனியையுடைய சேந்தனை, கந்தப்பெருமானை, திருச்செங்கோட்டு மலையில் எழுந்தருளியிருப்பவரை, சிவந்த வேலுக்குத் தலைவரை, செந்தமிழ் நூல்கள் பரவும்படி செய்பவரை, விளங்குகின்ற வள்ளியம்மையின் கணவரை, பரிமளம் மிகுந்த கடப்ப மலரால் ஆகிய மாலையை அணிந்தவரை, மழையைப் பொழியும் மேகத்தைக் கண்டு மகிழ்கின்ற மயிலை வாகனமாக உடையவரை, உயிர் பிரியும்வரை மறவாதவர்களுக்கு எந்த ஒரு குறையும் உண்டாகாது.

போக்கும் வரவு மிரவும் பகலும் புறம்புமுள்ளும்
வாக்கும் வடிவு முடிவுமில் லாதொன்று வந்துவந்து
தாக்கு மநோலயந் தானே தருமெனைத் தன்வசத்தே
ஆக்கு மறுமுக வாசொல் லொணாதிந்த ஆனந்தமே.

போதலும், வருதலும், இரவும், பகலும், வெளியும், உள்ளிடமும், வாக்கும், உருவமும், இறுதியும், ஒன்றும் இல்லாததாகிய ஒரு பரம்பொருள் அடியேனிடம் மீண்டும் மீண்டும் வந்து சார்ந்து நின்று, தானாகவே அடியேனுக்கு மன ஒடுக்கத்தைத் தந்தருளி அடியேனைத் தன்வயப்படுத்திக் கொள்கின்றபோது உண்டாகின்ற இணையற்ற பேரின்பம் இத்தகையது என்று கூறுவதற்கு இயலாது, ஆறு திருமுகங்களையுடைய திருமுருகப்பெருமானே!

அராப்புனை வேணியன் சேயருள் வேண்டு மவிழ்ந்த அன்பாற்
குராப்புனை தண்டையந் தாள்தொழல் வேண்டுங்கொடிய ஐவர்
பராக்கறல் வேண்டும் மனமும் பதைப்பறல் வேண்டு மேன்றால்
இராப்பக லற்ற இடத்தே யிருக்கை யெளிதல்லவே.

பாம்பையணிந்த முடியையுடைய சிவபெருமானுடைய திருமைந்தராகிய திருமுருகப்பெருமானின் திருவருள் வேண்டும். மலர்ந்து நெகிழ்ந்த அன்பினால் குரா மலர் மாலையையும் தண்டையையும் அணிந்துள்ள அழகிய திருவடிகளை வணங்க வேண்டும். கொடிய ஐம்புலன்களின் வேடிக்கை ஒழிய வேண்டும். மனமும் துடிப்பு நீங்குதல் வேண்டும். இவற்றை அடையப் பெறாவிடின் இரவு பகல் இல்லாத இடத்தில் சும்மா இருத்தல் எளிதாகாதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிக்கின் றிலைபழ நித்திரு நாமம் படிப்பவர்தாள்
முடிக்கின் றிலைமுரு காவென் கிலைமுசி யாமலிட்டு
மிடிக்கின் றிலைபர மாநந்த மேற்கொள விம்மிவிம்மி
நடிக்கின் றிலைநெஞ்ச மேதஞ்ச மேது நமக்கினியே.

ஓ, நெஞ்சமே, பழநியில் எழுந்தருளியுள்ள திருமுருகப்பெருமானின் திருநாமங்களை ஓதுகின்றாயில்லை. பழநி ஆண்டவரது திருநாமங்களை ஓதுகின்ற அடியார்களின் திருவடிகளைத் தலையில் சூடிக் கொள்கின்றாயில்லை. பரம்பொருளாகிய திருமுருகப்பெருமானை "முருகா" என்று அழைக்கின்றாயில்லை. யாசிப்பவர்கள் பசியால் மெலிவடையாமல் இருக்கும் பொருட்டு அவர்களுக்குப் உணவு வழங்கி அதனால் நீ வறியவனாகிவிடவில்லை. பேரின்பம் மிகுதியாக வரும்பொருட்டு விம்மி விம்மி அழுது ஆடுகின்றாயில்லை. இனி நமக்கு அடைக்கலம் தரும் பற்றுக்கோடு எங்கு உள்ளது?

கோடாத வேதனுக் கியான்செய்த குற்றமென் குன்றெறிந்த
தாடாள னேதென் தணிகைக் குமரநின் றண்டையந்தாள்
சூடாத சென்னியு நாடாத கண்ணுந் தொழாதகையும்
பாடாத நாவு மெனக்கே தெரிந்து படைத்தனனே.

கோணலின்றி ஆக்கல் தொழில்புரியும் பிரம்ம தேவனுக்கு அடியேன் செய்த குற்றம் யாது? கிரௌஞ்ச மலை பிளவுபடுமாறு வேலாயுதத்தை ஏவிய மிகுதியான முயற்சி உள்ளவரே, தெற்குத் திசையில் உள்ள திருத்தணிகை என்னும் திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள குமரக் கடவுளே! தேவரீருடைய தண்டையணிந்த அழகிய திருவடிகளை அணிகலனாகச் சூடிக் கொள்ளாத தலையும், தேவரீரின் திருவடிகளைக் கண்டு மகிழாத கண்களும், தேவரீரின் திருவடிகளைக் கை கூப்பி வணங்காத கைகளும் தேவரீரின் திருவடிகளின் புகழைத் துதித்துப் பாடாத நாவும் அடியேனுக்கென்றே பிரம்மதேவன் தெரிந்து படைத்தனனே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூர்கொண்ட வேலனைப் போற்றாம லேற்றங்கொண் டாடுவிர்காள்
போர்கொண்ட கால னுமைக்கொண்டு போமன்று பூண்பனவுந்
தார்கொண்ட மாதரு மாளிகை யும்பணச் சாளிகையும்
ஆர்கொண்டு போவரை யோகெடு வீர்நும் மறிவின்மையே.

கூர்மையான வேலாயுதத்தை உடைய திருமுருகப் பெருமானைப போற்றாமல் உங்கள் மனை மாட்சி, நிதி, அணிகலன் ஆகியவற்றின் மிகுதியைப் பற்றிப் பெருமை பாராட்டிக் கொண்டாடும் மனிதர்களே! போர்த் தொழிலையே மேற்கொண்டுள்ள இயமனுடைய மந்திரியாகிய காலன் என்பவன் உங்களைக் கொண்டுபோகின்ற அந்த நாளில் நீங்கள் அணிந்து கொள்கின்ற ஆபரணங்களையும், பூமாலையை அணிந்துள்ள பெண்களையும், மாளிகை போன்ற வீட்டையும் பணப்பையையும் யார் எடுத்துக்கொண்டு போவார்கள்? ஐயோ, உங்களின் மூடத்தனத்தாலேயே நீங்கள் வீணே கெட்டுப் போகின்றீர்களே!

பந்தாடு மங்கையர் செங்கயற் பார்வையிற் பட்டுழலுஞ்
சிந்தா குலந்தனைத் தீர்த்தருள் வாய்செய்ய வேல்முருகா
கொந்தார் கடம்பு புடைசூழ் திருத்தணிக் குன்றினிற்குங்
கந்தா இளங்கும ராஅம ராவதி காவலனே.

பந்து விளையாடும் பெண்களின் சிவந்த கயல்மீன் போன்ற கண் நோக்கில் அடியேன் அகப்பட்டு உழல்கின்ற மனோ வியாகூலத்தைப் போக்கி அருள்புரிவீராக, செம்மையான வேலாயுதத்தைத் தாங்கிய திருமுருகப் பெருமானே! பூங்கொத்துக்கள் நிறைந்த கடப்பமரங்கள் சூழ்ந்திருக்கின்ற திருத்தணிகை மலைமீது நிலைபெற்றிருக்கும் கந்தக் கடவுளே, என்றும் அகலாத இளம்பருவத்தினை உடைய குமரக்கடவுளே, வானுலகத்தின் தலைநகராகிய அமராவதியைக் காத்தருள்பவரே!

மாகத்தை முட்டி வருநெடுங் கூற்றவன்வந் தாலென்முன்னே
தோகைப் புரவியிற் றோன்றிநிற் பாய்சுத்த நித்தமுத்தித்
த்யாகப் பொருப்பைத் த்ரிபுராந் தகனைத் த்ரியம்பகனைப்
பாகத்தில் வைக்கும் பரமகல் யாணிதன் பாலகனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகாயத்தை முட்டி வருகின்ற நெடிய இயமன் அடியேனின் இறுதிக் காலத்தில் வருவான் ஆயின், அடியேனுக்கு முன்பாக குதிரையையொத்த தோகையையுடைய மயிலின்மீது தேவரீர் ஏறி வந்து அடியேனுக்கு முன்பாக நின்று திருவருள்புரிவீர். தூய்மையானதும் என்றும் அழியாதது மான முக்தியை வழங்கும் கொடைத் தன்மையுடைய மலையைப் போன்றவரும் முப்புரத்தை எரித்தவரும் மூன்று கண்களை உடையவருமான சிவபெருமானை தம் வலப்பக்கத்தில் வைத்திருக்கும் மேலான கல்யாண குணங்களுடைய உமாதேவியாரின் திருமைந்தரே!

வேலா யுதன்சங்கு சக்ராயு தன்விரிஞ் சன்னறியாச்
சூலா யுதன் தந்த கந்தச் சுவாமி சுடர்க்குடுமிக்
காலா யுதக்கொடி யோனரு ளாய கவசமுண்டென்
பாலா யுதம்வரு மோயம னோடு பகைக்கினுமே.

வேலாயுதத்தை உடைய கந்தப்பெருமான், சங்கையும் சக்கராயுத்தையும் ஆயதமாகக் கொண்டுள்ள திருமாலும் பிரம்மதேவனும் அறிந்து கொள்ள முடியாத திரிசூலத்தை உடைய சிவபெருமான் பெற்றருளிய திருமைந்தர் ஆவார். ஒளிவீசும் உச்சிக் கொண்டையையும் ஆயுதமாகப் பயன்படுகின்ற காலையும் உடைய சேவலைக் கொடியாகக்கொண்ட கந்தப்பெருமானது திருவருளாகிய கவசம் அடியேனின் உடலில் இருக்கின்றது. ஆதலால் இயமனோடு பகைத்தாலும் என்னிடத்தில் அவனுடைய ஆயுதம் வருமோ?

குமரா சரணஞ் சரணமென் றண்டர் குழாந்துதிக்கும்
அமரா வதியிற் பெருமாள் திருமுக மாறுங்கண்ட
தமராகி வைகுந் தனியான ஞான தபோதனர்க்கிங்
கெமராசன் விட்ட கடையேடு வந்தினி யென்செயுமே.

“குமரப்பெருமானே, தேவரீரின் திருவடிகளில் சரணம், சரணம் அடைக்கலம் என்று கூறியவாறு தேவர் குழுக்கள் துதிசெய்கின்ற அமராவதி என்னும் தேவருலகில் எழுந்தருளியுள்ள திருமுருகப் பெருமானின் மேன்மை பொருந்திய திருமுகங்கள் ஆறையும் தரிசித்துப் பக்தித் தமராகி இனிது வாழ்கின்ற ஒப்பற்ற ஞானம் வாய்க்கப்பெற்ற தவச் செல்வர்களுக்கு இயமன் எழுதியனுப்பும் இறுதிக் கால ஓலையானது இங்கு வந்து அவர்களை இனிமேல் என்ன செய்ய முடியும்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணங்கித் துதிக்க அறியா மனித ருடனிணங்கிக்
குணங்கெட்ட துட்டனை யீடேற்றுவாய் கொடி யுங்கழுகும்
பிணங்கத் துணங்கை யலகை கொண்டாடப் பிசிதர்தம்வாய்
நிணங்கக்க விக்ரம வேலா யுதந்தொட்ட நிர்மலனே.

தேவரீரின் திருவடிகளைப் பணிந்து திருப்புகழைப் பாடிப் பரவுவதற்கு அறியாத மனிதர்களோடு சேர்ந்து நற்குணம் அற்றுப் போன தீயவனாகிய அடியேனைக் கடைத் தேறச்செய்து அருள்புரிவீராக! போர்க்களத்தில் காக்கைகளும் கழுகுகளும் ஒன்றோடொன்று சண்டையிட்டுக் கொள்ளவும் பேய்கள் துணங்கைக் கூத்தினை மகிழ்ந்து ஆடவும், அரக்கர்கள் தம் வாயிலிருந்து கொழுப்பினை உமிழவும் வீரம்பொருந்திய வேலாயுதத்தை அவர்கள் மீது விடுத்து அருளிய நிர்மலனே!

மாலோன் மருகனை மன்றாடி மைந்தனை வானவர்க்கு
மேலான தேவனை மெய்ஞ்ஞான தெய்வத்தை மேதினியிற்
சேலார் வயற்பொழிற் செங்கோடனைச்சென்று கண்டுதொழ
நாலா யிரங்கண் படைத்தில னேயந்த நான்முகனே.

திருமாலின் திருமருகரை, கனக சபையில் திருநடனம்புரியும் சிவபெருமானின் திருப்புதல்வரை, தேவர்களுக்கும் உயர்வான தேவ தேவரை உண்மை அறிவின் வடிவாகிய முழுமுதற்கடவுளை, இவ்வுலகில் கெண்டை மீன்கள் நிறைந்த வயல்களும் சோலைகளும் சூழ்ந்த திருச்செங்கோட்டில் எழுந்தருளியிருக்கும் திருமுருகப்பெருமானை அவருடைய திருக்கோயிலுக்குச் சென்று கண்குளிரக் கண்டு வணங்கும் பொருட்டு அந்தப் பிரம்மதேவன் அடியேனுக்கு நாலாயிரம் கண்களைப் படைக்கவில்லையே!

யான்றானெ னுஞ்சொல் லிரண்டுங் கெட்டாலன்றி யாவருக்குந்
தோன்றாது சத்தியந் தொல்லைப் பெருநிலஞ் சூகரமாய்க்
கீன்றான் மருகன் முருகன் க்ருபாகரன் கேள்வியினாற்
சான்றாரு மற்ற தனிவெளிக் கேவந்து சந்திப்பதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"யான்", "தான்" என்னும் இரண்டு சொற்களும் இல்லாமற்போனாலன்றி அத்துவிதமுக்தி எவருக்கும் தோன்றாது. இது உண்மை. பழமை பொருந்திய பெரிய பூமியை வராகமாய் உருவெடுத்து பிளந்தவராகிய திருமாலின் திருமருகரும் முருகவேளுமாகிய கருணைக்கு உறைவிடமாகிய கிருபாகரனது உபதேசக் கேள்வியினால் சாட்சி ஒருவரும் இல்லாத ஒப்பற்ற ஞான வெளியில் திருமுருகப்பெருமானின் திருவருளால் வந்து கூடுவது அத்துவித-முக்தியாகும்.

கதிதனை யொன்றையுங் காண்கின்றி லேன்கந்த வேல்முருகா
நதிதனை யன்னபொய் வாழ்விலன் பாய்நரம் பாற்பொதிந்த
பொதிதனை யுங்கொண்டு திண்டாடு மாறெனைப் போதவிட்ட
விதிதனை நொந்துநொந் திங்கேயென் றன்மனம் வேகின்றதே.

கந்தப்பெருமானே, வேலாயுதத்தையுடைய திருமுருகப்பெருமானே! முக்திவீட்டை அடைவதற்குரிய நெறியொன்றையேனும் காண்கின்றேன் இல்லை. ஆற்றுநீர்ப் பெருக்கு போல நிலையற்ற பொய்யான உலக வாழ்க்கையில் பற்றுடையவனாகி, நரம்புகளால் கட்டப்பட்ட உடலாகிய மூட்டையைச் சுமந்துகொண்டு துன்புறுமாறு பிறக்கச் செய்த விதியினை நினைத்து உள்ளம் நொந்து நொந்து அடியேனின் மனம் வேதனைப்படுகின்றது.

இடுதலைச் சற்றுங் கருதேனைப் போதமி லேனையன்பாற்
கெடுதலி லாத்தொண் டரிற்கூட் டியவா! கிரௌஞ்ச வெற்பை
அடுதலைச் சாதித்த வேலோன் பிறவி யறவிச்சிறை
விடுதலைப் பட்டது விட்டது பாச வினைவிலங்கே.

வறியவர்க்குத் தருவதைச் சிறிதும் எண்ணாதவனும் அறிவற்றவனுமாகிய அடியேனை அன்பால் தீமையற்ற தொண்டர்களுடன் சேர்த்து அருளியவரே! கிரௌஞ்ச மலையை அழித்து முடித்த வேலாயுதக் கடவுளின் அருளால், அடியேனின் பிறவித் துன்பம் அற்றுப் போய் இந்த உடலாகிய சிறைவாசம் முடிவுற்று விடுதலையானேன் பாசத்தாலும் வினையாலும் வந்த விலங்கும் விட்டு ஒழிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சலங்காணும் வேந்தர்தமக்கு மஞ்சார் யமன் சண்டைக்கஞ்சார்
துலங்கா நரகக் குழியணு காரதுட்ட நோயணுகார்
கலங்கார் புலிக்குங் கரடிக்கும் யானைக்குங் கந்தனன்னூல்
அலங்கார நூற்று ளொருகவிதான்கற் றறிந்தவரே.

சினம் கொள்கின்ற அரசர்களுக்கும் அஞ்சமாட்டார்கள், இயமனுடைய போருக்கும் அஞ்சமாட்டார்கள், இருண்ட நரகக் குழியை அடைய மாட்டார்கள், கொடிய நோய்களால் துன்புறமாட்டார்கள் புலி கரடி யானை முதலிய கொடிய விலங்குகள் குறித்தும் மனம் கலங்க மாட்டார்கள். கந்தப்பெருமானது பெருமையைக் கூறும் நல்ல நூலாகிய கந்தரலங்காரத்தின் நூறு திருப்பாடல்களுள் ஒரு திருப்பாடலையேனும் கற்று அதன் மெய்ப்பொருளை உணர்ந்தவர்களே அவர்களாவர்.

திருவடி யுந்தண்டை யுஞ்சிலம் புஞ்சிலம் பூடுருவப்
பொருவடி வேலுங் கடம்புந் தடம்புயம் ஆறிரண்டும்
மருவடி வான வதனங்க ளாறும் மலர்க்கண்களுங்
குருவடி வாய்வந்தென் னுள்ளங் குளிரக் குதிகொண்டவே.

திருமுருகப்பெருமானுடைய திருவடிகளும் அவற்றில் விளங்கும் தண்டை அணிகலனும், உள்ளே மணிகள் ஒலிக்கும் சிலம்பும் கிரௌஞ்ச மலையைத் தொளைத்துப் போர் செய்த கூர்மையான வேலாயுதமும், கடப்ப மலர் மாலையும், அம்மாலைகளுடன் கூடிய விசாலமான பன்னிரண்டு புயங்களும் பொருந்திய அழகு மிக்க ஆறு திருமுகங்களும் குருமூர்த்தியாக எழுந்தருளிவந்து அடியேனுடைய மனம் குளிருமாறு ஆனந்தக் கூத்தாடின.

ஆவிக்கு மோசம் வருமா றறிந்துன் னருட்பதங்கள்
சேவிக்க என்று நினைக்கின்றி லேன்வினை தீர்த்தருளாய்
வாவித் தடவயல் சூழுந் திருத்தணி மாமலைவாழ்
சேவற் கொடியுடை யானே யமர சிகாமணியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறவிநோய்க்கு காரணமான வினையின் விளைவே உயிருக்குக் கேடு செய்வதாக உள்ளது என்பதை அறிந்தபோதிலும் தேவரீருடைய திருவருளாகிய திருவடிகளை வணங்குவதை எக்காலமும் சிந்திக்கின்றேன் இல்லை. அடியேனுடைய வினையின் விளைவைத் தீர்த்து அருள்புரிவீராக, குளங்களும் பரந்த வயல்களும் சூழ்ந்துள்ள பெருமைக்குரிய திருத்தணி மலை மீது எழுந்தருளியுள்ள சேவற்கொடியை உடையவரே, தேவர்களுக்கு முடிமணியாகத் திகழ்பவரே!

கொள்ளித் தலையில் எறும்பது போலக் குலையுமென்றன்
உள்ளத் துயரை யொழித்தரு ளாயொரு கோடிமுத்தந்
தெள்ளிக் கொழிக்குங் கடற்செந்தின் மேவிய சேவகனே
வள்ளிக்கு வாய்த்தவ னேமயிலேறிய மாணிக்கமே.

இருதலைக் கொள்ளியின் இடையில் அகப்பட்டுக் கொண்ட எறும்பைப் போல துன்புறுகின்ற அடியேனுடைய மனத் துயரை நீக்கி அருள்வீராக! ஒருகோடி முத்துக்களை தெள்ளிக் கொழிக்கும்படியான கடற்கரையில் அமைந்திருக்கும் திருச்செந்தூரில் எழுந்தருளியிருக்கும் வீரரே! வள்ளியம்மையின் அன்புக் கணவராய் வாய்த்த தலைவரே! மயில்மீது ஏறிவரும் மாணிக்கமே!

சூலம் பிடித்தெம பாசஞ் சுழற்றித் தொடர்ந்துவருங்
காலன் தனக்கொரு காலுமஞ் சேன் கடல் மீதெழுந்த
ஆலங் குடித்த பெருமான் குமாரன் அறுமுகவன்
வேலுந் திருக்கையு முண்டே நமக்கொரு மெய்த்துணையே.

சூலாயுதத்தைக் கையிற்பிடித்துக் கொண்டும் இயமனுடைய பாசக் கயிற்றைச் சுழற்றிக் கொண்டும் உயிர்களைப் பின்தொடர்ந்து வருகின்ற இயமனின் அமைச்சரான காலன் என்பவனுக்கு அடியேன் ஒருபோதும் அஞ்சமாட்டேன், ஏனென்றால் சமுத்திரத்தில் உண்டாகிய ஆலகால விடத்தை உண்டருளிய சிவபெருமானின் திருக்குமாரனாகிய ஆறுமுகப்பெருமானுடைய வேலாயுதமும் திருக்கரமும் நமக்கு ஒப்பற்றதோர் உண்மைத் துணையாக உள்ளன!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பைரவக் கடவுள் வாழ்த்து – கந்தபுராணம்

பரமனை மதித்திடாப் பங்க யாசனன்
ஒருதலை கிள்ளியே யொழிந்த வானவர்
குருதியு மகந்தையுங் கொண்டு தண்டமுன்
புரிதரு வடுகனைப் போற்றி செய்குவாம்.

வெஞ்சினப் பரியழன் மீது போர்த்திடும்
அஞ்சனப் புகையென வால மாமெனச்
செஞ்சுடர்ப் படிவமேற் செறித்த மாமணிக்
கஞ்சுகக் கடவுள்பொற் கழல்க ளேத்துவாம்.

### ஐயனார் வாழ்த்து – கந்தபுராணம்

பை அரா அமளியானும் பரம் பொருள் முதலும் நல்கும்
ஐயனே ஓலம் விண்ணோர்க்கு ஆதியே ஓலம் செண்டார்
கையனே ஓலம் எங்கள் கடவுளே ஓலம் மெய்யர்
மெய்யனே ஓலம் தொல் சீர் வீரனே ஓலம் ஓலம்.

ஆரணச் சுருதி ஓர் சார் அடல் உருத்திரன் என்று ஏத்தும்
காரணக் கடவுள் ஓலம் கடல் நிறத்து எந்தாய் ஓலம்
பூரணைக்கு இறைவா ஓலம் புட்கலை கணவா ஓலம்
வாரணத்து இறை மேல் கொண்டு வரும் பிரான் ஓலம் என்றாள்.

காருறழ் வெய்ய களிற்றிடையாகிப்
பாரிட எண்ணிலர் பாங்குற நண்ணப்
பூரணை புட்கலை பூம்புற மேவ
வாரணம் ஊர்பவன் முன்னுற வந்தான்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறப்பின் பின் உயிர் செல்லும் பாதையும் கதியும்....
## எமது மூல நூல்களான வேதாகமங்களிலும் ஞானியர் வாக்குகளிலும் இருந்தான தொகுப்பு

ஆன்மாக்கள் உடம்பை விட்டவுடன், தூமாதி மார்க்கம் (இருள் மார்க்கம்), அர்ச்சிராதி மார்க்கம் (ஒளி மார்க்கம்) என்ற இரு வழியாக பயணிக்கின்றது. “வேதங்கள் கூறுகின்றன இந்த உடலிலிருந்து உயிர் பிரிந்தபின் இரண்டு விதமான பாதைகளில் உயிர் பயணிக்கலாம். ஒன்று ஒளி மார்க்கம் மற்றயது இருள் மார்க்கம்.ஒளி மார்க்கத்தில் பயணிக்கின்ற உயிர்கள் மீண்டும் பிறப்பதில்லை ஆனால் இருள் மார்க்கத்தில் செல்லும் உயிர்கள் மீண்டும் பிறக்கின்றன.

**பகவத்கீதை 8.26**

### ஒளி மார்க்கம் (அர்ச்சிராதி மார்க்கம்)

ஒளிமார்க்கம் என்பது எல்லோரும் பொதுவில் கருதுவது போல புண்ணியம் செய்த ஆன்மாக்கள் செல்லும் கதி அல்ல. இதையே திருவாசகம் - போற்றித் திரு அகவலில் மாணிக்கவாசகர்

"நரகொடு சுவர்க்கம் நானிலம் புகாமல்
பரகதி பாண்டியர்க் அருளினை போற்றி"

என்று பாடுகின்றார். இங்கு சுவர்க்கம் முதலிய போகங்களும் நரகத்திற்கு சமனாகவே வைத்து போற்றப்படுகின்றது, ஏனெனில் செய்த புண்ணியம் யாவும் முடிவடைய சுவர்க்கம் சென்ற உயிர்களும் மீண்டும் வந்து பிறவியில் விழும் என்பதே பூரண உண்மையாகும். இதனால் சைவத்தில் மற்ற சமயங்கள் போல் சுவர்க்க இன்பங்கள் முடிந்த முடிவல்ல. இங்கு கூறப்பட்ட பரகதியே ஒளிமார்க்கத்தில் செல்லும் உயிர்கள் அடையும் பேறு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கதி ரோன வனை யண்ணலாக் கருத வேண்டா
வெங்கதி ரோன்வ ழியே போவதற் கமைந்து கொண்மின்
அங்கதி ரோன வனை யுடன்வைத்த வாதி மூர்த்தி
செங்கதி ரோன்வ ணங்குந் திருச்சோற்றுத் துறைய னாரே.

பொழிப்புரை:
அழகிய கிரணங்களை உடைய பிறையைக் கங்கை பாம்பு முதலியவற்றுடன் சடையில் வைத்த முதற்கடவுள் சிவபெருமான், சூரியனால் வணங்கப்படுகின்ற திருச்சோற்றுத்துறையனாரே, ஆதலின் அழகிய கிரணங்களை உடைய சூரியனைத் தலைமைக் கடவுளாகக் கருதாமல், அந்தச் சூரிய மண்டலத்தின் வழியாக **அர்ச்சிராதி மார்க்கமாய்** வீட்டுலகத்தை அடைவதற்கு உங்களைப் பக்குவப்படுத்திக் கொள்ளுங்கள்.

மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே -
- சிவபுராணம், திருவாசகம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒளிமார்க்கத்தில் செல்லும் உயிர்கள்பெறும் வரவேற்புகள்

"ஒளி மார்க்கத்தில் செல்லும் உயிர்கள் இறப்பின் பின் இறுதிச்சடங்குகள் (அபரக்கிரியைகள்) செய்தாலும் செய்யாவிடிலும் எந்த பாதிப்பும் அடைவதில்லை. ஒளிமார்க்கத்தில் செல்லும் உயிர்கள் நாள் தேவதை, சுக்ல பக்ஷ தேவதை, உத்தராயண தேவதை,வருஷ தேவதை, சூர்யன் , சந்திரன் , மின்னல் போன்றதேவதைகளின் வரவேற்பையும் உபசரிப்பையும் பெற்று, பிரம்மலோகம் முதலிய பல உலகங்களினூடாக சென்று, ஈற்றில் பரப்பிரமத்தை அடைகின்றது. இந்த பாதையில் செல்வோர் ஒருபோதும் இந்த மரண உலகத்திற்கு திரும்ப மாட்டார்கள். அவர்கள் ஒருபோதும் திரும்ப மாட்டார்கள்".

சாம வேதம், சாந்தோக்ய உபநிடதம் 4.15.5

"ஒளி மார்க்கத்தில் செல்லும் உயிர்கள், இறப்பின் பின் அக்னி தேவனின் உலகத்தையும் , வாயு தேவனின் உலகத்தையும் ,வருண தேவனின் உலகத்தையும், இந்திர தேவனின் உலகத்தையும் ,பிரஜாபதியின் உலகத்தினையும் அடைந்து அந்தந்த தேவதைகளின் வரவேற்புகளையும் உபசரிப்புகளையும் பெற்று ஈற்றில் பரபிரம்மத்தினை அடைகின்றது"

ரிக் வேதம்1.3

இவ்வாறு வேதங்கள், ஆகமங்கள், பிரம்ம-சூத்திரம், புராணங்கள் என ஒளிமார்க்க பாதையின் வர்ணனைகள் பலவாறாக இருந்தாலும், தாம் செல்லும் பாதை எப்படி இருந்தது என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் மட்டுமே நேரடி வர்ணனை கொடுத்தவர். திருக்கயிலாயம் (மகா கைலாயம்) செல்லும் போது தமக்கு கிடைத்த உபசரிப்புகள் வரவேற்புகள் முழுவதையும் திருநொடித்தான் மலை பதிகமாக பாடி, வர்ண தேவன் மூலம் பதிகத்தை திருவஞ்சைக்களத்தில் சேர்ப்பிக்கவும் பணித்தருளியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணுல கிற்பிறந்து நும்மை
வாழ்த்தும் வழியடியார்
பொன்னுல கம்பெறுதல் தொண்ட
னேன்இன்று கண்டொழிந்தேன்
விண்ணுல கத்தவர்கள் விரும்
பவெள்ளை யானையின்மேல்
என்னுடல் காட்டுவித்தான் நொடித்
தான்மலை உத்தமனே

பொழிப்புரை :மண்ணுலகில் மக்களாய்ப் பிறந்து நும்மைப் பாடுகின்ற பழவடியார் , பின்பு பொன்னுலகத்தைப் பெறுதலாகிய உரை யளவைப் பொருளை , அடியேன் இன்று நேரிற்கண்டேன் என்று தன்பால் வந்து சொல்லுமாறு , திருக்கயிலை மலைக்கண் வீற்றிருந் தருளும் முதல்வன் , தேவரும் கண்டு விருப்பங்கொள்ள, என் உடம்பை வெள்ளை யானையின்மேல் காணச் செய்தான் அவனது திருவருள் இருந்தவாறு என் !

இந்திரன் மால்பிரமன் னெழி
லார்மிகு தேவரெல்லாம்
வந்தெதிர் கொள்ளஎன்னை மத்த
யானை யருள்புரிந்து
மந்திர மாமுனிவர் இவன்
ஆர்என எம்பெருமான்
நந்தமர் ஊரனென்றான் நொடித்
தான்மலை உத்தமனே

பொழிப்புரை :திருக்கயிலை மலைக்கண் வீற்றிருந்தருளும் முதல்வனாகிய எம்பெருமான், இந்திரன், திருமால், பிரமன், எழுச்சி பொருந்திய மிக்க தேவர் ஆகிய எல்லாரும் வந்து என்னை எதிர் கொள்ளுமாறு , எனக்கு யானை யூர்தியை அளித்தருளி, அங்கு , மந்திரங்களை ஓதுகின்ற முனிவர்கள், இவன் யார் என்று வினவ, இவன் நம் தோழன் ஆரூரன் என்னும் பெயரினன் என்று திருவாய் மலர்ந்தருளினான் அவனது திருவருள் இருந்தவாறு என் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊழிதொ றூழிமுற்றும் உயர்
பொன்நொடித் தான்மலையைச்
சூழிசை யின்கரும்பின் சுவை
நாவல ஊரன்சொன்ன
ஏழிசை இன்றமிழால் இசைந்
தேத்திய பத்திளையும்
ஆழி கடலரையா அஞ்சை
யப்பர்க் கறிவிப்பதே

பொழிப்புரை :

ஆழ்ந்ததாகிய கடலுக்கு அரசனே ! உலகம் அழியுங்காலந்தோறும் உயர்வதும், பொன்வண்ணமாயதும் ஆகிய திருக்கயிலை மலைக்கண் வீற்றிருந்தருளும் முதல்வனை , திரு நாவலூரில் தோன்றியவனாகிய யான், 'இசை நூலிற் சொல்லப்பட்ட, ஏழாகிய இசையினையுடைய, இனிய தமிழால், மிக்க புகழை யுடையனவாகவும் , கரும்பின் சுவை போலும் சுவையினை யுடையனவாகவும் அப்பெருமானோடு ஒன்றுபட்டுப் பாடிய இப் பத்துப் பாடல்களையும் , திருவஞ்சைக்களத்தில் வீற்றிருந்தருளும் பெருமானுக்கு, நீ அறிவித்தல் வேண்டும் .

## இருள் மார்க்கம் (தூமாதி மார்க்கம்)

"கிழியும் படியடற் குன்றெறிந் தோன்கவி கேட்டுருகி
இழியுங் கவிகற் றிடாதிருப் பீரெரி வாய்நரகக்
குழியுந் துயரும் விடாய்ப்படக் கூற்றுவனூர்க் குச்செல்லும்
வழியுந் துயரும் பகரீர் பகரீர் மறந்தவர்க்கே."

கந்தரலங்காரம்

பொழிப்புரை - வலிமையுடைய கிரௌஞ்ச மலையைப் பிளந்து ஒழியுமாறு, வலிமையுடைய வேலாயுதத்தை விடுத்து அருளிய திருமுருகப்பெருமானைப் புகழும் அருட்பாடல்களைக் கேட்டு உள்ளம் உருகி, ஏனைய இழிந்த பாடல்களைக் கற்காமல் இருப்பீராக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெருப்புடன் கூடிய நரகக்குழியையும், அதனால் அனுபவிக்கக் கூடிய துன்பத்தையும், நீரில்லாத வழியே சென்று தவித்து, இயமனுடைய ஊருக்குப் போகின்ற கொடிய வழியையும், அதனால் உண்டாகும் துன்பத்தையும் மறந்தவர்களுக்குச் சொல்லுங்கள், மீண்டும் சொல்லுங்கள்.

மறந்தவர்களுக்கு மீண்டும் மீண்டும் இந்த இருள் மார்க்கத்தையும் அதில் ஆன்மா அனுபவிக்கும் துன்பத்தையும் சொல்லிக்கொடுங்கள் என்று அருணகிரி பெருமான் நம்மிடம் வேண்டிக் கொள்கின்றார். பெரும்பாலான உயிர்கள் அடையும் கதியினையே இம்மார்க்கம் குறிக்கின்றது. இந்த வழியில் செல்லும் உயிர்களை ஒரளவேனும் ஆசுவாசப்படுத்தும் பொருட்டே நாம் அபரக்கிரியைகளையோ (இறப்பின் பின்னரான சடங்குகள்) அல்லது பிதுர்க்காரியங்களையோ செய்கின்றோம்.

எல்லோரும் இறந்தபின் இறைபதம் அடைந்தார்/ சிவபதமடைந்தார் என்று ஒரு ஆறுதலுக்காக கூறினாலும், எவர் எந்த வழியில் சென்றார் என்று யாருக்கும் உறுதியாக தெரிவதில்லை. அதனால் இவ்வாறான அபரக்கிரியைகளும் அவசியமாகவே உள்ளது. மாணிக்கவாசகருக்கே இறைவன் சித்தம் எதுவாக இருக்குமென்று ஐயம் இருந்ததென்றால், இறப்பின் பின்னரான நமது பாதைக்கு எந்த உத்தரவாதமும் இல்லை.

மாவடு வகிரன்ன கண்ணிபங் காநின்
மலரடிக்கேகூவிடுவாய் கும்பிக் கேயிடு வாய் நின்
குறிப்பறியேன், பாவிடை யாடுகுழல் போற் கரந்துபரந்ததுள்ளம்
ஆகெடு வேன்உடை யாய்அடி யேன் உன்அடைக்கலமே

திருவாசகம் - அடைக்கலப்பத்து

(கும்பிக்கே இடுவாய், கும்பீபாகம் - எரிவாய் நரகம்)
பொழிப்புரை: - இறைவனே! மாவடு வகிர் போலும் கண்ணை யுடைய உமாதேவி பங்கனே! என்னை உன் திருவடிக்கீழ் சேர்த்துக் கொள் அன்றேல் நரகுக்கு ஆளாக்கு, உன் திருவுளக் குறிப்பை நான் அறிந்திலேன். பாவின் கண் ஆடுகின்ற குழல்போல என் மனம் அலைந்து நின்றது. அடியேன் உன் அடைக்கலமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இருள்மார்க்கத்தில் உயிர்கள் செல்லும் பாதை

இறப்பின் பின் இருள்மார்க்கத்தில் செல்லும் உயிர்கள் செல்லும் பாதை எப்படி இருக்குமென்று கருடபுராணத்தில் திருமால், கருடனிற்கு கூறி விளக்கிய சில பகுதியை பற்றிப்பார்ப்போம்.

கருடாழ்வார், திருமகள் கேள்வனான ஸ்ரீமன் நாராயணனை பணிந்து வணங்கி, 'சர்வலோக நாயகா! யமலோகம் என்பது இங்கிருந்து எவ்வளவு தூரத்தில் இருக்கிறது? அதன் தன்மை யாது? அவற்றைத் தயை செய்து கூறியருள வேண்டும்...' என்று கேட்கவும், கருணைக் கடலான பரந்தாமன், கருடனை நோக்கிக் கூறலானார். "கருடனே! மனிதர்கள் வாழும் மானுஷ்ய லோகத்திற்கும் யமபுரிக்கும் இடையில் எண்பத்தாறாயிரம் காதம் (காதம் = 7km) இடைவெளியுள்ளது. அந்த இயமலோகத்தை ஆளும் எமதர்மராஜன், இருள்மார்க்கத்தில் செல்லவேண்டிய உயிர்களின், ஒவ்வொருவருக்கும் உரிய ஆயுட்காலம் முடிந்ததும் ஜீவனைப் பிடித்து வரும்படியாகத் தன் தூதர்களிடம் கூறுவான். விகாரமான மூவகைத் தூதர்களை ஏவியனுப்புவான்.

வாழ்நாள் முடிந்த ஜீவனைப் பாசத்தால் கட்டிப் பிடித்து காற்றின் உருவமான தேகத்தில் அடைத்து யமலோகத்திற்குச் செல்வார்கள். ஆவி உருவ உயிர்களை, யமபுரித் தலைவன் முன்னால் நிறுத்துவார்கள். (காலதூதர்கள் உயிரை பற்றிய உடன் கொண்டு செல்வது- குறும் பாதை - உயிர் பறிக்கப்பட்டதை உறுதிப்படுத்துவதற்க்காக கொண்டுசெல்வது-ஒரு சில வினாடிகளே எடுக்கும்.)

"எமதர்மராஜன் அத்தூதர்களை நோக்கி,"ஏ கிங்கரர்களே! இந்த ஜீவனை மீண்டும் கொண்டு போய் அவன் வீட்டிலேயே விட்டுவிட்டு பன்னிரெண்டாம் நாள் கழிந்த பிறகு முறைப்படி மீண்டும் நம் சபை முன்பு நிறுத்துங்கள்." என்று கட்டளையிடுவான்.(இங்கு 12 நாள் என்பது எமது கணக்கிற்கு கிட்டத்தட்ட 1 வருடம்). "உடனே ஒரு நொடி நேரத்திற்குள் சீவனின் இல்லத்திற்கே கொண்டு வந்து விட்டு விடுவார்கள். ஆவி வடிவுடைய அந்த உயிர் சுடுகாட்டிலே தன் சிதைக்கு பத்து முழ உயரத்தில் நின்று, தீப்பற்றிக் கொழுந்து விட்டு எரியும் தன் உடலைப் பார்த்து, 'அந்தோ! ஐயையோ...!' என்று ஓலமிட்டு அழும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீயிலோ உடல் எரிந்து வெந்து சாம்பலான போதும், தன் உறவு பொருள் மீது இருந்த ஆசையானது ஒழியாது அவலப்படும்.. அவன் வாழ்ந்த வீட்டின் முன்பு நின்று, அங்கு இருப்பவர்களைப் பார்த்து பசி தாகத்தால் 'ஆ..ஆ...' என்று கதறி பதறி நிற்பான்.

புத்திரன் போடும் பிண்டத்தால் ஜீவனுக்குப் பிண்டத்தாலான சரீரம் முழுவதும் பூரணமாக உண்டாகும். முப்பத்தொன்றாம் நாளில் புரோகிதர் மூலமாய் புத்திரனால் கொடுக்கப்பட்டவற்றை உண்டு, பிண்டவுருவத்தில் உள்ள ஜீவனை யமதூதர்கள் பாசக்கயிற்றால் பிணித்து கட்டிப் பிடித்துக் கொண்டு போகும் போது தன் வீட்டை திரும்பித் திரும்பிப் பார்த்து கதறிக் கொண்டே இயம லோகத்தை அடைவான். "பிண்ட சரீரம் பெற்ற உயிர், யம கிங்கரர்களால் பாசத்தால் பிணைத்துக் கட்டப்பட்ட நிலையில், நாள் ஒன்றுக்கு இருநூற்று நாற்பத்தேழு காத வழி இரவுபகலுமாக நடந்து செல்ல வேண்டும்.

அவன் போகும் வழியில் கல், முள், அடர்ந்த காடுகளைக் கண்டு பிண்ட ஜீவன் பசியாலும், தாகத்தாலும் வருந்தித் தவிப்பான். வைவஸ்வத பட்டணம் என்ற பட்டணமுண்டு. அங்கு அச்சம் தரும் மிகவும் கோரமான பிராணிகளுக்கு இருப்பிடமாகவும், துக்கத்தையே கொடுப்பதாகவும் அமைந்திருக்கும். பாபம் செய்தவர்கள் மிகப் பலர் எப்போதும் 'ஆ, ஆ, ஊ, ஊ...' என்று ஓலமிடுவார்கள். "அங்கு வெப்பத்தால் கொதிக்கும் கொதி நீர்தான் காணப்படும். குடிக்க ஒரு துளித் தண்ணீர் கூடக் கிடைக்காது. அருந்துவதற்கு அருகதையற்ற ரத்தம் பொழிவதாக இருக்கும்.

இவ்வாறு இயமபுரிக்கு செல்லும் பாதையில் பல இடங்களில் தங்கி வினைக்கீடான துன்பத்தை ஜீவன் பலவழிகளில் அனுபவித்து செல்லும்.

(இவ்வாறு இயமபுரிக்கு செல்வதற்க்கு ஏறத்தாழ எமது கணிதப்படி ஒரு வருடம் எடுக்கும், அவர்கள் கணிதப்படி இது 12 நாட்கள். இதனால் தான் ஒருநாளும் ஒரு உணவுப்படி 12 மாசிகம் கொடுக்கின்றோம். இவ்வாறு மாசிகத்தில் கொடுக்கப்படும் தான, தர்மங்களால், தர்ப்பணத்தால் ஜீவன் ஓரளவேனும் துன்பங்களில் இருந்து ஆற்றுப்படுத்தப்படுகின்றது.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் உயிரோடிருந்த போது எத்தனை பாவங்கள் செய்தேன். ஞானிகளையும், சந்நியாசிகளையும் , பக்தர்களையும் ஏசிப் பேசிப் பரிகாசம் செய்தேன். அவற்றை எல்லாம் இப்போது அனுபவிக்கின்றேன். மலை போன்ற ஆயுதத்தால் யமகிங்கரர்கள் இரக்கமில்லாமலே என்னை அடித்துப் புடைக்கிறார்களே! அந்தோ! உடலுமில்லாமல் ஆவியாய் அவதியால் அலறித் தவிக்கிறேன்.' ஜீவனின் ஒவ்வொரு குரலுக்கும் தூதர்கள் அவனைத் துன்புறுத்த, அவன் அவர்களால் யமபுரிக்கு இழுத்துச் செல்லப்படுவான்!" என்று திருமால் கருடனுக்கு கூறியருளினார். இவ்வாறு கருடபுராணத்தில் மிகவும் விரிவாக இந்த பாதை பற்றிய விவரணங்களும், இயமபுரிக்கு சென்ற பின்னர் வழங்கப்படும் தீர்ப்புகள் பற்றியும் உண்டு. இந்தப்பாதை பற்றியே அருணகிரிநாதர் கந்தரலங்காரத்தில் "பயந்த தனி வழிக்குத் துணை வடிவேலும் செங்கோடன் மயூரமுமே" என்று பாடுகின்றார் .

இருள் மார்க்கத்தில் செல்லும் உயிர்கள் அடையும் கதி பொதுவாக ஐந்து வகையாக கூறப்பட்டுள்ளது. சுருக்கமாக கூறினால்

01) மீண்டும் உடனடியாக இன்னொரு யோனிவாய்ப்பட்டு பிறத்தல்.

02) மிகுதியாக தீவினை செய்த ஆன்மாக்கள், புற உடம்பினை விட்டவுடனேயே, உள்(அக) உடம்போடு நரகலோக துன்பங்களை தாங்கக்கூடிய உடம்பாகிய யாதனா சரீரத்தை எடுத்துக்கொண்டு, நரகத்திலே போய் அத்தீவினைப் பயனாகிய துன்பத்தை உரிய கால நியதிவரை அநுபவிக்கும். பின்னர் அனுபவிக்காமல் மிகுதியாக எஞ்சிய தீவினைப்பயனால் திரும்பப் பூமியில் வந்து தாவரங்களாய்ப் பிறக்கும், பின்பு அடுத்தடுத்த பிறவிகளில் முறையே நீர்வாழ்வனவாயும், பின்பு ஊர்வனவாயும், பின்பு பறவைகளாயும், பின்பு விலங்குகளாயும் பிறந்து, பின்பு இவ்வாறான பிறவிகளில் அறிந்தோ அறியாமலோ செய்த நல்வினைப்பயன் வந்து பொருந்த மனிதர்களாய்ப் பிறக்கும்.

03) மிகுதியாக நல்வினை செய்த ஆன்மாக்கள், புற உடம்பினை விட்டவுடனேயே, உள்(அக) உடம்போடு சுவர்க்கலோக இன்பங்களை தாங்கக்கூடிய உடம்பாகிய பூதசார சரீரமாகிய தேவ சரீரத்தை எடுத்துக்கொண்டு, சுவர்க்கத்திலே போய் அந்நல்வினைப் பயனாகிய இன்பத்தை அநுபவிக்கும். பின்னர் அனுபவிக்காமல் மிகுதியாக எஞ்சிய வினைப்பயனால் திரும்பப் பூமியில் வந்து மனிதர்களாய்ப் பிறக்கும் .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04) இவை தவிர நல்வினையும் தீவினையும் செய்த உயிர்கள் இரண்டினையும் சுவர்க்கம் ,நரகம் என்று மாறி மாறி அனுபவித்தபின்னர் மீண்டும் யோனி வாய்ப்பட்டு பிறப்பதும் உண்டு. நல்வினையும் தீவினையும் ஒன்றோடொன்று ஈடு செய்யமுடியாதது தனித்தனியாகவே அனுபவிக்கவேண்டியதாகும்.

05) இவை தவிர தற்கொலை மற்றும் அகால மரணமடைந்த உயிர்கள் இறந்தபின்னர் இயமலோகத்துக்குப் போகாது ஆவியாகவும் பேய் பிசாசுகளாகவும் பிரேத சரீரம் (Ghostly form) என்ற சரீரத்துடன் அலைகின்றன. இவற்றை அடக்கித் தனது கட்டுப்பாட்டில் கொண்டுவந்து வைத்திருப்பவரே வைரவக் கடவுள். இதனால்தான் வைரவ மூர்த்தியைச் சுடலையிலும், ஊரெல்லையிலும், வளவு மூலைகளிலும் தாபித்து வழிபடுகின்றோம். வைரவரைத் துதித்தால் பேய், பிசாசுகள் அண்டாது. குடும்பத்தில் அவல மரணம் நிகழ்ந்தால் வைரவரைத் துதி செய்து வர, இறந்தவரின் ஆன்மா வைரவரின் கட்டுப்பாட்டில் வந்து சாந்தியடையும்.

இவற்றின் மேலதிக விளக்கங்கள் கருட புராணம் உள்ளிட்ட பதினெண் புராணங்களிலும், வேதஆகமங்களிலும், மெய்கண்ட சாத்திரங்களிலும் அருளாளர்களின் பாடல்களிலுமாக மிகவும் விரிவாக விளக்கப்பட்டுள்ளன. அவற்றின் தொகுப்பை ஆறுமுகநாவலர் சைவ வினாவிடையின் பசுவியலில் உள்ள சில வினாவிடைகள் மூலம் சற்று விரிவாக அறிவோம்.

## ஆறுமுகநாவலர் சைவவினாவிடை (25 தொடக்கம் 42 வரை ) விளக்க குறிப்புகளுடன்

**வினா – ஆன்மாக்கள் எடுக்கும் சரீரம் எத்தனை வகைப்படும்?**

தூல சரீரம், சூக்கும சரீரம் என இரண்டு வகைப்படும்.

விளக்கக் குறிப்பு: தூலம் என்பது வெளிப்படையானது, கண்ணுக்குத் தெரிவது என்று பொருள். இதை தூல சரீரத்தைப் பரு உடல் என்றும் கூறுவர். சூக்குமம் என்றால் நுண்மையானது, வெளிப்படையாகத் தெரியாதது, நுண்மையானது என்று பொருள், சூக்கும சரீரத்தை நுண்ணுடல் என்றும் கூறுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வினா – தூல சரீரமாவது யாது?**

சமூக அந்தஸ்து, பிறப்பு முதலியவைகளால் அபிமானம் செய்தற்கு இடமாய்ப் பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்னும் ஐந்து பூதமும் கூடிப் பரிணமித்த உருவுடம்பு

குறிப்பு: பிருதிவி = நிலம், அப்பு = நீர், தேயு = நெருப்பு,

பூதம்= பௌதிக அலகு

**வினா – சூக்கும சரீரமாவது யாது?**

சத்த, ஸ்பரிச, ரூப, ரச ,கந்தம் என்னும் காரண தன்மாத்திரை ஐந்தும், மனம் புத்தி அகங்காரம் என்னும் அந்தக்கரணம் மூன்றுமாகிய எட்டினாலும் ஆக்கப்பட்டு, ஆன்மாக்கள் தோறும் வெவ்வேறாய், அவ்வவ் ஆன்மாக்கள் போகம் அநுபவித்தற்குக் கருவியாய், ஆயுள் முடிவில் முன்னுடம்பு விட்டு மற்றோருடம்பு எடுத்தற்கு ஏதுவாய் இருக்கும் அருவுடம்பு

**விளக்கக் குறிப்பு:**

சத்தம் கேட்கும் ஆற்றல், ஸ்பரிசம் தொட்டுணரும் ஆற்றல், ரூபம் பார்க்கும் ஆற்றல், ரசம் சுவைக்கும் ஆற்றல், கந்தம் மணம் நுகரும் ஆற்றல் என்னும் ஐந்தும் தன்னளவில் அருவமாய் எமது சூக்கும உடலில் உள்ள ஆற்றல்களாம். இவை ஐந்தும் தன்மாத்திரைகள் எனப்படுகின்றன.

இவை வெளிப்படையான தூல உடலில் உள்ள செவி, தோல், கண், நா, மூக்கு ஆகிய வெளிப்படையான அறிகருவிகள் என்னும் ஞானேந்திரியங்கள் ஐந்தையும் முறையே பொருந்தி நின்று ஐம்புலன்களாகத் தொழிற்படுகின்றன. சிலரில் கண் முதலான அறி கருவிகள் எந்தவித குறைபாடும் இல்லாமல் இருந்தாலும் ஒவ்வொரு புலன்கள் செயற்படாமல் இருப்பதற்கு காரணம் சூக்கும உடலில் அருவமாக உள்ள தன்மாத்திரைகளில் உள்ள கோளாறு ஆகும்.

சிந்திக்கின்ற மனம், நிச்சயிக்கின்ற புத்தி, நான் என்னும் தனிய உணர்வான அகங்காரம் ஆகிய மூன்றும் அந்தக்கரணம் என்னும் உள்ளத்தின் அகக் கருவிகளாம். இந்த எட்டும் சேர்ந்து உருவானதே புரியட்ட காயம் என்னும் சூக்கும உடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வினா – ஆன்மாக்கள் எப்படிப் பிறந்து இறந்து உழலும்?**

நல்வினை, தீவினை என்னும் இருவினைக்கும் ஈடாக நால்வகைத் தோற்றத்தையும், ஏழுவகைப் பிறப்பையும் எண்பத்து நான்கு நூறாயிரம் யோனி பேதத்தையும் உடையவைகளாய்ப், பிறந்திறந்து உழலும். (நூறாயிரம் - இலட்சம்)

**வினா – நால்வகைத் தோற்றங்களாவன யாவை?**

அண்டசம், சுவேதசம், உற்பிச்சம், சராயுசம் என்பவைகளாம். அண்டசம் = முட்டையிற் தோன்றுவன. சுவேதசம் = வேர்வையிற் தோன்றுவன. உற்பிச்சம் = வித்து, வேர், கிழங்கு முதலியவைகளை மேற் பிளந்து தோன்றுவன. சராயுசம் = கருப்பையிற் தோன்றுவன.

விளக்கக் குறிப்பு:

அண்டம் என்றால் முட்டை.

சுவேதசம் என்றால் சுயமாக பதிய அல்லது பிளவு முறையில் தோன்றுவது. பற்றீரியா, மதுவம் போன்ற நுண்ணுயிர்கள், கிருமிகள், தண்டில் இருந்து முளைக்கும் தாவரங்கள் இதற்கு உதாரணங்கள்.

**வினா – எழுவகைப் பிறப்புக்களாவன யாவை?**

தேவர், மனிதர், விலங்கு, பறவை, ஊர்வன, நீர் வாழ்வன, தாவரம் என்பவைகளாகும். இவ்வெழுவகையினுள்ளும், முன் நின்ற ஆறும் இயங்கியற் பொருள்கள் இறுதியில் நின்ற தாவரங்கள் நிலையியற் பொருள்கள். இயங்கியற் பொருளின் பெயர் சங்கமம், சரம். நிலையியற் பொருளின் பெயர் தாவரம், அசரம்.

விளக்கக் குறிப்பு: இயங்கியற் பொருள் என்றால் அசையும் பொருள்கள், உயிரினங்கள். நிலையியற் பொருள்கள் என்றால் அசையாத, ஓரிடத்திலேயே நிலைத்து இருக்கின்ற பொருள்கள், உயிரினங்கள்.

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்-திருவாசகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வினா – கருப்பையிலே பிறப்பன யாவை?**

தேவர்களும், மனிதர்களும், நாற்கால் விலங்குகளுமாம்.

**வினா – முட்டையிலே பிறப்பன யாவை?**

பறவைகளும், ஊர்வனவும், நீர்வாழ்வனவுமாம்.

**வினா – வேர்வையிலே பிறப்பன யாவை?**

(சுஜமாக அல்லது பதிய அல்லது பிளவு முறையில் தோன்றுவன) கிருமி, கீடம், பேன் முதலிய சில ஊர்வனவும், விட்டில் முதலிய சில பறவைகளுமாம். (கீடம் - புழு)

**வினா – வித்தினும் வேர், கொம்பு, கொடி, கிழங்குகளிலும் பிறப்பன யாவை?**

தாவரங்கள்.

**வினா – எண்பத்து நான்கு நூறாயிர யோனி பேதங்கள் எவை?**

| | |
|---|---|
| 1. தேவர் | 11,00,000 யோனி பேதம் |
| 2. மனிதர் | 9,00,000 யோனி பேதம் |
| 3. நாற்கால் விலங்கு | 10,00,000 யோனி பேதம் |
| 4. பறவை | 10,00,000 யோனி பேதம் |
| 5. ஊர்வன | 15,00,000 யோனி பேதம் |
| 6. நீர்வாழ்வன | 10,00,000 யோனி பேதம் |
| 7. தாவரம் | 19,00,000 யோனி பேதம் |
| ஆக மொத்தம் | 84,00,000 யோனி பேதம் |

**வினா –ஆன்மாக்கள் வினைகளைச் செய்தற்கும் வினைப் பயன்களை அநுபவித்தற்கும் இடம் எவை?**

இருவினைகளைச் செய்தற்கும் இருவினைப் பயன்களை அநுபவித்தற்கும் இடம் பூமி. நல்வினைப் பயனை அநுபவித்தற்கு இடம் சுவர்க்க முதலிய மேலுலங்கள். தீவினைப் பயனை அநுபவித்தற்கு இடம் இருபத்தெட்டுக் கோடி நரகங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விளக்கக் குறிப்பு: 1**

நாம் வாழும் பூமி சூரிய குடும்பத்தில் உள்ள கோள்களில் ஒன்று. இதை பாரதவர்ஷம் என்று எமது நூல்கள் விபரிக்கின்றன. இது ஆகாயகங்கை என்னும் பால்வீதி அண்டத்தொகுதியில் உள்ளது. இந்த பால்வீதி அண்டத்தொகுதியில் மாத்திரம் இதுபோல 20 கோடி சூரிய குடும்பங்களுக்கு மேல் உள்ளன. இந்த பால்வீதி அண்டத்தொகுதி முழுவதையும் பூலோகம் என்று எமது சமயம் குறிக்கின்றது. இதற்கு அடுத்த அண்டத்தொகுதி புவர் லோகம் என்று எமது சமயம் கூற விஞ்ஞானமோ இதை அண்ட்றோமீடா அண்டத்தொகுதி என்று சொல்லுகின்றது. இதற்கு அடுத்த அண்டத்தொகுதியை எமது சமயம் சுவர் லோகம் என்னும் சுவர்க்கம் என்று கூற விஞ்ஞானமோ ட்ரைஆங்குலம் அண்டத்தொகுதி என்று கூறுகின்றது.

85 இலட்சம் (8,500,000) சுவர்க்க உலகங்கள் இருப்பதாக எமது நூல்கள் கூறுகின்றன. இவ்வாறு மேல் நோக்கி பூலோகம், புவர் லோகம், சுவர் லோகம், மஹலோகம், ஜன லோகம், தப லோகம், சத்திய லோகம் என்னும் எழு மேல் உலகங்களும், அதல, விதல, சுதல, தலாதல, ரசாதல, மகாதல, பாதாளம் என்னும் ஏழு கீழ் உலகங்களும் எமது அயல் அண்டத்தொகுதிகள் என்று சைவம் விபரிக்கின்றது. இவற்றுக்கும் அப்பால் கூஷ்மாண்ட புவனம், காலாக்னி உருத்திர புவனம், விஷ்ணுலோகம், சிவலோகம் உள்ளிட்ட அண்டத்தொகுதிகள் பிரம்மாண்டம் என்று அழைக்கப்படுகின்றன. கூஷ்மாண்ட புவனத்துக்கும், காலாக்னி உருத்திர புவனத்துக்கும் இடையில் இருபத்தெட்டு கோடி நரகலோகங்கள் இருப்பதாக எமது சமயம் கூறுகின்றது. இது போல பல நூறு அண்டத்தொகுதிகளின் விபரங்களை எமது புராணங்களும், ஆகமங்களும் விபரிக்கின்றன.

**விளக்கக் குறிப்பு: 2**

மறைகள் ஈசன்சொல், அச்சொல் வழிவாரா உயிரை வைக்கும்
சிறைகள் மாநிரயம், இட்டபணி செய்வோர் செல்வத்தோடும்
உறையும்மா பதிகள் உம்பர்உலகங்கள், யோனிக்குஎல்லாம்
இறைவன் ஆணையினால் இன்பதுன்பங்கள் இயைவதாகும்-

மெய்கண்ட சாத்திரம், சிவஞான சித்தியார்120

குறிப்பு: நிரயம் = நரகம், உம்பர் உலகங்கள் = தேவலோகங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விளக்கக் குறிப்பு: 3**

காலாக்கினி உருத்திர புவனத்துக்கும், கூஷ்மாண்ட புவனத்துக்கும் இடையிலுள்ள இருபத்தெட்டு வகை நரகங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு கோடி உலகங்கள்.

1. **தாமிச்ரம்**– பிறர் பொருளை, மனைவியைக் கவர்ந்தவர்கள் தள்ளப்பட்டு மூர்ச்சித்திருக்கும் நரகம்.
2. **அந்ததாமிச்சரம்**– தமது மனைவி அல்லது கணவனை வஞ்சித்த வஞ்சகர் கண்ணிழந்து வருந்தும் நரகம்.
3. **ரௌரவம்**– பிறர் பொருளை வஞ்சித்தவர்கள் ருரு என்னும் மிருகங்களாலும், அக்கினிச் சுவாலைகளாலும் பற்பல துன்பங்களை அனுபவித்து வருந்தும் இடம்.
4. **மகாரௌரவம்**- ருரு என்னும் மிருகங்கள் இடைவிடாது பாவிகளை வருத்தும் இடம்.
5. **கும்பிபாகம்**– பிறவுயிர்களைக் கொன்று தின்றோரை தீயில் பாகப்பட்ட பொருளைப்போல வாட்டும் இடம்.
6. **காலசூத்திரம்**– தாய் தந்தையரை வருத்தினவர்கள் சூரியனைப் போலக் கொளுத்தப்படும் இடம்.
7. **ஆசீபத்ரவனம்**– தெய்வத்தை நம்பாது விட்டவன் இவ்விடத்தில் வாள் போன்ற முட்களையும் இலைகளையும் உடைய மரங்களால் துன்புறுவர்.
8. **பன்றிமுகம்**– அதர்மமாக தண்டனை கொடுத்தவர்களும் தீமை செய்தவர்களும் அடையும் பன்றி போன்ற முகத்தை உடைய நரகம்.
9. **அந்தகூபம்**– கொலை செய்வோன் துரோகிகள் அடையும் நரகம். இதில் பல விஷப்பிராணிகளால் துன்புற்று கண்ணில்லாது வருந்துவர்.
10. **கிருமிபோஜனம்**– தெய்வ பூசை இல்லாதார் தாமும் புழுக்களாக இருந்து தம்மை விட பெரிய புழுக்களால் சிறிது சிறிதாக உண்ணப்படும் நரகம்.
11. **அக்னிகுண்டம்**– வன்முறையால் பிறர் பொருளைக்கவர்ந்தவன் அடையும் தீ நிறைந்த இரும்புச் சாலை நரகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**12. வச்ரகண்டம்**– புணரக்கூடாதவரைப் புணர்ந்த ஆண்களும் பெண்களும் கொதிக்கின்ற இரும்புத் தம்பத்தை அணையும் நரகம்.

**13. சான்மலி**– உயர்வு தாழ்வு எண்ணாது புணர்ந்து திரிந்த பாவிகள் முட்களால் குத்துண்டு வருந்தும் நரகம்.

**14. வைதரணி**– சமய மற்றும் தர்ம நூல்களை கேடு செய்தவர்கள் தள்ளப்பட்டு வருந்தும் இரத்தம் சீழ் நிறைந்த துர் நாற்றமுள்ள நீர்நிலை.

**15. பூயோதம்**– ஆசாரங்களை விட்டவன் அடையும் மலம் மூத்திரம் நிறைந்த நரகம்.

**16. பிராணரோதம்**– பிராணிகளை வதைப்பவனும் வதைப்பிப்பவனும் யமபடர்களால் பிராண அவஸ்தைப்படும் நரகம்.

**17. வைசசி**– டம்பத்தின் பொருட்டு சமய காரியங்கள் செய்பவனை யமபடர் சாட்டையால் அடித்து வருத்தும் நரகம்.

**18.லாலாபக்ஷம்**– தன் மனைவியைத் தீய காரியத்துக்கு உட்படச்செய்வோர் அடையும் நரகம்

**19. சாரமேயாதனம்**– வீட்டுக்கு நெருப்பு வைப்பவர் மற்றவர்களுக்கு விஷம் வைத்தவர் பிராணி வதை செய்பவர் இராஜங்கத்தை பாழ் படுத்துவோர் 800 வகையான நாய்களால் துன்புறும் நரகம்.

**20. அவீசி**– பொய்ச்சாட்சி சொல்வோர் பாவ புத்தி உடையோர் நூறு யோசனை உயரமான மலை உச்சியில் இருந்து தள்ளி உயிர் போகாது வருத்தும் நரகம்.

**21. பரியாதனம்**– கள் முதலிய மதுபானம் குடிப்போர் உருக்கிய இரும்பைக்குடித்து வருந்தும் நரகம்.

**22. ஷாரகர்த்தமம்**– தன்னைத் தானே புகழ்பவன் அடையும் நரகம்.

**23. ரட்சோகணம்**– நர பலி செய்தவர்களும் நர மாமிசம் புசித்தவர்களும் மாமிச பட்சணிகள் கொன்று தின்னும் நரகம்.

**24. சூலப்ரோதம்**– அபகாரி தற்கொலை செய்தவர்கள் முதலானோர் சூலத்திற் குத்திக்கோர்க்கப்பட்டு கழுகு முதலிய பறவைகளால் கொத்துண்டு வருந்தும் நரகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**25.தந்தசூகம்**– தீய பாவ காரியங்களைச் செய்தோர் விஷப்பிராணிகளாலும் பல முகங்களை உடைய பிராணிகளாலும் வருந்தும் நரகம்.

**26.வடாரோகம்**– மலைகளிலும் விருட்சங்களிலும் வசிக்கும் மிருகங்களையும் பறவைகளையும் வருத்துவோர் மலையில் இருந்தும் விருட்சங்களில் இருந்தும் தள்ளி விடப்பட்டு வருந்தும் நரகம்.

**27. பிரியாவர்த்தனம்**– அதிதிகளைப் பூசிக்காதவன் எய்தும் நரகம்.

**28. சூசீமுகம்**– தமது செல்வத்தால் இறுமாந்திருந்தவர்கள் தர்மம் செய்யாமல் பொருளைக்காவல்காத்து வைத்திருந்தவர்கள் ஊசியின் முகம் போல முகம் கொண்டு வருந்தும் நரகம்.

இதைவிட சூகரம், உரோதம், தாலம், தப்தகும்பம், இலவணம், உதிராம்பம், இலோகிதம், கிருமிசம், கிருட்டிணம், தாருணம், சந்த்மிசனி, பூயவகம், கருட்ணசூத்ரம், தமசு, சுவபோசனம் போன்ற பல எண்ணற்ற நரகங்கள் உள்ளன.

**வினா – பூமியிலே பிறந்த ஆன்மாக்கள் சரீரத்தை விட்டவுடனே யாது செய்யும்?**

நல்வினை செய்த ஆன்மாக்கள், தூல சரீரத்தை விட்டவுடனே, சூக்கும சரீரத்தோடு பூதசார சரீரமாகிய தேவ சரீரத்தை எடுத்துக் கொண்டு, சுவர்க்கத்திலே போய் அந்நல்வினைப் பயனாகிய இன்பத்தை அநுபவிக்கும். தீவினை செய்த ஆன்மாக்கள், தூல சரீரத்தை விட்டவுடனேயே, சூக்கும சரீரத்தோடு பூத சரீரமாகிய யாதனா சரீரத்தை எடுத்துக் கொண்டு, நரகத்திலே போய் அத்தீவினைப் பயனாகிய துன்பத்தை அநுபவிக்கும். இப்படியன்றி, ஒரு தூல சரீரத்தை விட்டவுடனே பூமியிலே தானே ஒரு யோனி வாய்ப்பட்டு, மற்றொரு தூல சரீரத்தை எடுப்பதும் உண்டு.

விளக்கக் குறிப்பு: 1. இவ்வுலகில் அளவுக்கதிகமான போகமும் உடலைப் பாதித்து நலிவடையச் செய்வது கண்கூடு. எண்ணற்ற சுவர்க்க போகங்களை இடையறாது அனுபவிப்பதற்கு ஏதுவான திடமான உடல் பூதசார சரீரம் (Heaven Proof Body).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விளக்கக் குறிப்பு: 2** இவ்வுலகில் அளவுக்கதிமான துன்பங்களும் உடலை வாட்டி அழிப்பது கண்கூடு. இவ்வாறு உடல் அழிந்துபோகாமல் தொடர்ந்து நரகலோக துன்பங்களை அனுபவிப்பதற்குரிய திடமான உடல் யாதனா சரீரம் (Hell Proof Body).

**விளக்கக் குறிப்பு: 3**

பூதனா சரீரம் போனால் புரியட்ட ரூபந் தானே
யாதனா சரீர மாகி இன்பதுன் பங்கள் எல்லாம்
நாதனார்ஆணை உய்க்க நரகொடு சுவர்க்கம் துய்த்துத்
தீதிலா அணுவாய் யோனி சேர்ந்திடும் சீவன் எல்லாம்

-மெய்கண்ட சாத்திரம், சிவஞானசித்தியார் 126

**விளக்கக் குறிப்பு:4.**

இரப்பவர்க் கீய வைத்தார் ஈபவர்க் கருளும் வைத்தார்
கரப்பவர் தங்கட்கெல்லாம் கடுநரகங்கள் வைத்தார்
பரப்புநீர் கங்கை தன்னைப் படர்சடைப் பாகம் வைத்தார்
அரக்கனுக் கருளும் வைத்தார் ஐயன்ஐ யாற னாரே

-4ம் திருமுறை, திருநாவுக்கரசர் தேவாரம்

**வினா – சுவர்க்கத்திலே இன்பம் அநுபவித்த ஆன்மாக்கள் பின் யாது செய்யும்?**

தொலையாது எஞ்சி நின்ற கன்ம சேடத்தினாலே திரும்பப் பூமியில் வந்து மனிதர்களாய்ப் பிறக்கும்.

விளக்கக் குறிப்பு: 1. மானிடப் பிறவி எடுக்கும் ஆன்மாவானது ஐந்து இடங்களில் ஆகுதி செய்யப்பட்டு வந்து பிறப்பெடுக்கின்றது என வேத உபநிடதங்கள் கூறுகின்றன. இதை பஞ்சாக்கினி வித்தை என்பர். இந்த ஐந்து இடங்களாவன

1. துறக்கம் என்னும் வானுலகம்
2. முகில், மழை, நீர்
3. நிலம், தாவரங்கள், உணவு - வானுலகில் இருந்து மழையினூடாக பூமியை அடைந்து தாவரங்களூடாக நாம் உண்ணும் உணவுக்கு வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. தந்தை - உண்ணும் உணவினூடாக தந்தையை வந்தடைந்த ஆன்மா அவரின் உதிரத்தினூடாகச் சுக்கிலத்தை அடைகின்றது. தந்தையில் உயிர் தங்கும்காலம் இரண்டு மாதங்கள். விஞ்ஞானத்தின் படியும் ஆணில் ஒரு விந்துக் கலம் உருவாவதற்கான காலம் (spermatogenesis) இரண்டு மாதங்கள். ஆணுக்கு தன்னில் கரு வந்து தங்கிப் போவது தெரிவதில்லை.

5. தாய்- புணர்ச்சியின்போது சுக்கிலத்தினூடாக உயிரானது தந்தையில் இருந்து தாய்க்கு வந்தடைந்து பத்து மாதங்கள் தங்கிப் பிறக்கின்றது.

- பத்தாம் திருமுறை -திருமந்திரம் 113
- சாமவேதம், சாந்தோக்கிய உபநிடதம் 5:3:3-5∴5:10:1-8
- சுக்கில யசுர் வேதம், பிருஹதாரண்ய உபநிடதம் 6

**வினா – நரகத்திலே துன்பம் அநுபவித்த ஆன்மாக்கள் பின்பு யாது செய்யும்?**

தொலையாது எஞ்சி நின்ற கன்ம சேடத்தினாலே திரும்பப் பூமியில் வந்து முன்பு தாவரங்களாயும் பின்பு நீர்வாழ்வனவாயும், பின்பு ஊர்வனவாயும், பின்பு பறவைகளாயும், பின்பு விலங்குகளாயும் பிறந்து, பின்பு முன் செய்த நல்வினை வந்து பொருந்த மனிதர்களாய்ப் பிறக்கும்.

**வினா – எழுவகைப் பிறப்பினுள்ளும் எந்தப் பிறப்பு அருமையுடையது?**

பசுபதியாகிய சிவபெருமானை அறிந்து வழிபட்டு முத்தியின்பம் பெற்றுய்தற்குக் கருவியாதலால் மனிதப் பிறப்பே மிக அருமையுடையது.

விளக்கக் குறிப்பு: 1. எல்லாப் பிறவிகளின் நோக்கமும் உயிரின் வினைப் பயன்களுக்கூடாக அனுபவத்தைத் தந்து, எமது உயிரின் அறிவு முதிர்ச்சி அடைந்து (உயிருக்கு முதிர்ச்சி இல்லை, உயிரின் அறிவுக்கே உண்டு) பக்குவம் பெற்றதும் இறைவனை அடைவதேயாம். இவற்றுள் மனிதப் பிறவி கிடைத்ததன் முழு நோக்கமே இறைவனை அடைதலே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானுடப் பிறவி தானும் வகுத்தது மனவாக் காயம் ஆனிடத் தைந்து மாடும் அரன்பணிக் காக வன்றோ, வானிடத் தவரும் மண்மேல் வந்தரன் றனை அர்ச்சிப்பர். ஊனெடுத் துழலும் ஊமர் ஒன்றையும் உணரார். - மெய்கண்ட சாத்திரம், சிவஞான சித்தியார் 182

அரிது அரிது மானிடராதல் அரிது
மானிடராயினும் கூன் குருடு செவிடு
பேடு நீங்கிப் பிறத்தல் அரிது
பேடு நீங்கிப் பிறந்த காலையும்
ஞானமுங் கல்வியும் நயத்தல் அரிது
ஞானமுங் கல்வியும் நயந்த காலையும்
தானமுந் தவமும் தான் செயல் அரிது
தானமுந் தவமும் தான் செய்வராயின்
வானவர் நாடு வழி துறந்திடுமே
- - ஔவையார் பாடல்

விளக்கக் குறிப்பு: 2. மானுடப்பிறவி தவிர்ந்த ஏனைய பிறவிகளின் நோக்கம் என்ன? மானுடப் பிறவி தவிர்ந்த ஏனைய உயிர்கள் முத்தி அடைய முடியுமா?

ஏனைய உயிரினங்களுக்கு பிறவியின் நோக்கம் அனுபவ முதிர்ச்சியும், வினையை கழித்தலுமே. ஆயினும் அவற்றுள் சில மனிதப் பிறவி கிடைக்கும்வரை காத்திராமல் அந்தப் பிறவியிலேயே இறையை வழிபட்டு முத்தி அடைதலும் கூடும்.

சிலந்தியும் ஆனைக் காவில் திருநிழற் பந்தர் செய்து
உலந்தவன் இறந்த போதே கோச்செங்க ணானும் ஆகக்
கலந்தநீர்க் காவிரி சூழ் சோணாட்டுச் சோழர் தங்கள்
குலந்தனிற் பிறப்பித் திட்டார் குறுக்கைவீ ரட்டனாரே-
4ம் திருமுறை, திருநாவுக்கரசர் தேவாரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னம் நின்ற முடக்கான் முயற்கருள் செய்துநீள்
புன்னை நின்று கமழ் பாதிரிப் புலியூருளான்.

-2ம் திருமுறை, திருஞானசம்பந்தர் தேவாரம்

திருக்கழுக்குன்றம்- பிரசண்டன், சம்பாதி, சடாயு, கம்பு, குந்தன், மாகுந்தன் முதலிய கழுகுகள் பூசித்து முத்தி அடைந்தன.

திருமகாகறல்- உடும்பு சிவலிங்கத்தைத் தழுவிக் கொண்டிருக்கின்றது. உடும்பு பூசித்ததால் இறைவரின் பெயர் மாகறலீஸ்வரர்.

குரங்கணில்முட்டம் - குரங்கு, அணில், காகம் வழிபட்டு முத்தி அடைந்தன. வடகுரங்காடுதுறை, தென் குரங்காடுதுறை, குரங்குத்தளி- குரங்குகள் வழிபட்ட தலங்கள். இத் தலங்களில் இறைவர் பெயர் வாலீஸ்வரர், சுக்ரீஸ்வரர், ஹனுமனீஸ்வரர்.

கரடி, ஓணான் போன்ற பல விலங்குகளும், ஏன் மரங்களுங்கூட இறைவனை வழிபட்டு முத்தி அடைந்த வரலாறுகள் பல தல புராணங்களில் உள்ளன.

**வினா – மனிதப் பிறப்பை எடுத்த ஆன்மாக்களுக்கு எப்பொழுது அம்முத்தி சித்திக்கும்?**

அவர்கள், தங்கள் தங்கள் பக்குவத்துக்கு ஏற்பப் படிமுறையினாலே, பிறவிதோறும் பௌத்தம் முதலிய புறச்சமயங்களில் ஏறி, ஏறி, அவ்வச் சமயத்துக்கு உரிய நூல்களில் விதிக்கப்பட்ட புண்ணியங்களைச் செய்வார்கள் பின்பு அப்புண்ணிய மேலீட்டினாலே வைதிக நெறியை அடைந்து, வேதத்தில் விதிக்கப்பட்ட புண்ணியங்களைச் செய்வார்கள் பின்பு அப்புண்ணிய மேலீட்டினாலே சைவ சமயத்தை அடைவர்கள். சைவ சமயத்தை அடைந்து, சிவாகமத்தில் விதிக்கப்பட்ட சரியை கிரியை யோகங்களை விதிப்படி மெய்யன்போடு அநுட்டித்தவருக்குச் சிவபெருமான் ஞானாசாரியரை அதிட்டித்து வந்து சிவஞானம் வாயிலாக உண்மை முத்தியைக் கொடுத்தருளுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வினா – புறச்சமயங்களின் வழியே ஒழுகினவர்களுக்கு யாவர் பலன் கொடுப்பார்?**

புறச்சமயிகளுக்கு, அவ்வவரால் உத்தேசித்து வழிபடப் படுந் தெய்வத்தைச் சிவபெருமானே தமது சத்தியினாலே அதிட்டித்து நின்று, அவ்வவ் வழிபாடு கண்டு, பலங் கொடுப்பார்.

விளக்கக் குறிப்பு:

யாதொரு தெய்வங் கொண்டீர் அத் தெய்வமாகி அங்கே
மாதொரு பாகனார்தாம் வருவர், மற்று அத் தெய்வங்கள்
வேதனைப் படும் இறக்கும் பிறக்கும் மேல்வினையும் செய்யும்
ஆதலால் இவையிலா தான் அறிந்தருள் செய்வ னன்றே. -

- மெய்கண்ட சாத்திரம், சிவஞானசித்தியார் 115

திருச்சிற்றம்பலம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் கதிரவேலு முத்தையா அவர்களின் வாழ்க்கை வரலாறு

ஈழ மணித் திருநாட்டில் இலங்கையில் சகல வளங்களும் நிறைந்த வட மாகாணத்தில் வலிகாமம் மேற்குப்பகுதியில் அமைந்துள்ள பழம்பெரும் கிராமமான சோழியபுரம் என அழைக்கப்பட்ட சுழிபுரம் எனும் பகுதியில் வசித்து வந்த கதிரவேலு மாணிக்கம் தம்பதிகளுக்கு 1941ம் ஆண்டு அக்டோபர் மாதம் 12ம் திகதி திருவாதிரை நட்சத்திரம் கூடிய நன்நாளில் 03வது மகனாக வந்துதித்தார்.

இவர் தனது பள்ளிப் பராய வயதை அடைந்ததும் சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாசாலையில் ஆரம்பம் முதல் சிரேஸ்ட தராதரப் பத்திர வகுப்பினை பயின்று வந்தார்.

இவரது பள்ளிக்காலம் முடிந்த பின்பு கொழும்பு சென்று தனது உறவினர்களின் வியாபார ஸ்தலங்களிலே பணி புரிந்து வந்தார். சிறிது காலத்தில் தனியாக தொழில் செய்ய ஆர்வம் கொண்டு கிளிநொச்சி நகரில் தனது சொந்த வியாபாரத்தை இவரது மூத்த சகோதரரான இளையதம்பியின் உறுதுணையோடு நடத்தி வந்தார். இவரது அயராத உழைப்பாலும், ஊக்க மிகுதியினாலும், கல்வி அறிவினாலும் மிகக் குறுகிய காலத்திலேயே செல்வந்தனாக மிளிர்ந்தார். அதன் பின்பு தனது சொந்த ஊரான சுழிபுரத்திலும், யாழ் நகரிலும் தனது வியாபாரத்தினை 1984 ஆம் ஆண்டு வரை மேற்கொண்டு வந்தார். மேலும் வியாபாரத்தில் மட்டுமன்றி விவசாயத்திலும் பேரார்வம் கொண்டு விவசாயத்தினை மேற்கொண்டு வந்தார்.

அன்னார் 1965ஆம் வருடம் இவரது 24 வயதில் இவ்வூரைச் சேர்ந்தவர்களும் உறவினர்களுமாகிய வைரமுத்து மகேஸ்வரி தம்பதிகளின் இரண்டாவது புத்திரியான யோகசுந்தரத்தை மணமுடித்து " அன்பும் அறனும் உடைத்தாயின் இல் வாழ்க்கை பண்பும் பயனும் அது " என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கு இணங்க இல்லறத்தை நல்லறமாக நடாத்தி சகல சம்பத்துக்களுடனும் வாழ்ந்து வரும் காலத்தில் இறையருளால் 06 புத்திரிகளும் 02 புத்திரர்களும் பிறந்தனர். அவர்களைச் செம்மையாக வளர்த்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையே உரிய காலங்களில் திருமணம் செய்து அவரது கடமையை இனிதே நிறைவேற்றினார். இவர் தனது முதுமைக்காலத்தில் தனது பேரப்பிள்ளைகளுடனும், பூட்டப்பிள்ளைகளுடனும் மிக்க மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வந்த காலத்தில் தீடீர் சுகயீனமடைந்து எம்மையெல்லாம் நீங்காத் துயரில் ஆழ்த்தி இவ்வுலகைவிட்டு ஒக்ரோபர் மாதம் 05 ஆம் திகதி 2020 அன்று திங்கட் கிழமை பந்த பாசத்தினை எல்லாம் நீக்கி முருகன் கார்த்திகை நன்னாளும், சங்கடகர சதுர்த்தியும், சோமவாரமும் கூடிய நித்திய பிரதோஷ காலத்தில் இறைவனடி சேர்ந்தார். அமரர் அவர்கள்

"தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றின் தோன்றாமை நன்று" என்ற வள்ளுவன் வாக்கிற்கிணங்க வர்த்தகத்துறையில் பெரும் செல்வத்தையீட்டி ஆலயங்களிலும், கிராமங்களிலும் ஆற்றிய நிதிப்பங்களிப்புக்கள் நினைவு கூரத்தக்கவை.

1. குகன்குலத்தின் பொதுச் சொத்ததான ஏகக்குறைய 700 பரப்புக் கொண்ட துரைதோட்டம், சல்லிக்காடு மற்றும் பறாளாய் விநாயகர், முருகன் ஆலயத் திருவிழா உபயங்கள் என்பன தனி மனித உடமையாக மாறிய அநீதிக்கு எதிராக 16 வருடங்கள் நடந்த வழக்கில் ஜவர் கொண்ட வாதிகளில் ஒருவராக நின்று அக்காலத்தில் ஏற்பட்ட செலவில் பெரும் பகுதி நிதியை வழங்கி சமூக உரிமையை மீட்டெடுக்க உதவியமை.

02. சிறுவர் பாடசாலை அமைத்து அதற்கு வேண்டிய தளபாடங்கள் மற்றும் ஆசிரியருக்கான வேதனம் வழங்கியமை.

03. கலைமகள் சனசமூக நிலைய வளர்ச்சிக்கு ஆரம்பகால பத்திரிக்கைக்கான நிதியுதவி வழங்கியமை.

04. ஜயனார் ஆலயத்தின் திருவெம்பாவை, மஹா சிவராத்திரி விழா என்பவற்றை நடாத்தி நிதியுதவி வழங்கி ஊக்குவித்தமை.

05. "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்ற ஔவை கிழவியின் வாக்குக்கிணங்க எங்கள் கிராமத்தின் அரிஹர புத்திர ஜயனார் ஆலயத்தை முழுஅளவில் அமைக்கத் திட்டமிட்டு பெரும் நிதியுதவி வழங்கி ஆலய பூர்த்தி மற்றும் திருவிழா, கும்பாபிஷேகம் முதலிய திருப்பணிகளில் பெரும் பங்காற்றியமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06. மக்கள் இடம்பெயர்ந்து அகதியாக சென்ற வேளையிலும் , கொவிட் 19 தொற்றுநோய் ஊரடங்கு அமுலாக்க வேளையிலும் மக்களின் தேவையறிந்து தானே முன்னின்று உதவி புரிந்தமை.

07. ஆன்மீகத்துறையில் கிராமத்திலும், அயற் கிராமங்களிலுள்ள ஆலயங்களான பறாளாய் முருகனின் இலட்சார்ச்சனை உபயமும், விநாயகரின் ஆலயத்தின் முதல் சுக்கிரவார உபயமும், பொன்னாலை வரதராஜப் பெருமாள் வருடார்ந்த மஹோற்சவ இறுதி நாளன்று சங்காபிஷேகமும், கம்பனை அம்மன் ஆலயத்தின் மாதப் பூஜையும், வழக்கம்பரை அம்மன் ஆலயத்தின் மாதப் பூஜையும், அரிஹரபுத்திர ஜயனார் தேர்த்திருவிழா உபயமும் செய்து வந்தார்.

08. சைவமும், தமிழும் தழைக்கவும் அடியவர்களின் உள்ளத்தில் இறையுணர்வு மேலோங்கவும் அரிஹரபுத்திர ஜயனார் ஆலயத்தில் பன்னிரு திருமுறை ஓதலை ஆரம்பித்து, பல அடியவர்களை ஈடுபடுத்தி பாட வைத்தமை, திருவாசகம் முற்றோதலை சிறப்பாக ஆற்றியமை.


09. விவசாயத்தில் பேரார்வம் கொண்ட இவர் 100 பரப்புக்கு மேற்பட்ட வயல் நிலங்களை சுழிபுரத்திலும் 05 ஏக்கர் வயல் நிலத்தை பரந்தனிலும் விவசாயத்தை மேற்கொண்டு பலருக்கு வேலை வாய்ப்பையும், அறுவடை காலங்களில் ஏழை எளியவர்களுக்கு நெல்லாகக் கொடுத்தும் உதவியமை.

10. சபரிமலை சாஸ்தாவுக்கு சபரீசனை தரிசிக்க தொடர்ந்து 03 வருடங்கள் யாத்திரை செய்து தனது ஆன்மீகக் கடமையை சிறப்பாக நிறைவேற்றினார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனைவி புலம்பல்

பாரினில் வரமாக அமைந்த துணையே
பாசமிகு பெருமையான பதியே...!
தல விருட்சமாக தாங்கிய நம் குடும்பத்தலைவனே - இன்று
தவிக்க விட்டுச் சென்றீர்களே...!

எண்ணத்தில் என்றும் எமது பதியாளா
கண்ணதில் வைத்துக் காத்த நெறியாளா - நாம்
மண்ணில் புலம்பும் கதி கேளா
விண்ணில் சேர்ந்தீரோ தனி ஆளா ...!

எடுத்த தொழிலில் வெற்றி கண்டீர்கள்
எல்லாப் பிள்ளைகளையும் ஆளாக்கி பெருமை கொண்டீர்கள்
எக் காரணம் கொண்டும் கலங்காதே என்றீர்கள் - இன்று
எம்மை கலங்க விட்டுச் சென்றீர்கள் .....!

ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முத்தான முதல்வனுக்கு...

முத்தான முதல்வனுக்கு முதல் வணக்கம் அப்பா
முருகன் ஐயா முத்தையா !
ஆறு கார்த்திகை பெண்களை ஈன்றெடுத்தாய் ஐயா
அதில் இரண்டாவது பெண்ணாக என்னை ஈன்றெடுத்ததற்கு
நான் செய்த பாக்கியம் அப்பா செல்லம் என்றும்
செல்லக் கண்டு என்று கூப்பிட்டதும் ஓடோடி வந்து
நிற்பனே அப்பா அந்தக் குரலை
இனி இழந்து விட்டேனே அப்பா
இராமநாதன் கல்லூரியிலிருந்து இரண்டு சக்கர
வண்டியில் என்னையும் பெரியக்காவையும்
ஏற்றி இறக்கியமை எத்தனை காலங்கள்
சென்றாலும் எங்களால் மறக்க முடியாது அப்பா
மருமகன்மாரை கூட ரத்தினங்களாக
தேர்ந்து எடுத்தீர்களே அப்பா
புகழோடு சீர் பெற்று வாழ்ந்த உங்களை
உயிர் நீத்த பின்பும் தெய்வமாக
எம் மனதில் சுமக்கின்றோம் அப்பா
ஒரு கணம் உச்சத்தில் கோபம் அப்பா
மறுகணம் பாசத்தில் அன்பு தொல்லை அப்பா
என்றென்றும் எங்கள் மனதில் நீங்காத தெய்வம் அப்பா

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

மகள்
கலைச் செல்வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருமகன் புலம்பல்

திருவடிநிலை திருநிறைச்செல்வன்
திரு.க. முத்தையா மாமா
எனக்கு மாமா எனும் பதவியை
32 ஆண்டு காலம் வாழ்ந்து விட்டு
எங்கோடி மறைந்தாய் ஐயா !
என்னசெய்வது என்று அறியாமல் தவிக்கின்றோம்.

தலைவா எங்கள் வரவை எதிர்பார்த்துக்
கார்த்திருப்பீர்களே மாமா
நாம் வரும் ஒவ்வொரு வேளையிலும்
நீங்கள் விரதம் இருந்தாலும்
உங்கள் உபசரிப்பு எங்களை விட்டு
அகலாது மாமா

உங்களை எண்ணி எண்ணி ஏங்குகின்றோம் மாமா
வேலணையும் சுழிபுரமும் இணையும்
ஒரு புதிராய் வந்தாய் எம் தலைவா
இது போதும் நான் எழுத என்னால் முடியவில்லை

ஓம் சாந்தி ! சாந்தி! சாந்தி!

உங்கள் மருமகன்
வேலணை விஜயன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரன் புலம்பல்..

Grandpa was an amazing person. I know he is looking down on us with a smile. He always made sure his children and grand children got everything they needed. He was an incredible man.

Mayooran Vijayarathnam

என் அன்பான தாத்தா ஒரு நல்ல மனிதர். அவர் எங்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறார் என்பது எனக்குத் தெரியும். அவர் எப்போதும் எல்லோருக்கும் உதவி செய்வார். நான் முதன் முதலாக தாத்தாவுடன் வாழை இலையில் சோறு சாப்பிட்டேன். என் அன்பான தாத்தா எப்போதும் என் இதயத்தில் இருப்பார்.

மயூரன் விஜயரத்தினம்(பேரன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுவர்க்கத்திலிருக்கும் எனது அப்பாவுக்கு ஓர் கடிதம்....

மூஷிகவாஹன மோதக ஹஸ்த
சாமரகர்ண விளம்பித ஸூத்ர
வாமன ரூப மஹேஸ்வர புத்ர
விக்ன விநாயக பாத நமஸ்தே

அப்பா.. அப்பா அப்பா

அப்பா எனும் வார்த்தை என் வாழ்க்கையில் இனி மேல் இருக்கப் போவதில்லை. என் பாசமிகு அப்பாவின் பிரிவுச் செய்தி கேட்டு எவ்வளவு கலங்கினேன், கதறினேன் என்று வார்த்தையால் விபரிக்க முடியாது. உங்கள் சுகயீனச் செய்தி கேட்டு ஓடோடி வந்திருப்பேன், ஆனால் இந்த பாழாய்ப் போன கொரோனாவால் பிளேன் ஒன்றும் ஓடவில்லை. நான் என் செய்வேன்.

குழந்தையாய் இருந்த போது உங்கள் கையைப் பிடித்து நடந்தது, நான் விழப் போகும் போது நீங்கள் என்னைத் தாங்கிப் பிடித்தது என் மனதில் இப்போதும் பசுமையாய் இருக்கிறது. இன்றும், என்றும், எப்பவும் நீங்கள் தான் என்னுடைய ஹீரோ. நீங்கள் எனக்கு அப்பாவாகக் கிடைக்க நான் என்ன தவம் செய்தேனோ, ஆனால் உங்களை அப்பாவாக அடைந்ததில் எனக்கு பெருமை.

உங்கள் சிரிப்பும், சிரித்த முகமும் என் மனதில் பசுமையாய் இருக்கிறது. ஆனால் இன்று, உங்களுடைய பேச்சுச் சத்தத்தை, அறிவான புத்திமதிகளை, உங்கள் வாழ்க்கைக் கதைகளையெல்லாம் இழந்து நிற்கிறேன். ஏன் உங்களோடு இருக்கும் பாக்கியத்தைக் கூட இழந்து தவிக்கிறேன் அப்பா. முன்னம் அவனுடைய நாமம் கேட்டு, மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டு, பின்னம் அவனுடைய ஆரூர் கேட்டு, பேர்த்தும் முருகனுக்கே பிச்சியாகி முருகன் பாதம் அடைந்த எங்கள் ஐயாவே, நீங்கள் எங்களுக்கு நல்வழி காட்டி, ஆசீர்வத்துக் கொண்டிருக்கிறீர்கள் என்று தெரியும். பூதவுடல் இவ்வுலகை விட்டு பிரிந்தாலும், நீங்கள் என் மனசிலும் இதயத்திலும் நீங்கா இடத்தில் இருக்கிறீர்கள் அப்பா

அன்புமகள்
சாந்தினி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரப்பிள்ளைகள் காயத்ரி, அரவிந்த், நிலாம்பரி எழுதுவது...

We have lost so much of love from you thatha, but at least we share our loves via viber. Our heart become heavy after hearing that you are no more. We always love you ever thatha.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

கலாநிதி அருணகிரிநாதர்
சாந்தினி
காயத்ரி
அரவிந்த்
நிலாம்பரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முத்தான எங்கள் அப்பாவே...

கதிரவேலு மாணிக்கம் பெற்றெடுத்த முத்தான
எங்கள் அப்பாவே யோகமுள்ள பெண்ணான
யோகசுந்தரமுடன் இல்லற வாழ்வில் இணைந்தீர்கள்
உங்கள் இல்லற வாழ்வின் பயனாக ஆறு
கார்த்திகைப் பெண்களையும் இரண்டு வேல்களையும்
பெற்றெடுத்தீர்கள் அப்பா !

உங்களுக்கு ஒரு மகன் இல்லையென நீங்கள்
ஐயப்பன் ஆலயத்திலிருந்து பறாளாய் முருகன் வரை
பிரதட்டை செய்ததை என்னால் மறக்க முடியவில்லை.
நல்லூர், சந்நிதி சென்றால் உங்கள் தோள் மீது
ஏற்றி திருவிழா காண்பிப்பதையும் மறக்கமுடியவில்லை.

உங்கள் கடின உழைப்பின் மத்தியிலும்
பிள்ளைகளின் படிப்பிற்கு நீங்கள் பட்ட
கஷ்டம் தான் எவ்வளவு எவ்வளவு? எங்கள் எல்லோரையும்
கண்ணை இமை காப்பது போல, சீர் சிறப்புடன்
வளர்த்து வந்தீர்களே அப்பா, நாட்டின்
பிரச்சனைகளால் இடம்பெயர்ந்த வேளையிலும்
எங்களுடன் எவ்வளவு உறுதுணையாக இருந்தீர்கள்.

அதிகாலை எழுந்து நீங்கள் பாடிய
விநாயகர் அகவல், சிவபுராணம், கந்தரனுபூதி,
கந்தசஷ்டி கவசம் எனப் பலவும் இன்றும்
நம் காதில் ஒலிக்கிறதே அப்பா
அதுமட்டுமா பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகளை
பார்க்கவென கொழும்பு, இந்தியா, கனடா, இலண்டன்
சுவிஸ்லாந்து என ஓடோடி வந்தீர்களே அப்பா ,
இனி எப்போது காண்போம் உங்களை என்று தவிக்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் கோவில் அட்டவணையைக் கூட பேரப்பிள்ளைகளே உங்களிடம் கூறுவார்களே

| | |
|---|---|
| ஞாயிற்றுக்கிழமை | - பொன்னாலைக்கோவில் |
| திங்கட்கிழமை | - சிவன் கோவில் |
| செவ்வாய்க்கிழமை | - அம்மன் கோவில் |
| புதன் கிழமை | - ஐயப்பன் கோவில் |
| வியாழக்கிழமை | - சிவன் கோவில் |
| வெள்ளிக்கிழமை | - பறாளாய் |
| சனிக்கிழமை | - ஐயப்பன் கோவில் |

சங்கடஹர சதுர்த்தி விரதத்தினால் சங்கடங்கள் எல்லாம் தீரும் என்று கூறுவீர்களே அப்பா, ஆதலால் தானோ பிள்ளையாரும், முருகனும் ஒன்றாக அழைத்தார்கள்.

நீங்கள் இறைவன் திருவடியில் அமைதியாகவும், நிம்மதியாகவும் இருக்க எல்லாம் வல்ல இறைவனை வேண்டிக்கொள்கின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி !

மகள் நந்தினி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐப்பசி 10, 2020.

## பேத்தி புலம்பல்

எனது அன்பான தாத்தா,

நீங்கள் எனது தாத்தாவாகக் கிடைத்தது என் வாழ்வில் மிகப்பெரிய அதிஸ்ரம். உங்கள் பேச்சு, உங்கள் நடத்தை, உங்கள் மனம், உங்கள் குரல், உங்கள் ஒழுக்கம், உங்கள் பாசம், உங்கள் அன்பு மாதிரி ஒருவரை நூறு ஆண்டுகள் தேடினாலும் கண்டுபிடிக்க முடியாது தாத்தா.

நீங்கள் நான் இரண்டாம் வகுப்பில் படித்த போது பாடசாலைக்கு கைபிடித்து கூட்டி வந்ததை என்னால் மறக்க முடியாது. எவ்வளவு பொறுமையுடன் முதன் முதலாக தமிழ் எழுதிக் காட்டினீர்கள். என்னுடன் சேர்ந்து சரஸ்வதி பூஜைக்கு தேவாரம் பாடினீர்கள். இன்றுவரை பிள்ளையார் சுழி போடும் போது உங்களை நான் நினைப்பேன். எனது வாழ்வில் ஒவ்வொரு முடிவு எடுக்கும் போதும் நீங்கள் என்ன நினைப்பீர்கள் என்று யோசித்து தான் முடிவு எடுப்பேன். நீங்கள் என்னைப் "பாட்டி !" பாட்டி என்று அழைத்து என்று அழைத்து ஒவ்வொரு கிழமையும் கதைபீங்கள்.

தாத்தா நீங்கள் ஒவ்வொரு நாளும் பால், பூ, விளக்குத்திரி, எண்நெய், கற்பூரம் இல்லாமல் கோயிலுக்குப் போகமாட்டீர்கள். கோயில் ஏற்றும் விளக்கை விட நீங்கள் விளக்கு ஏற்றுவீர்கள் ஆனாலும் தாத்தா நீங்கள் தான் எங்கள் விளக்கு. நீங்கள் ஒவ்வொரு நாளும் எனது மனதில் இருப்பீர்கள்.

உங்கள் அன்பான பேத்தி,
சங்கரி ஞானரத்தினம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விழுமிய நல்மனிதர்களில் நீங்களும் ஒருவர்....

விரல் விட்டு எண்ணிவிடலாம் இங்கு வாழும்
விழுமிய நல்மனிதர்களில் நீங்களும் ஒருவர்
திறம் கொண்ட தீந்தமிழ் தெவிட்டாத
தேவாரங்கள் தினமும் படிப்பீர்கள்

உங்களைத் தேடி வருவோருக்கு இல்லையெனாது
புன்னகையோடு எப்போதும் உதவி செய்வீர்கள்
உங்கள் புன்னகையோடு காலமெல்லாம்.
எம்மோடு இருப்பீர்கள் என்றிருந்தோம்.

உங்களை நினைத்தால் கண்களில் கண்ணீர்
ஆறுதல் சொல்ல ஆயிரம் பேர் வந்தாலும்
மீளாத் துயில் கொண்டு எம்மை ஆறாத் துயரில்
தனித்துவிட்டுப் போனீர்களோ ?

எந்நாளும் நினைவில் வாழ்ந்திடத்தானோ
எமை பிரிந்து இறைவனிடம் சென்றீர்களோ
மீண்டுமொரு பிறப்புண்டேல் உங்கள்
மகனாய் பிறக்கும் வரம் தர வேண்டும்.

மகன் ஞானவேல், மருமகள், பேரப்பிள்ளைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்னுயிர்த் தந்தையின் துயர் பகிர்வு

மீளாத்துயில் கொண்டு எம்மை ஆறாத் துயரில்
ஆழ்த்திய தந்தையே !
அன்பும் அரவணைப்பும் கண்ணியமும் மிக்க
உங்களுக்கு ஜெயந்தினி எனும் மகளாக
பிறந்ததை வரமாகவே நினைக்கின்றேன்.
பிள்ளை பிள்ளை என்று கனிவுடன் அழைப்பதும்
தம்பி தம்பி என பாசத்துடன் கதைப்பதும்
பேரப்பிள்ளைகளை பெயர் சொல்லி அழைக்காது
பெரியவர், சின்னவர் என வாஞ்சையுடன் அழைப்பதுவும்
உங்கள் முத்தான சிரிப்பின் ஒலியும் காதில் கேட்கிறது அப்பா.

நாம் ஊருக்கு வருகிறோம் என அறிந்ததும் எக் கோயிலுக்கு
கூட்டிச் செல்லலாம் எந்தக் கோயிலில் திருவிழா என
நாட்காட்டியைப் பார்ப்பீர்களே வந்த பின்னர் அன்புடன்
அமரவைத்து உங்கள் கையால் பாசத்துடன் ஊட்டிவிடும்
ஒரு பிடி சோற்றினையும் நாம் இனி எங்கே காண்பது.

மாமாவுக்கு இப்படி நடக்குமென எதிர்பார்க்கவில்லையென
உங்கள் மருமகனும், தாத்தாவை நாம் இனிப் பார்க்க
முடியாதே எனப் பேரப்பிள்ளைகளும், வரமாய்க் கிடைத்த
என் தந்தையைக் கடைசி நேரத்தில் போய்ப் பார்க்க
முடியவில்லையே எனும் கனத்த இதயத்துடன் நானும்
தங்கள் பாதத்தில் கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக
சமர்ப்பிக்கின்றோம் அப்பா....

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

நீங்கா நினைவுகளுடன் அன்பு மகள்
கி.ஜெயந்தினி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வள்ளலாய் வாழ்ந்தவரே...

வள்ளலாய் வாழ்ந்து புகழ் பல சேர்த்து செல்வ செழிப்போடு சொர்க பூமியாம் சுழிபுரத்தில் அப்பா என்ற ஒரு சொல்லில் எமது தேவைகள் அறிந்து சேவகம் செய்தவரே அன்புடன், பாசமுடன் ஆசையுடன் சாப்பிடும் போது எமக்கு சோறு ஊட்டி பெண் பிள்ளைகள் என்று எமை ஒதுக்காது பிள்ளைகளுக்கு எது தேவையோ அத்தனையும் அள்ளிக்கொடுத்து ஆறு கார்த்திகை பெண்களாய் வளர்த்தீங்கள் அப்பா அதில் என்னை கடை குட்டி மகளாக வளர்த்து முருகனின் பெயரையே வேல்விழி என்று வைத்தீர்கள். அப்பா ஆசையாய் வேல் என்றும் வேல்ஆச்சி என்றும் கூப்பிடுவீர்களே அழைக்கும் பொழுதெல்லாம் ஓடோடி வருவேனே அந்தக் குரலை எங்கு நான் கேட்பேன் அத்துடன் பல கலைகளையும் கற்று வளர்த்தீர்கள்.

காலங்கள் பலதேடி நற்குணமுள்ள மருமகனை தேர்ந்தெடுத்தீங்கள் அப்பா சில நாட்களுக்கு முன் எங்களுடன் தொலைபேசியில் பார்த்து கதைக்கும் போது எங்களுக்கு ஆறுதல் வார்த்தை கூறுனீர்களே உறவுகள் எத்தனை இருந்தென்ன உங்கள் அன்பை மிஞ்சுவதற்கு இந்த உலகத்தில் யாருமே இல்லை உங்கள் பேரப்பிள்ளைகளுடன் கதைக்கும் போது ஒவ்வொரு தேவாரமும் கேட்டு கேட்டு பாடமாக்க சொல்லுவீர்களே அவர்களும் உங்களுக்கு தேவாரம் பாடமாக்கி சொல்லுவார்களே இனி தாத்தா இல்லை தேவாரம் பாட என்றும் முதன் முதலாக நாம் தாத்தாவுடன் தான் வாழை இலையில் சோறு சாப்பிட்டோம் என்றும் கதறும் பேரப்பிள்ளைகள் அதனால் தானோ எல்லையில்லாத அன்பினால் ஏங்கித் தவிக்கின்றோம். எத்தனை பிறவி எடுத்தாலும் எம் தந்தை நீராக தெய்வமாகிய நீங்களே அருள்புரிவீர்கள் உங்கள் நினைவை உயிரில் சுமக்கின்றோம்..

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

நீங்கா நினைவுகளுடன் அன்பு மகள்
வேல்விழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடைசி மகன் கதிர்வேல் புலம்பல்...

கதிரவேலுவும் மாணிக்கமும் பெற்றெடுத்த எங்கள்
முத்தான முத்து ஐயா முத்தையா, எனக்கு
கதிர்வேல் என உங்கள் தந்தையின் பெயர் சூட்டி
அழகு பார்த்தீர்கள். நானோ இன்று
தந்தையை இழந்து தவிக்கின்றேன்.

தென்னம் பிள்ளையது வாடிவிடக் கூடாதென்று
தள்ளாடும் வயதிலும் தண்ணீர் இறைக்கெயில்
தவறிக் கிணற்றில் விழுந்த கதை, எம் மனம் வாடுமே என
மறைத்தீர்கள்.உம் பிள்ளை என்னை வளர்ப்பதற்கு என்னென்ன
இடர் பட்டிருப்பீர்ரோ, எந்தெந்த இடர் சொல்லாமல் மறைந்தீரோ...

வாழ்க்கை எனும் வழி நெடுகே மனம்
கலங்காது நடந்து வந்தோம் உன் அன்புக்கை பிடித்து
உன் மூச்சு நின்ற வேளையிலே கை பிடித்து பார்க்கையிலே
கலங்கியது என் மனம். பின்னர் தேவாரம் பாடுகையிலே
உன் குரல் என்னுள்ளும் எழுகையிலே தெரிந்து
தெளிந்து கொண்டேன் உன் ஆசி என்றென்றும்
எனக்கு உண்டு என்று...

உன் உயிர் பிரிந்த பின்பும் ஓர் நப்பாசை
உன் வழியில் திருவாசகம் ஓதினால் இறைவன்
மனம் உருகி உன் மூச்சு திரும்புமென்று
இருந்தும் உன் உயிர்வரவில்லை
சோழியபுரத்தில் இருந்து சொர்க்கபுரி சிறப்புடன்
செல்வதற்குப் பிரார்த்திக்கின்றேன்.

"நீர் இன்றி அமையாது உலகு !
நீ இன்றி எமக்கேது வாழ்வு !"

ஓம் சாந்தி ! சாந்தி! சாந்தி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாமனிதரே ...

அறநெறிக்காக வாழ்வை அமைத்து
அரவணைப்பாக நம்மை அழைத்து
ஆலய திருப்பணிகளில் இணைத்து - இந்து
ஆகம திருமுறைகளை பண் இசைத்து
மக்கள் போற்ற வாழ்ந்த
மாமனிதரே - எம் மாமனாரே !

கண்மூடிய கணப்பொழுதில் கரம் பிடிக்க
எம் மனம் கனத்தது.
கடைசி தருணம் அருகில் இருந்ததே - என்றும்
கலையாத நினைவாய் அமைந்தது.

நற் திருநாளில் நம்மை விட்டு நீங்கினீர்களே !
நற்கதி அடைவீர்கள் என வேண்டுகின்றோம்.

- மருமகள் பாமினி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் பார்த்து வியந்த மனிதன் தாத்தா!

எனது சிறுவயது முதல் நான் பார்த்து வியந்த ஒரு மனிதன் தாத்தா, அவர் குடும்பத்தில் நான் பிறந்தது, நான் செய்த பாக்கியம். தாத்தாவின் குணங்களின் நான் பார்த்து வியந்தது அவரின் தனி மனித ஒழுக்கம், நேர்த்தியான வாழ்கை, புறங்கூறாமை என்பன. ஒருவர் இல்லாத இடத்தில் அவரை பற்றி புறம் கூறுதல் கூடாது என்பார் தாத்தா. எனக்கு இன்னும் நினைவில் இருக்கும் சம்பவம், ஒரு முறை இடப்பெயர்வின் பொது தாத்தா கூறினார் "காசு பணம் எல்லாம் எப்பவும் போய் விடுமடா ஆனால் கல்வி எப்பவும் கூட வரும்" என்று. அவரின் அந்த வார்த்தை அந்த வயதில் எனக்கு பெரும்உந்துதலாக இருந்தது. படித்தவர்களை மிகவும் மதித்தார்.படிக்க யார் உதவி என்று கேட்டாலும் மறுக்காமல் செய்தார்.

'கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவர்க்கு
மாடு அல்ல மற்றை யவை'

என்ற திருக்குறளை தாத்தா சொல்லி கேட்டிருக்கின்றேன். அவரின் முதல் சம்பளம் 25 சதம் என்று ஒரு முறை கூறினார். படிப்படியாக ஒரு சிறந்த வியாபாரியாக அவர் மாறிய அந்த வளர்ச்சி அளப்பெரியது. கடின உழைப்பு, ஒழுக்கம், நேரம் தவறாமை, வார்த்தை தவறாமை ஆகியவற்றாலேயே தாத்தா அதை சாதித்தார். அவர் நினைத்திருந்தால், பணம், புகழ் வந்தவுடன் வேறு ஊர் சென்று இன்னும் வசதியாக வாழ்ந்திருக்க முடியும். ஆனால் அவர், தான் பிறந்து வளர்ந்த சுழிபுரத்திலேயே வியாபாரம் செய்து, உள்ளூர் மக்களுக்கு வேலை வாய்ப்புகள் வழங்கி அங்கேயே வீடு மற்றும் காணி நிலம் வாங்கினார். தனது ஊர் மக்கள் முன்னேற வேண்டும் என்று மிகவும் ஆசைப்பட்டார், அதற்காக உழைத்தார். வாழ்க்கையில் பல்வேறு சோதனைகள் அவரை ஆட்கொண்ட போதும், தனது கொள்கையில் இருந்து சற்றும் விலகாதவராய் அதிகாலையில் துயில் எழுதல், இறைவனை இடைவிடாது தரிசித்தல், கோயிலுக்கு அபிஷேக ஆராதனை பொருட்கள் வழங்கல், பிராணிகளிடத்தில் அன்பு, கட்டுக்கோப்பான உணவு பழக்க வழக்கம் என்பவற்றை கடைசி வரையில் கடைபிடித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்கள் இடம்பெயர்ந்து போனாலும், தாத்தா வீட்டுக்கு வந்து மாடுகளுக்கு ஆகாரம் வைத்துவிட்டு வருவார். நாங்கள் போகவேண்டாம் என்று தடுத்தாலும், வாயில்லா ஜீவன்களுக்காக வீடுவரை வந்து செல்லுவார்.

'யாவர்க்குமாம் இறைவற்கு ஒரு பச்சிலை
யாவர்க்குமாம் பசுவுக்கு ஒரு வாயுறை
யாவர்க்குமாம் உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரை தானே.

என்ற திருமந்திரம்படி ஒழுகினார் தாத்தா. தாத்தாவின் திட்டமிடலை நான் நினைத்து பார்க்கிறேன். பிள்ளைகளின் திருமணம், வீடு கட்டுதல், வியாபாரம், கோயில் திருப்பணிகள், சமூக சேவைகள் என்பன தொட்டு, தனது சிதைக்கு எரியூட்ட தனது வளவில் மரங்கள் நட்டு, எவ்வாறு தனது இறுதி கிரியைகள் நடாத்தப்பட வேண்டும் என்று சொன்னது வரை எல்லாம் தாத்தாவின் சிறந்த திட்டமிடலுக்கான உதாரணங்கள். தாத்தாவின் வாழ்வில் இருந்து நான் கற்ற முக்கிய பாடம் அவர் எதிலும் கடவுளை முதன்மைபடுத்திய விதம். கடவுளை மையப்படுத்தியே அவரது வாழ்வை வடிவமைத்திருந்தார். வயலில் நாற்று நடுவதாகட்டும், ஒரு நாளை தொடங்குவதாகட்டும், பயணம் புறப்படும் போதும், உண்ணும் போதும், எதிலும், எப்போதும் கடவுளிடம் அந்த காரியத்தை ஒப்படைத்து விட்டுத்தான் காரியத்தை தொடங்குவார்.

எந்த தொழில் செய்தாலும் நேர்மை மற்றும் கணக்கு வழக்கு இல்லாவிடில் தொழிலில் சிறக்க முடியாது என்று தாத்தா எப்போதும் கூறுவார். தேவார திருமுறைகளில் அவருக்கு இருந்த பற்று அளப்பரியது. தினமும் கணீரென்ற குரலில் தாத்தா உருகி உருகி தேவாரம் படிக்கும் போது, கேட்பவருக்கு மெய் சிலிர்க்கும். அவரின் வெற்றிக்கு பின்னால் இருக்கும் பெண்ணாக, எனது அம்மம்மாவை தாத்தா மிகவும் நேசித்தார். தாத்தாவின் சைவ பணிகளுக்கு அம்மம்மாவும் பக்கபலமாக இருந்தார். "செல்வர்க்கு அழகு செழுங்கிளை தாங்குதல்" என்பதிற்கு இணங்க தனது குடும்பம் மற்றும் உறவினர்கள் எல்லாருடைய வாழ்விலும் தாத்தாவின் ஏதோ ஒரு பங்களிப்பு நிச்சயம் இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்விழா கண்ட இனிய இல்லறம், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் மற்றும் பூட்டப்பிள்ளைகள் என்று ஊர் மெச்ச வாழ்ந்து, கடைசிவரையில் உதடுகள் தேவாரத்தை உச்சரித்தபடி இறைவன் திருவடிக்கு சென்று விட்டார். வாழ்வாங்கு வாழ்ந்து மறைந்து விட்டார் தாத்தா. அவரின் வாழ்க்கை எனக்கு எப்போதுமே ஒரு சிறந்த படிப்பினை தன் கடன் பணி செய்து கிடப்பதுவே என்று வாழ்ந்த ஜீவன் தாத்தா. வலது கை கொடுப்பது இடது கைக்கு தெரியக்கூடாது என்பதற்கு இணங்க, அவர் செய்த பல நல்ல காரியங்கள் பிறர் சொல்லித்தான் கேள்விப்பட்டிருக்கிறேன். அவரின் இன்முகமும், பிறரின் மேல் காட்டும் பாசாங்கில்லாத பாசமும் என்றென்றும் என் நினைவில் இருக்கும்.

ஒரு சிறந்த குடும்பத்தலைவன் எப்பிடி இருக்க வேண்டும் என்பதிற்கு உதாரணமாக திகழ்ந்தவர் அவர். தனது பிள்ளைகளை கண்டிப்புடனும் ஒழுக்கத்துடனும் வளர்த்து திருமணம் செய்து வைத்ததோடு பேரப்பிள்ளைகள் வாழ்விலும் மறக்க முடியாத ஒரு அங்கம் தாத்தா. அவர் விட்டு சென்ற வெற்றிடம் மிக பெரிது. அது ஒரு நிரந்தர வெற்றிடம். இனி என்னை “செந்தூர்செந்தூர்” என்று யார் அழைப்பார் தாத்தா?....

“சிவசிவ என்கிலர் தீவினையாளர்
சிவசிவ என்றிடத் தீவினை மாளும்
சிவசிவ என்றிடத் தேவரும் ஆவர்
சிவசிவ என்னச் சிவகதிதானே”

திருமூலர் திருமந்திரம்

என்றென்றும் உங்கள் அன்புப் பேரன்
செந்தூரன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான் பார்த்து வளர்ந்த உத்தம மனிதர் தாத்தா.

உங்களுடன் சிறுவயது முதல் வாழ்ந்து வளர்ந்திருந்த பாக்கியசாலி களில் நானும் ஒருவன். எனக்கு இன்னொரு தாய் தந்தை போலவும் ,ஆசான் போலவும் நல்லதொரு பேரனாகவும் இருந்தீர்கள் நீங்கள் என்றால் மிகையில்லை. தாங்கள் வாழ்ந்த காலத்தில் நினைக்க தவறியவையெல்லாம் தங்களை இழந்தபின்பே நினைந்து உருக்கத்தோன்றுகின்றது. என்னை சிறுவயதில் "ஈசன்" அல்லது "ஈசோன்" என்று எங்கிருந்து வரும் போதும் கணீரென்று கூப்பிட்டுக்கொண்டு வருவீர்களே தாத்தா. தங்களின் பரம குருநாதராகிய ஐயா வாத்தியாரிடம் பறாளாய் எம்பதியில் எனக்கும் தங்களாலேயே ஏடு தொடக்கப்பெறும் பாக்கியத்தை பெற்றேன். அதனாலேயே என்னவோ முருக பக்தி எனக்கும் ஓரளவு துளிர்விட்டது. தங்கள் வாழ்வில் கடைப்பிடித்த ஒழுக்கங்கள், அறங்கள் மிக உயந்தவை.

அவற்றில் ஓரளவேனும் என் சிறுபுத்தியில் பதிந்தனவற்றை நம்மனோரின் நன்மைக்காக ஞாபகப்படுத்துகின்றேன். சிறுவயதில் நான் தங்களிடம் கண்டு ஆச்சரியப்பட்ட விடயம் யுத்தகாலங்களில் எதோ ஒரு சந்தர்ப்ப சூழ்நிலையால் ஒரு பொய் கூற நேர்ந்தாலும் அதை நினைந்தே பெரிதும் வருந்திக்கொண்டிருப்பீர்கள். அவ்வளவு வாய்மை என்ற அறத்தினை உயர்வாக கடைபிடித்த உத்தமர் தாங்கள். ஒரு வியாபாரியாக எவ்வளவு நேர்மையாக இருந்திருப்பீர்கள் என்று இதிலிந்து சிந்தித்துப் பார்த்துள்ளேன்.

இதேபோல் வார்த்தையாடல்களில் வரும் பெரும் குற்றமான வீண் பேச்சு , புறம் கூறல், கோள் சொல்லல் போன்றவற்றை தாங்கள் எக்காலத்திலும் தவிர்த்தே வந்துள்ளீர்கள். எவ்வளவு பெரிய கிசுகிசுப்புகள் ஊரிலே கடந்து போனாலும் அதில் எப்பவுமே விலகியிருப்பீர்கள். அப்படியே யாராவது யாரையும் பற்றி கோள்சொன்னால் அல்லது கிசுகிசுப்பென்றால் கூட "நிப்பாட்டு" என்று வன்மையாக கண்டித்துவிடுவீர்கள். தாங்கள் அடிக்கடி சொல்வது "தீயனவற்றை கேளாதே, தீயனவற்றை பேசாதே" . தொலைபேசி, இணையம் என்று நல்ல வசதிகளையெல்லாம் கீழான செயல்களான புறம் கூறல், கோள் சொல்லல்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீண்வார்த்தை பேசுவதேயே வாழ்க்கையாக்கல் என்று வாழும் தற்காலத்து மனிதர்கள் மத்தியில் தாம் ஒரு உத்தமரே. சிறுவயதிலிருந்தே கடின உழைப்பால் உயர்ந்தவர் என்பது எல்லோரும் அறிந்ததே. தாங்கள் வியாபாரம் செய்த காலத்தில் நான் பிறக்கவில்லை. ஆனால் வீடு வேலைகள் நடக்கும் போதும் வளவு , வயல் வேலைகள் செய்யும் போதும், கோவில் வேலைகளிலும், குடும்ப மற்றும் சமூக விசேட வைபவங்களில் என்னாலும் தங்களின் கடின உழைப்பை காண முடிந்தது. அதோடு மட்டுமல்லாது பல தொழில் அறிந்தவராக இருந்துள்ளீர்கள். சில்லறை கடை வியாபாரம் முதல் மொத்த வியாபாரம், விவசாயம் என்று ஒரு தனி வீடு கட்டும் கட்டிட அறிவு கூட தங்களிடம் முழுமையாக இருந்துள்ளது. எவ்வளவு செல்வச்செழிப்புடன் இருந்தபோதும், பிள்ளைகள் வயலால் ஒரு பெரிய லாபமும் இல்லை, வீணா அதோட கஷ்டப்படாதையுங்கோ, என்று எவ்வளவு சொன்னபோதும், விவசாயத்தை கைவிடாத கொள்கை தம்மிடம் இருந்தது. கடைசியாக நோயுற்று இருந்த வேளையிலும் விவசாயம் செய்வித்துள்ளீர்கள். கடைசியாக அம்மம்மாவிடமும் அதை செய்விக்க பழக்கினீர்கள். தாம் அடிக்கடி சொல்லும் குறள்

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின் செல்பவர்" - 1033



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உழவுத்தொழிலைச் செய்து அதனால் கிடைப்பதை உண்டு வாழ்வோரே வாழ்பவராவர். மற்றவர் யாவரும் உழவரை வணங்கி, உண்ணும் உணவுக்காக அவர் பின் செல்வோரே. விவசாயம் மட்டுமா! பசு வளர்ப்பதை ஒரு பெரும் புண்ணியமாக அன்புடன் செய்துவந்தீர்கள். பசுவளர்த்து பால் எடுக்காத போதும் வழிபாட்டிற்கென்றே எக்காலமும் வளர்த்தீர்கள். வளர்த்த பசுவை விற்க நேர்ந்தால் அன்று முழுதும் நீங்கள் உண்ணாமல் கவலையோடிருப்பீர்கள்.

சாஸ்திரம் பசுவை ஒருவனின் இன்னொரு தாயாக போற்றுகிறது: இவற்றையெல்லாம் தாங்கள் பெரும் நூல்களை கற்காமலேயே கடைப்பிடித்து வாழ்ந்தீர்கள். பிற்காலத்தில் நாம் அந்த நூல்களை கற்கும் போது தான் விளங்கிற்று தாம் எவ்வளவொரு பெரும் புண்ணியர் என்று

ஆத்மா மாதா குரோ: பத்னீ ப்ராஹ்மநீ ராஜ பத்னிகா ;
தேனுர் தாத்ரீ ததா ப்ருத்வீ ஸப்தைதா மாதர: ஸ்ம்ருதா ;;

தனது சொந்த தாய், குருவின் பத்னி, அந்தணரின் மனைவி, அரசனின் மனைவி, பசு, செவிலியர் மற்றும் மண் ஆகிய எழுவரும் ஒரு மனிதனின் ஏழு தாய்களாக விளங்குகிறார்கள்.

- 42.:.49 - 58 கோமதி வித்யா, விஷ்ணு

தர்மோத்தரம் தாங்கள் சகல சீவராசிகளிடமும் காட்டிய அன்பு, தங்கள் செல்லப்பிராணியான "வீரன்" தங்களை மருத்துவமனையில் இருந்து கொணர்ந்தபின் சுற்றி சுற்றி வந்து காலை முத்தம் இட்டதையும், தங்கள் இறுதி யாத்திரை நேரம் கண்களில் கண்ணீருடன் நின்றதையும், அன்று முழுதும் தங்களை அங்குமிங்கும் தேடி திரிந்ததையும் , உண்ணாமல் இருந்ததையும் பார்த்து நெகிழ்ந்தேன். வீரன் மட்டுமா தாம் வளர்த்த செடிகள் முதல் தென்னம்பிள்ளை வரை யார் நமக்கு இனி தண்ணீர் இறைப்பாரெண்டல்லவா அழுதிருக்கும்.

"அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ(து) ஆரும் அறிகிலார்
அன்பே சிவமாவ(து) ஆரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே." - திருமந்திரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பே சிவமாய் தாம் வாழ்ந்துள்ளீர் என்றதில் ஐயம் வேறில்லையே. தாம் புலால் உண்ணா நோன்பை கடந்த 20 வருடமாய் எந்த இடரிலும் ஆசாரிய சீலராய் இறுதிவரை கடைபிடித்தபோதும் வீரனுக்கென்று இறைச்சி கொத்து வேண்டியோ வேண்டிவித்தோ வைக்கும் பரந்த உள்ளம் கொண்டவரல்லவா தாங்கள்.

இவ்வாறான நல்லொழுக்கங்கள், நல்லறங்களெல்லாம் தங்கள் பூர்வீக தொடர்பென்றே நான் நினைப்பதுண்டு. அதனால் தான் போலும் சிவதீக்ஷை பெற்ற பெற்றோர், மனைவி, உத்தம குருவான ஐயா- வாத்தியார், திருவருள் ஓங்கும் பராளாயம்பதியான், ஹரிகரபுத்திர ஐயனார் முதலிய திருக்கோவில் சூழல் என்று எல்லாம் அமையப்பெற்ற சூழலில் தங்களை இறைவன் ஜனிக்கப்பண்ணினான்.

ப்ரயத்னாத் யதமானஸ்து
யோகீ சம்சுத்த-கில்பிஷ:
அனேக ஜன்ம சம்ஸித்தஸ்
ததோ யாதி பராம் கதிம் - பகவத்கீதை

உன்னத நிலையை அடைய இடைவிடாது முயலும் ஆத்மாவிற்கு, பக்தர்களின் குடும்பத்தில் அல்லது அவ்வாறான சூழலில் பிறப்பு கிட்டுவது ஒரு பெரும் பாக்கியம் என்பது சந்தேகமின்றி உண்மையே. அநேக ஜென்மங்களில் செய்த புண்ணியங்களால் ஒருவனுக்கு அப்படிப்பட்ட வாய்ப்பு கிடைக்கின்றதாக பகவத்கீதையில் கிருஷ்ணர் கூறுகின்றார்.

தாங்கள் பல ஆன்மீக தலயாத்திரை சென்று வந்தவர். தங்களுடன் இச்சிறியேனிற்கு கதிர்காமயாத்திரை சென்றுவர முருகன் திருவருள் பாலித்தமை யான் பெற்ற ஒரு பெரும் பேறாகும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் தங்களின் பல தெய்வீக அனுபவங்களை எம்முடன் பகிர்ந்துள்ளீர்கள். அப்போதுதான் தங்கள் தாயார் பலதடவை யாழ்ப்பாணத்திலிருந்து கதிர்காமம் பாதயாத்திரையாக சென்று வந்தவர் என்றும், தாங்கள் ஒரு 16 வயதுகளில் பாதயாத்திரையாக மாத்தறையில் இருந்து சென்றுவந்ததையும் அறிந்தேன்.

"நீறில்லா நெற்றி பாழ்" என்று அடிக்கடி கூறுவீர்கள். உண்ணமுன்னும் வெளியில் போகமுன்னும் வெளியிலிருந்து வந்த பின்னும் எப்போதும் திருநீற்றையே பேணி "சிவசிவ" என்ற மந்திரத்துடன் அணிவீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கென்றே வெளியிலொரு பேணியில் திருநீறு, அறையில் ஒரு பேணியில் திருநீறு, ஹால் இல் ஒரு பேணியில் திருநீறு என்று எங்கும் திருநீற்றை தூய்மையாய் வைத்துப்பேணி அணிவீர்கள். எந்த கோவில் போய் வந்தாலும் திருநீறு கொண்டராட்டில் எம்மை பேசுவது என்றுமே எம்மால் மறக்க முடியாதவை தாத்தா.

"காண வினியது நீறு கவினைத் தருவது நீறு
பேணி யணிபவர்க் கெல்லாம் பெருமை கொடுப்பது நீறு
மாணந் தகைவது நீறு மதியைத் தருவது நீறு
சேணந் தருவது நீறு திருவால வாயான் திருநீறே."- சம்பந்தர் தேவாரம்

பொழிப்புரை :
திரு ஆலவாயான் திருநீறு கண்களுக்கு இனிமை தருவது. அழகைக் கொடுப்பது. விரும்பி அணிவார்க்குப் பெருமை கொடுப்பது. இறப்பைத் தடுப்பது அறிவைத் தருவது உயர்வு அளிப்பது.

என்று சம்பந்த பிள்ளையார் கூறியது போல் காண்பவர்க் கெல்லாம் இனிமையான தோற்றத்துடனும், நல்லறிவும், தானாய் சேர்ந்த புகழுடனும் பெருமையுடனும் விளங்கினீர்கள் தாத்தா. என்றுமே உங்களிடம் நான் பார்த்து வியந்த விடயங்களில் ஒன்று "நான் செய்தேன்" என்று ஒரு காலமும் தற்பெருமை பேசுவது கிடையாது. யாராவது உங்களிடம் தாங்கள் செய்த கோவில் திருப்பணி பற்றி புகழ்ந்து பேசினால் கூட "எதோ இறைவன் நம்மை ஒரு கருவியாய் செய்வித்தான்" என்று வருவனவற்றை எல்லாம் இறைவனிடம் சமர்ப்பித்து இறைவனை மையப்படுத்தியே வாழ்ந்தீர்கள். தம்பி ஐயா வாத்தியார் இல்லாவிடில் நான் இவ்வளவு தூரம் கோவில் திருப்பணி செய்திருக்கமாட்டேன் என்று அவரில்லா காலத்திலும் வெளிப்படையாக அவரை சொல்லி பாராட்டி தாம் புகழ் பெற விரும்பாத ஒரு உத்தமர்.

என்றுமே தாங்கள் கல்விக்கொரு தனி இடம் கொடுப்பதுண்டு. கல்லூரி முடிந்ததுமே எதோ படித்து முடித்து விட்டோம் என்றெண்ணுபவர்கள் மத்தியில் தாங்கள் அடிக்கடி கூறும் வசனங்கள் ஞாபகம் வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கற்றது கை மண்ணளவு கல்லாதது உலகளவு"

அதற்கமையமே தாங்கள் என்றும் அறிவைத்தேடுவதை நிறுத்தியதே இல்லை. தெரியாதனவற்றை யாரிடமும் எந்த தாழ்வுச்சிக்கலுமின்றி கேட்டு சம்பந்தப்படட அறிவைப்பெற்றுத் திகழ்ந்தீர்கள். அதேபோல் இடம்பெயர்ந்து இருந்த காலங்களிலும், கொழும்பில் இருந்த காலங்களிலும் புராண படனங்கள், திருவாசக , திருமுறை முற்றோதல்கள் என்று தொடங்கி இறுதி நாட்கள் வரை கற்றல், கேட்டல் போன்ற ஞான வேள்வியை நிறுத்தியதே இல்லை.

"ஞானத்தால் வீடென்றே நான்மறைகள் புராணம்
நல்ல ஆகமஞ் சொல்ல அல்லவா மென்னும் ஊனத்தா ரென்கடவர் " -
சிவஞான சித்தியார் 27

என்று சிவஞான சித்தியார் கூறுவதுபோல, என்னதான் கோவில் கட்டினாலும், திருவிழா செய்தாலும் பல இறை புண்ணியங்கள் செய்தாலும், அவையெல்லாம் ஞானத்தின் படிக்கு நம்மை கொண்டுவந்து விடும் ஏனைய ஆரம்பநிலைப் படிகளே என்பது உண்மையானது போல, தாங்கள் செய்த இறை புண்ணியங்களால், நேர்த்தியான கோவில் திருப்பணிகளால் கந்தபுராண படனம், திருமுறை முற்றோதல் போன்ற ஞானவேள்வியை தாங்களும் தொடங்கி தாம் வழிபடும் ஐயனார் ஆலயத்திலும் தொடக்கி வைத்தீர்கள். என்றும் எம்பெருமான் திருவருளுக்கு பாத்திரமானீர்கள்.

"நல்ல குருநாதன் நம்மை வருத்துவது
கொல்லவல்லகொல்லவல்ல பொல்லா வினையறுக்க."

என்ற வாசகம் உண்மை என்றவாறு இறுதிக்காலங்களில் சிறிது நோயினால் வருத்தி உங்கள் பந்தபாசத்தினை எல்லாம் நீக்கி முருகன் கார்த்திகை நன்னாளும், சங்கடகர சதுர்த்தியும் , சோமவாரமும் கூடிய நித்திய பிரதோஷ காலத்தில் தன்னடி சேர்ப்பித்தான். என்றும் முருகன் திருவடியில் கார்த்திகை தீபமாக சுடர்விட்டு பிரகாசித்திருக்கப் பிரார்த்திக்கின்றேன்.

அன்புடன் தங்கள் பேரன்
செல்வரத்தினம் ஈஸ்வரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் ரசித்த தாத்தா (1994 முதல் 2020 வரை)

நான் பார்த்து ரசித்த என் நாயகனுக்கு
ஆசை முத்தங்கள் பல கோடி
புகழுடனே தோன்றினீர்கள் - தாத்தா
நற்புகழுடனே முருகனடி சேர்ந்தீர்கள்

முத்துச்செட்டியாருக்கு மூத்த பேத்தியாக
என் சிறுவயதை உங்களுடன் களித்தமை
எம்பெருமான் தந்த பெரும்பாக்கியமே

வெள்ளை உடுத்தி, மூன்று குறி நீறணிந்து
அல்லும் பகலும் இறை நாமத்தை ஓதி
சரியை தொண்டை நெறி பிறழாது கடைபிடித்த
தாத்தவையே நாம் கண்டு வளர்ந்தோம்

பாலாவி கொண்ட திருக்கேதீச்சர பெருமானையும்
அலங்கார கந்தன் நல்லூரானையும், சந்நிதியான் திருவடியையும்
இறுதிக்காலத்தில் உம்மோடு தரிசிக்க யாம் சென்ற யாத்திரை
பெரும் பேறு அன்றோ தாத்தா

தள்ளாடும் வயதிலும் ஏர் ஏந்தி
மோட்டார் சைக்கிளில் கமம் புகும் உங்கள் அழகு
அந்த ஆறுபடையப்பனின் அழகுக்கு நிகரன்றோ

நேர்மையின் சிகரமாய், விடா முயற்சியாளனாய்
தூர நோக்கான சிந்தையுடனும், இறை தர்மத்துடனும்
கடைசி வரை சொந்தக்காலில் நின்றீர்களே - தாத்தா

இப்பண்புகள் என்றென்றும் எச்சந்ததிக்கும் வாய்க்க ஆசி புரிவீர்களாக.

நீங்கா நினைவலைகளுடன்
உங்கள் அன்புப் பேத்தி கௌரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வழிகாட்டி ஒளி ஏற்றிய எங்கள் ஒளி விளக்கே அப்பப்பா...

நுள்ளிக் கொஞ்சிக் கதைபேசிய - எங்கள்
நுள்ற அப்பப்பாவே
உங்கள் சின்ன சின்ன ஞாபகங்களெல்லாம்
பெரும் மழையாய் பொழிகிறது !

விந்தைமிகு சிந்தையுயர் முத்துச் செட்டியாரே
தோல்வி கண்டு துவழாது
வேள்வி செய்து வாழ்ந்தீரே
திருவிழாவில் நாயகனாய் - எங்கள்
பெரும் வாழ்வின் போதகனாய்
உறவில் உற்சவமாய் கலந்து
வாழ்ந்த எங்கள் குடும்ப சரித்திர நாயகனே

கண் விழித்தும், கால் வலித்தும்
தள்ளாடும் வயதினிலும்
தளராது உழைத்த தரணி போற்றும் தர்மனே

உயிர்க் கொடியில் பூக்கவைத்து
பயிர்க்கொடியை பிள்ளைகள்போல் சிரிக்க வைத்து
உறவுகளை சிறக்க வைத்து ஊரினை அலங்கரித்து
பார் போற்றும்படி வாழ்ந்த பண்பாளனே !

உறங்கும் பொழுதுகள் நீளமாகி
உண்ணும் உணவுகள் அளவாகி
விழிகளை மட்டுமன்றி
இதயத்தையும் இரத்தம் சிந்த வைக்கும்
இறுதியாக நீங்கள் நோயினால் பட்ட இன்னல்கள்...

திரும்பும் திசைகளெல்லாம்
தினமும் கம்பீரமாக உலாவி வந்த தெய்வம்
ஓய்வைத் தேடி பயணித்தது போலும்
மலர்களின் தூவலில்
மன்னவன் மறைந்து போன
மாயம் தான் யாதோ ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழுதுகள் நாம் ஆளான போது
விழுந்திட்ட ஆலமரமான எங்கள்
அன்பு அப்பப்பாவே !
விருட்சமாய் நாமும் வளர
ஆசீர்வதியுங்கள் !

நித்திய வாழ்வில் நிறைந்து ஓய்வு பெற்ற
சத்தியம் தவறா அரிசந்திரனே
சத்திய சிவனின் சக்தியால்
முக்தி பெற பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி! சாந்தி!

அன்புடன் பேத்தி
சிவரஞ்ஜினி ஜெயநாயகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோழியபுரம் தந்த உள்ளத்தைத் தொட்ட உத்தமர்
# அமரர் கதிரவேலு முத்தையா

மரணம் என்பது இயற்கையானது தான், இருந்தாலும் சில மனிதர்களுடைய மரணத்தை எம்மால் ஏற்றுக் கொள்ளவும், மனதால் தாங்கிக் கொள்ளவும் முடிவதில்லை. அவர்களினது பிரிவானது என்றைக்கும் எம்மை வருத்துவதாக அமைந்துவிடுகின்றது. அவர்களது எண்ணம் செயல் நடத்தை யாவும் நெஞ்சில் நிலைபெற்று எப்போதும் இனம்புரியாத ஏக்கத்தைத் தந்து கொண்டே இருக்கும். இத்தகைய மீளாத்துயருக்கு எம்மை ஆளாக்கி இறைவனடி சேர்ந்துவிட்டீர்களே! காலம் எமக்குத் தந்த இனிமையான கனியைப்போன்றவர். ஆனால் கண்ணீரால் எழுதிய கலை ஓவியம் போல கலங்கி மறைந்து போனது ஏனோ? பழகுவோர் அனைவரையும் முதற் சந்திப்பிலேயே ஈர்த்துவிடும் வசீகர சக்தி படைத்தவராகவும் அடக்கம், அமைதி, நேர்மை சகிப்புத்தனமை, செயற்றிறன் ஆகிய சால்புகள் அமையப் பெற்றவராகவும் விளங்கினார்.

சித்தமுகம், அளவு கடந்த அன்பு, இன்சொற்றிறன், பிறர்க்கு உதவுவதே இன்பமென்ற சிந்தனை கொண்டு எல்லோருக்கும் உதவுபவர். அதனால் தான் இறைவன் பெருவிருப்பு கொண்டு தன்னோடு ஆட்கொண்டான் போலும். எங்கள் ஸ்ரீ ஹரிகர புத்திர ஐயனார் ஆலய திருப்பணிச் சபையில் 1975ம் ஆண்டு எடுக்கப்பட்ட தீர்மானத்தின் படி ஆலய மூலஸ்தான வேலையை தமது திருப்பணியாக ஏற்று வைரகற்களால் 1987 இல் கட்டிமுடித்தார். அத்தோடு காசாளர் பதவியையும் ஏற்று ஏனைய திருப்பணிகளையும் பொறுப்பேற்று வேலைகள் தொடர்ந்து செயற்பட தனது சொந்தப் பணத்தையும் செலவிட்டு திருப்பணி சேவைகளை செய்து முடித்தார்.

1989 ஆம் ஆண்டு தொடக்கம் 1996 வரை பொருளாளராகவும், 1996 தொடக்கம் 2020 வரை காப்பாளராகவும், ஆலயத்தில் பன்னிரு திருமுறை ஓதுவார் தலமை ஓதுவாரகவும் பணியாற்றியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னார் 1989ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் செய்யப்பட்டு திருப்பணி வேலைகள் பூர்த்தியாகி தான் மேலதிகமாக விட்ட ஒரு தொகை பணத்தையும் சபைக்கே அர்ப்பணித்தார்.

ஐயா உங்கள் ஓசை ஒலி ஆலயத்தில் ஒலித்த வண்ணம் இருந்தது. அவை இன்று ஓய்ந்து போனாலும் உங்கள் காண்டாமணி காலை மாலை ஒலித்துக் கொண்டே இருக்கின்றது. தங்கள் பணிகளை தொடர்ந்து செய்வோமாக,

அன்னாரின் இறப்பை இறப்பாக எடுக்காமல் இறைவனின் விருப்புக்குரிய ஒருவர் எங்களோடு இருந்தார் என்ற நினைப்போடும் எல்லாம் இறைசெயல் என்ற நிஜத்தோடும் ஆறுதலடைவோமாக,

சுவாமியே சரணம் ஐயப்பா

ஸ்ரீஹரிகர புத்திர ஐயனார்
தேவஸ்தான பரிபாலன சபை
சுழிபுரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடன் பிறவா சகோதரன் முத்தையா அவர்கள்...

இந்தப் பூமியில் கணக்கிடமுடியாத மனிதர்கள் பிறந்து இறக்கின்றனர். இவர்களுள் ஒரு சிலரே தாம் பிறந்து வாழ்ந்த காலத்தில் தங்கள் குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும், ஊரார்களுக்கும் செய்த பணிகள் மூலம் தங்களைச் சமூகத்தில் நிலைநாட்டிக் கொள்கின்றார்கள். இப்படியானவர்களில் ஒருவர் தான் அமரர் உடன்பிறவாச் சகோதரன் க. முத்தையா அவர்கள்.

"நிலையின் திரியாது அடக்கியான் தோற்றம் மலையிலும் மாணப்பெரிது" என்ற திருவள்ளவர் குறளுக்கமைய முத்தையா ஐயா அவர்கள் கலக்கமற்ற மனம் சிறந்த எண்ணங்கள் கண்ணுக்குக் குளிர்ச்சியான சிவனடியார் தோற்றமும் உடையவராவர். இப் பண்பாட்டாளனுடன் அடியேன் முப்பது ஆண்டுகளுக்கு மேலாக சிறந்ததொரு நண்பனாகப் பழகி வந்தேன். அடியேன் சுழிபுரம் மேற்கு கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்தில் பல ஆண்டுகளாக, மூன்று மாத காலம் கந்தபுராணத்துக்கு பயன் சொல்லும் பணியை மேற்கொள்ளும் போது தாமும் கலந்து சிறப்பித்து முருகப் பெருமானது திருவருளைப் பெறுபவர். இத்துடன் யுத்த காலத்தில் கொழும்பு நகரசபையின் கட்டுப்பாட்டுக்குள்ளே இருக்கின்ற முருகன் ஆலயங்களின் கந்தபுராண வித்தகர்களில் ஒருவரான மு.தியாகராசா கந்தபுராணத்துக்கு பயன் சொல்லும் போது தாமும் தவறாது கலந்து சிறப்பித்து முருகப்பெருமானதும், அடியார்களினதும், ஆலய குருமார்களினதும் ஆசியைப் பெறுபவர்.

ஜயனார் ஆலயத்தில் திருவாசக முற்றோதல், பன்னிரு திருமுறை முற்றோதல், திருவாதவூரடிகள் புராணபடலம் என்பவற்றையும் நடாத்தி அடியேனையும் கௌரவித்து அனுப்பி வைப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் பல சமய சமூகப் பணிகளைச் செய்த முத்தையா ஐயா அவர்கள் கந்த புராணத்தை தாமாகப் படித்தும், குரு மூலம் கேட்டும் சிந்தித்ததன் பயனாக முருகப்பெருமான் அருளால் 79 ஆண்டுகள் இந்தப் பூமியில் இந்திரன் போல வாழ்ந்து தான் எதை அடையவேண்டுமென்று நினைத்தாரோ அதையெல்லாம் அடையப்பெற்று பறாளாய் முருகப்பெருமானது திருவடியைச் சேரவேண்டுமென்று வணங்கி குடும்பத்தினருக்கும் ஆறுதல் கூறி விடைபெறுகின்றேன்.

அன்பன்
பௌராணி.க.செ.சிவபாதம்
வித்தகர் பணிப்புலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அழகிய சுழிபுரத்தில் நீ பிறந்தாய்......

அலைமகள் தழுவிட அழகிய சுழிபுரத்தில் நீ பிறந்தாய்
அன்பொடு அறிவாற்றல் நிறைந்திட நீ வளர்ந்தாய்
கடலக மக்கள் செய்த அருந்தவப் பயனாய்
கண்ணிற்குள் மணியாக காட்சி தந்தாய்
பல ஆண்டுகள் நற்பணியாற்றியே
நற்றுணைத் தலைவராய் வலம் வருகையிலே
சேற்றினில் மலர்ந்த செந்தாமரையை
காற்றினில் வந்த காலன் கவர்ந்து சென்றான்.
காலன் அவரைக் கவர்ந்து சென்றாலும்
ஆற்றிய பணிகள் அறச் செயல்கள்
சாட்சியாய் இன்னும் தெரியுதையா
மனிதருள் மாணிக்கமே, மாணிக்கம் பெற்ற முத்தே
ஒளியென வீசிய சூரியன் நீ ஐயா!
மீனவர் வாழ்க்கை மீளாத் துயரத்தில் வீழ்ந்திட்ட போதிலும்
வாடாது நீரூற்றி வளர்த்தவன் நீ ஐயா !

எமது வாழ்வியலுக்கு வழிகாட்டி சென்றாலும்
எமது மண்ணில் கலை பண்பாட்டு விழுமியங்கள்
அசையாது அடித்துக்கூறி அன்பாக வளர்த்தவரே
பிறப்பு ஒரு சம்பவமாக இருந்தாலும்
இறப்பை ஒரு சரித்திரமாக படைத்தவரே
இறைபதம் அடைந்த "முத்து" ஐயாவே
உங்களைப் போன்று உறுதியுடன் எம் சமூகத்தில்
வழியதனைக் காட்ட மறுபடி
வந்திடுவீர் எங்கள் முன்னே
சுழிபுரம் பெற்ற முத்தே
மனதார நாம் போற்றும் முத்தையாவே
தளராத உறுதிக்கு தலைவன் நீயே
தரணியுள்ளவரை உந்தன் பெயரும் வாழும்
இதனை இதனால் இவன் முடிக்கும் என்றறிந்து
அதனை அவன் விடல்

அலைமகள் கடற்றொழிலாளர் கூ. சங்கம்
சுழிபுரம் மேற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீளாதுயர் கொண்டாயே அருமை சின்னப்பு..

மீளாதுயர் கொண்டாயே என் அருமை சின்னப்பு வையத்துள் இயற்கை படைத்த நியதிபடி இல்லறத்தில் வாழ்வாங்கு வாழ்பவன் வானில் உறையும் தெய்வம்கட்டு நிகராக வைத்து போற்றப்படுவான். என்ற பொய்யா மொழிப்புலவர் கூற்றுக்கு அமைவாகவும்

"யாவர்க்குமாம் இறைவர்க்கு ஒரு பற்சிலை
யாவர்குமாம் பசுவுக்கொரு வாயுறை
யாவர்குமாம் உண்ணும் உண்ணும் போதொரு கைபிடி
யாவர்குமாம் பிறருக்கு இன்றுரை தானே"

என்ற திருமூலர் திருமந்திரத்தை தேவ வாக்காகக் கொண்டும் வாழ்ந்து அரிகரபுத்திர ஐயனால் பாதார விந்தைகளை சென்றடைந்த என் அன்புக்கும் பாசத்துக்கும் மரியாதைக்கும் உரிய உங்களின் மரணச்செய்தி கேட்டு நானும் என் மனைவி மக்களும் பெரும் துயர் உற்றுள்ளோம். நீங்கள் நோய்வாய்ப்பட்ட நாளிலிருந்து உங்களை நேரில் பார்வையிட்டு எங்கள் கடமைகளை செய்ய துடியாய் துடித்த உன் அருமை புதல்வன் ஞானவேல் லண்டனிலும், சுவிஸிலிருந்து எனக்கும் அந்த பாக்கியம் கிடைக்காமல் போனதிற்கும் "கொடிய கொரோனா வைரஸ்" தானே தடைவிதித்தது. இது என் வாழ்நாளில் மறக்க முடியாத சம்பவம்

நான் சுவிஸிலிருந்து பறந்து வந்து தாய் மண்ணில் கால் வைக்கும் போதெல்லாம் என் உள்ளத்தில் நிறைந்தவர்களில் உங்கள் அன்பும் பாசமும் நினைவை விட்டு அகலாதவை. மேலை தேசங்களில் வாழ்ந்துகொண்டிருக்கும் உங்கள் பிள்ளைகளைப் பார்க்க வரும் போது என்னையும் ஒரு பிள்ளையாகக் கருதி சுவிஸ்க்கு வந்து எங்களுடன் தங்கி பல்வேறு இடங்களிற்கு சென்று பசுமை நிறைந்த நினைவுகளுடனும் உங்கள் இறுதி ஊர்வலத்தில் கலந்துகொள்ள முடியாமல் போன சோக வரலாற்றையும் பதிவு செய்து தங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பவர்களில் நானும் ஒருவனாக நின்றுகொண்டு வந்த துணை இன்றித்தவிக்கும் சின்னம்மாவுக்கும் பிள்ளைகளுக்கும் ஆறுதல் கூறி விடைபெறுகின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

இவ்வண்ணம் சுவிஸ்ராசா
கிருஸ்ணபிள்ளை சிவசுந்தரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உழைப்பால் உயர்ந்த உத்தமன் முத்தையா (முதலாளி)..

சகல வளங்களும் நிறைந்த இலங்கைத் திருநாட்டின் வடபால் அமைந்த யாழ்ப்பாணத்தில் மேற்குத் திசையில் அமைந்த இடம் சுழிபுரம். இதன் பெருமையை விளக்குவது சரித்திரப் பிரசித்தி பெற்ற ஆலயங்கள், கல்வி மான்களை உருவாக்கும் கல்விக் கூடங்கள் புனித தீர்த்த தலமான திருவடி நிலையும் அமையப்பெற்ற இடம் சுழிபுரம் ஆகும். இதன் மேற்குப் பகுதியில் கதிரவேலு மாணிக்கம் குடும்பத்திற்கு 1941 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 12 ஆந் திகதி முத்தாக உதித்தவர் தான் முத்தையா. விளையும் பயிரை முளையில் தெரியும் என்பதற்கமைய தனது கல்வியை முடித்துக் கொண்டு சிறுசிறு வியாபாரத்தில் ஈடுபட்டு விடாமுயற்சியால் பெரும் முதலாளி ஆனார். இவர் ஒரு அழியாத முருக பக்தன். இவருடைய குடும்பமே பறாளை முருகனே தஞ்சம் என்று வாழ்ந்து வந்தார்கள். தன்னுடைய வாகனங்கள் யாவற்றிற்கும் வேல் விமானம் என்ற பெயரே சூட்டினார். இவர் தனது குழந்தைச் செல்வங்களுக்கும், அவர்களின் இல்லங்களுக்கும் முருகனின் நாமங்களையே சூட்டியுள்ளார். அவர்களின் இல்லங்களில் இவர் சமய சமூக சேவையே தொண்டாகக் கருதி வந்தவர்.

பறாளை முருகன் ஆலயத்தில் ஆலய வளர்ச்சிக்கு 1965ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரையும் பல திருப்பணிகளை எங்களுடன் முன்னின்று செய்து வந்தார். இவர் நீண்டகாலம் தர்மகர்த்தா சபையின் நிர்வாக உறுப்பினராக இருந்து பல சிறப்பு விடயங்களைச் செய்தவர். ஆலய வீதியில் கந்தர் அநுபூதியை சுவர்களில் பதிப்பதற்கு பாடுபட்டவர். சகல அடியார்களுக்கும் பயன் அளிக்கும் வகையில் கந்தர் அநுபூதியை விதைப்பதற்கு எங்களுடன் பாடுபட்டவர். மகா சங்காபிஷேக சபையில் இருந்து தன்னால் ஆன உதவிகளைச்செய்து வந்தார். எங்கள் குடும்பத்தில் நிறைந்த அன்பும் பாசமும் கொண்டவர். அவர் செய்த முருகத் தொண்டுகளை அவரின் பிள்ளைகளும் பின்பற்றுவார்கள் என நம்புகிறோம். அமரர் முத்தையா இவர்கள் தனது பிள்ளைகளின் விருப்பத்திற்கு அமைய கனடா, லண்டன், போன்ற நாடுகளுக்கு எல்லாம் சென்று வந்தார். இவர் கொழும்பில் சிலகாலம் வசித்த போது தனது சமய தொண்டுகளான பம்பலப்பிட்டி மாணிக்க விநாயகர், கதிரேசன் ஆகிய ஆலயங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தபுராண படிப்புகளையும் பிள்ளையார் கதைகளையும் என்னுடன் முன்னின்று படித்துள்ளார். ஆலயங்களில் ஒருவராகவும் இவரும் பல அடியார்களின் நன்மதிப்பை பெற்றவர் . எனது அன்புக்குரிய நண்பன், எங்கள் முருகன் அழியா தொண்டன் பறாளை முருகன் பாத கமலங்களை அடைந்துள்ளார். அவர் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல பறாளை கலியுகவரதனை வேண்டி நிற்கிறேன். கந்தனின் கார்த்திகையும் கணபதியின் சங்கட சதுர்த்தியும் கூடிய வேளையிலே அன்னாரின் ஆத்மா சாந்தியடைந்தது.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி ! ஓம் சாந்தி!

"வேலுண்டு வினையில்லை மயில் உண்டு பயம் இல்லை.
பறாளை கந்தன் உண்டு கவலை இல்லை".

இப்படிக்கு,
சுழிபுரம் பறாளை முருகன் அடியான்
வாகை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வகுப்புத் தோழியின் வரிகள்....

ஆனைமுகன், ஆறுமுகன் பாதக்கமலங்களுக்கு முதல் வணக்கம். முருகப்பெருமான் முற்பிறப்பில் முத்தையா செய்த புண்ணியத்தின் பெயரில் தன் நாமத்தையே அவருக்கு வழங்கினார். நானும் திருவாளர் முத்தையாவும் பாலர் வகுப்புவரைஒரே வகுப்பில் கல்வி கற்றோம். அக்காலத்தில் எங்கள் கல்வி அதிபர் திருவாளர் கதிர்காமு ஆசிரியர் அவர்களின் கல்வி அறிவுதான் இன்றுவரைஎங்களுக்கு கலங்கரை விளக்காகதிகழ்கிறது. 1950ல் கிருவானந்தவாரியார் பறாளாய் இலங்கைக்கு வந்தபோது திரு. சிவப்பிரகாசத்தின் அழைப்பின் பேரில் சுழிபுரம் பறாளாய்க்கு வருகை தந்தார். அவர் முருகனைத் தரிசனம் பண்ணியவுடன் சொன்னார், திருச்செந்தூர் முருகனே இங்கு கோயில் கொண்டிருக்கிறார் என்று.

அப்போது எனக்கு வயது ஒன்பது. 22 வயதில் எனது கணவருக்கு உத்தியோக இடமாற்றம் கிடைத்து, இந்திய தலங்கள் யாவும் தரிசிக்கும் வாய்ப்புப் பெற்றோம், அப்போது வாரியார் கூறிய திருச்செந்தூர் பெருமானைக் கண்டு கதறி அழுதேன்.எங்கள் இலக்கிய ஆசிரியர் ஐயா வாத்தியார் அவரே கந்தபுராணத்தை அவரது மாணவர்களாகிய எங்களை ஊக்குவித்து பறாளாயில் பாட வைத்தார்.பறாளாயின் மகிமையை எப்படிக் கூறுவொம் முத்தையாவின் மனைவி, கணவருக்கு ஏற்ற மனைவியாக அமைந்து எந்நேரமும் அவருடன் துணையிருப்பா. முருகப்பெருமான் கொடுத்த பரிசாக அவர்களது வாழ்க்கையில் முருகப்பெருமானும் வள்ளிஅம்மனுமாக வாழ்க்கை நடத்தினார்கள்.

முருகப்பெருமான் தன்பக்தன் முத்தையாவிற்கு தன் அருளை அள்ளிவீசி அவரைத் தன் நாமத்தையேஉச்சரிக்க வைத்தார். ஐயா வாத்தியாரின் வழிகாட்டலில் பறாளாயிலும், கொழும்பு கொம்பனிவீதி முருகன் கோயில்,கனடா கந்தசாமி கோயிலிலும் நானும் முத்தையாவும் ஒரேமேடையிலிருந்து கந்தபுராணம் வாசிக்கும் வாய்ப்பைப் பெற்றோம்.அவரின் புண்ணியப்பேறின் பயனாக இலண்டன்,கனடா, சுவிட்சலாந்து ஆகிய நாடுகளுக்குச் சென்று பிள்ளைகளுடன் இருந்தார்.

கனடாவிலிருந்து , மீனாம்பாள் (சக வகுப்புத் தோழி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பறாளையம் பதியில் அளவு கடந்த பக்தி கொண்டவர்.....

யாழ்ப்பாணம் வலிமேற்குப் பகுதியில் ஓர் அழகிய கிராமம் சுழிபுரம் ஆகும். இங்கே நில வளம், நீர் வளம், கடல் வளம், அருள் வளம், கல்வி வளம் யாவும் சிறப்பாகக் காணப்படுகின்றது. இவை யாவற்றையும் விட மூர்த்தி, தலம், தீர்தம் மூன்றும் ஒருங்கே அமையப்பெற்றதும் பாடல் பெற்றதுமான பறாளையம்பதி தலங்கள் இக் கிராமத்தை மேலும் அழபடுத்துகின்றன.

இக் கிராமத்தின் மேற்குப் பகுதியிலே கோவில் கொண்டு அருள் பாலிக்கும் ஐயப்ப சுவாமியின் கண்ணே குகன் குலத்திலே தோன்றியவரே அமரர் கதிரவேலு முத்தையா என்னும் பிரபல வர்த்தகராவர். அமரர் இளமைக் காலம் தொட்டே ஒழுக்க சீலராகவும் பக்திநெறி கொண்டவராகவும் விளங்கினார். பக்தர் குறை தீர்க்கும் பறாளையில் ஈசுர விநாயகர் மீதும் முருகப்பெருமான் மீதும் அளவு கடந்த பக்தி உடையவராகக் காணப்பட்டார். அமரரின் தகப்பனார் முருகப்பெருமானின் அருள் வேண்டி இவரைப் பெற்றமையாலே முத்தையா எனும் முருக நாமத்தை இவருக்குச் சூட்டி மகிழ்ந்தார். தந்தையார் இட்ட பெயருக்கு ஏற்பவே முத்தையாவும் இறக்கும் வரை ஒரு முருக பக்தனாகவே தேவார திருவாசகங்களைப் பாடி பணிந்து வந்தார். ஆலயம் தோறும் பஞ்சபுராணங்களைப் பாடுவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைவார். அமரர் அவர்கள் ஆலய வழிபாட்டில் சிறப்புற்று விளங்கியவர் என்றே கூறலாம். எமது பறாளாயில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமை தோறும் தவறாது காலைப் பூசை வழிபாட்டில் கலந்து கொள்ளுவார். பூசைகள் நிறைவுற்றதும் தனது குடும்பத்தாரின் பெயர்கள் யாவற்றையும் கூறி அர்ச்சனை செய்விப்பதிலும் மன நிறைவடைந்து கொள்ளுவார். இதைவிட மஹோற்சவ காலங்கள், கந்த சஷ்டி காலங்கள் தவறவிடமாட்டார். கந்த புராணம் படிப்பதிலும் விரதம் அனுட்டிப்பதிலும் ஆர்வமுள்ளவராகக் காணப்பட்டார்.

இவை யாவற்றையும் விட அமரரின் இல்வாழ்க்யை எடுத்துக் கொண்டால் நல்ல மனைவி, நன் மக்கள், சிறப்பான மருமக்கள் யாவற்றையும் பெற்று சீரும் சிறப்புடனே வாழ்ந்து வந்தார். தனது சுய முயற்சியாலே வர்த்தகத்தில் சிறந்து விளங்கியதுடன் நிறையப் பணமும் பொருளும் சம்பாதித்துக் கொண்டது மட்டுமன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுழிபுரம் மக்கள் மத்தியில் ஓர் இடத்தையும் பிடித்ததுக் கொண்டார். அமரர் அவர்கள் தன்னாலான தெய்வ கைங்கரியங்களையும் செய்துள்ளார். குறிப்பாக பறாளாய் முருகன் ஆலய தேர்த்திருப்பணி - கும்பாபிஷேகம், ஈசுர விநாயகரின் தேர்த்திருப்பணி இவற்றை விட ஊர்ப்பணி, சமூகப்பணிகள் நிறையவே செய்துள்ளார். அமரர் அவர்கள் மனைவி, மக்கள், பேரப்பிள்ளைகள், அயலவர்கள், சுற்றத்தாருடன் சிறப்பாகவே வாழ்ந்து சமூகத்திலே "முத்தையா" எனும் நாமத்துடன் ஊருக்கே பெருமையைத் தேடித் தந்தவர் என்பதை யாரும் மறந்துவிட முடியாது.

இறுதியாக இவர் சில நாட்கள் நோயினாலே அவஸ்தைப்படுவதை உறவினர்கள் மூலமாக அறிந்ததன் ஊடாக உடன் அவர் வீடு சென்று மகனிடம் விபூதி எடுத்து வரும்படி கூறினேன். அவரும் விபூதி மடலை என்னிடம் ஒப்படைத்தார். அடியேன் ஈசுர விநாயகரைத் தியானம் பண்ணி நீறு கொண்டு பார்வையிட்டேன். அடியேனுக்கு ஈசுர விநாயகர் 3 நாள் என்று வெளிப்படுத்தினார். இவருக்கு இன்னும் 3 நாட்களே உள்ளது. வரும் சங்கட சதுர்த்தி கார்த்திகைத் தினத்திலே விமோசனம் கிடைக்கும் என்று அவரின் குடும்பத்தாருக்கு கூறிவிட்டுச் சென்றுவிட்டேன். ஐயா கூறியவாறு 3 நாளே நடந்துவிட்டது. முருகப்பெருமானின் கார்த்திகை திருவிழா முடிவுற்றதும் செய்தி கேட்டீர்களா? என்று தொலைபேசியில் ஐயாவுக்கு ஒரு செய்தி வந்தது. முருகப்பெருமானை உடனே நினைத்தேன். ஆனால் இச் செய்தியைக் கூறியவரும் முருகன் என்று அழைக்கப்படும் ஒரு அடியவராகையால் மிகவும் ஆச்சரியம் அடைந்தேன்.

பறாளாய் ஈசுர விநாயகன் சங்கட சதுர்த்தியும் முருகப்பெருமானின் கார்த்திகைப் பூசையும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற நேரத்திலே முத்தையா அவர்கள் முருகப் பெருமானது பாதாரவிந்தங்களை அடைந்துவிட்டார். அமரரின் கார்த்திகை விரதத்தின் பக்தியை எப்படிக் கூறுவேன். அமரர் பறாளாய் முருகன் திருப்பாதங்களில் என்றும் இருப்பார். என்பதில் ஐயமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரரின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்பகலா மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், மருமக்கள் சுற்றத்தார் அனைவருக்கும் ஈசுர விநாயகர் ஆறுதல் அளிப்பாராக

ஓம் சாந்தி ! சாந்தி! சாந்தி!

ஈசுர விநாயகர்
தேவஸ்தானம்
பறாளாய்,
சுழிபுரம்.
21.10.2020

சோழியூரான் - பிறைசூடிக்குரு
(ஆன்மீகவாதியும் சந்ததிப் பூசகரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆழ்ந்த அனுதாபங்கள்...

சிவதொண்டர் கதிரவேலு முத்தையா அவர்களின் மறைவு வைச உலகிற்கு ஒரு பேரிழப்பாகும். சிறந்த பக்திமான் ஆகிய முத்தையா அவர்களை வெள்ளிக்கிழமைகளில் பறாளாய் முருகன் ஆலயத்திலும், ஞாயிற்றுக் கிழமைகளில் பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலயத்திலும் காணலாம். பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆவணி மஹோற்சவம் முடிந்துவரும் 1008 சங்காபிஷேகத்தை ஆண்டு தோறும் சிறப்பாகச் செய்யும் ஒரு உபயகாரரும் ஆவார். அது மட்டுமின்றி சுழிபுரத்தில் இருக்கும் பல கோவில்களிலும் உபயகாரராக இருந்து வந்துள்ளார். தினமும் ஆலயங்களில் துதி செய்கின்ற சிறந்த சிவபக்தன் சைவப் பண்பாளர்.

திருமுறைகள் ஓதுவதிலும், திவ்ய பிரபந்தம் போன்றவை ஓதவதில் அவருக்கு நிகர் அவரே. அன்னாரின் இழப்பு அன்னாரின் குடும்பத்திற்கு மட்டுமல்ல அவரை சார்ந்தவர்களுக்கும் பேரிழப்பாகும். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் மனைவி, பிள்ளைகளுக்கு அழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து அன்னாரின் ஆத்மா நாரயணன் திருவடிகளை அடைய பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

ஸ்ரீ.க.ச. சோமஸ்கந்தக் குருக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆத்மா சாந்தியடையட்டும்....

பழகுவதற்கு இனியவராக
என்றும் புன்னுறுவல் பூத்தவராக
அறப்பணிகளில் தன்னை ஈடுபடுத்தி
ஆன்மீகசீலராக
சுழிபுரம் மேற்கு ஐயனாரின் அதி தீவிர பக்தராக
எம்மோடு சபரிமலை ஸ்ரீ தர்மசாஸ்தாவிடம்
பெருவழி யாத்திரை செய்து
எம் அனைத்து யாத்திரைக் குழுவினரோடு மாத்திரமல்ல
கொள்ளுப்பிட்டி ஸ்ரீ தேவி கருமாரியம்மன்
ஐயப்பசுவாமி திருக்கோவில்
திருக்கூட்டத்தோடு
மிக அன்னியோன்யமாகப் பழகிய
அமரரின் ஆத்மா
எல்லாம் வல்ல பரம்பொருளின்
பாதாரவிந்தங்களை அடைந்து
சாயுச்சிய நிலையை அடையவும்
அன்னாரின் குடும்பத்தவர்க்கும் உறவினர்க்கும்
எல்லாம் வல்ல ஐயப்பன்
மனதைரியத்தையும் சாந்தியையும் வழங்க
மனதாரப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

தங்க முருகன் மூளாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி கூறுகின்றோம்

நம் குடும்பம் நலம்பெறவே
நன்குணர்ந்தே நன்னிய எம்
நல்லாளன் தன் பிரிவால்
நலிந்து துவண்டே நாம்
நாதியற்று இருந்த வேளை
நலம் பெறவே நல்வார்த்தை
நயம்படவே உரைத்திட்டோர்
நற்கிரியை பல செய்ய
நம்முடன் தோள் கொடுத்தோர்
நாடு கடந்து நின்றும்
நலவுரைகள் பல சொன்னோர்
நம் வீட்டில் நாட் பலமே
நலம் வேண்டி உடனிருந்தோர்
நல் மனதோர் அனைவருக்கும்
நன்றிகள் பல கோடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்ச

மாதவி

↓

கந்தர்

↓

பொன்னர் - சின்னவி - கதிரவேலு - முருகர் - ஆறுமுகம் - சிவகாமி

முருகேசு + சின்னம்மா

↓

கிருட்டினர் - மாணிக்கம் - சிற்றம்பலம் -

மாரிமுத்து - வேலுப்

கதிரவேலு + மாணிக்கம்

↓

இளையதம்பி + சிவக்கொழுந்து - சிதம்பரப்பிள்ளை + பார்வதி - முத்தையா

சந்திரமல + தேவகன்

**முத்தையா + யோ**

↓

கலாரஞ்சிதம் + செல்வரத்தினம் - கலைச்செல்வி + விஜயரத்தினம் - சாந்தினி + அருணகிரிநாதர் - நந்தினி + ஞானரத்தி

கலாரஞ்சிதம் + செல்வரத்தினம் ↓

செந்தூரன் + அமிர்தவர்ஷினி ↓ சேயோன், ஸ்கந்தா

ஈஸ்வரன்

கௌரி + தாஸ்குமார்

கலைச்செல்வி + விஜயரத்தினம் ↓ மயூரன், விதுஷன்

சாந்தினி + அருணகிரிநாதர் ↓ காயத்திரி, அரவிந், நிலாம்பரி

நந்தினி + ஞானரத்தி ↓ சங்கரி, சயந்தன், சிவானி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவழி

நாரணி கந்தப்பு

- அன்னப்பிள்ளை

ுப்பிள்ளை

வேலுப்பிள்ளை + ஆச்சிமுத்து சின்னத்தம்பி + சின்னப்பிள்ளை

வைரமுத்து இராசம்மா - மகேஸ்வரி

வைரமுத்து + மகேஸ்வரி

லர் - யோகசுந்தரம் - ஸ்கந்தமலர் - இராசலட்சுமி - சைலசுதா - சைலகாந்தன்

+ + +

கன் குமாரசாமி சிவராசா சற்குணநாதன்

## யாகசுந்தரம்

னி - ஞானவேல் - ஜெயந்தினி - வேல்விழி - கதிர்வேல்

+ + + +

ந்தினம் கோசலா கிருபாகரன் சுரேஸ் பாமினி


ரி தரணியா தனுஷன் சஞ்ஜித் நயனி

ன் அக்ஷயன் அபிஷன் சர்மிதா

னி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுழிபுரம் மேற்கு ஐயனார் ஆலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org